பொது நூலகம்
கோண்டாவில்
...வலி. பிரதேச சபை

விலை: யாழ். ரூபா 30, வன்னி ரூபா 20

பக்கங்கள் 52

# உதயன்

சுடர் 30 கதிர் 361 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 06, ஞாயிற்றுக்கிழமை 22.11.2015

மகாராஜா பொதிகள் சேவை
அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்ப இன்றே நாடுங்கள்.
லண்டன், சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
01 Kg கட்டணம் 449/-,
கனடா 1Kg கட்டணம் 549/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200

# இன்று யாழ். வருகிறார் சமந்தா பவர்

யாழ்ப்பாணம், நவ. 22
ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், யாழ்ப்பாணத்திற்கு இன்றையதினம் வருகை தரவுள்ளார். பல்வேறு தரப்பினரையும் தனது யாழ்ப்பாணப் பயணத்தின் போது அவர் சந்தித்துப் பேசவுள்ளார். சமந்தா பவர் பங்கேற்கவுள்ள நிகழ்வுகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக, நேற்று மாலை சமந்தா பவர் வருகை தந்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை அவர் நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
இந்த நிலையில் இன்று காலை, விசேட விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடையும் சமந்தா பவர், அங்கிருந்து யாழ்.நகருக்கு வரவுள்ளார். முதலில் வடக்கு மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் காலை 9 மணிக்குச் சந்தித்துப் பேசவுள்ளார். அந்தச் சந்திப்பின் பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்குச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
இதன் பின்னர் முற்பகல் 11 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரிக்குச் செல்லும் அவர், அங்கு அமெரிக்க நிதியுதவியில் அமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து எல்லே ஆட்டம் ஒன்றையும் அவர் தொடக்கி வைக்கவுள்ளார்.
இந்த நிகழ்வுகளின் பின்னர் நண்பகல் 12 மணிக்கு, மதிய போசனத்துடன் பிரத்தியேக இடம் ஒன்றில், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் – பக்.20



## தொண்டையில் வெங்காயம் சிக்கி குழந்தை சாவு

***காரைநகரில் பரிதாபச் சம்பவம்***

யாழ்ப்பாணம், நவ. 22
கையில் அகப்பட்ட முழு வெங்காயத்தை வாய்க்குள் வைத்த போது அது தொண்டைக்குள் சென்றதால் ஒரு வயதுக் குழந்தை மூச்சுத் திணறிப் பரிதாபகரமாக உயிரிழந்தது.
குழந்தையின் தொண்டைக்குள் வெங்காயம் இருந்தபோது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் அங்கு மருத்துவர் பக்.20

# எட்டு புலம்பெயர் அமைப்புகள் மீது நீங்கியது தடை

## 269 தனிநபர்களையும் தடைப் பட்டியலில் இருந்து விடுவித்துள்ளது மைத்திரி அரசு

Global Tamil Forum
உலகத் தமிழர் பேரவை
BRITISH TAMILS FORUM
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

யாழ்ப்பாணம், நவம்பர் 22
பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை ஆகியன உள்ளிட்ட எட்டு அமைப்புக்கள் மற்றும் 269 தனிநபர்கள் மீதான தடைப் பட்டியலை நீக்கிப் புதிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
மகிந்த அரசின் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் என்று பட்டியலிடப்பட்ட 16 அமைப்புக்கள், 424 தனிநபர்கள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது. அதில் எட்டு அமைப்புக்கள் மற்றும் 269 தனி நபர்கள் மீதான தடையை, தற்போதைய அரசு நீக்கியுள்ளது.
2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சர்வதேச விசாரணை கோரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பின்னர், அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவினால், புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது. குறித்த அமைப்புக் பக்.20

## திருமலை இரகசிய முகாமில் கருணா குழுவினரே இருந்தனர்

அங்கு வதை முகாம்கள் இல்லை என்கிறார் முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னகொட



யாழ்ப்பாணம், நவ. 22
கருணா குழுவினரே, படையினரால் பயன்படுத்தப்படாத திருகோணமலை முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்று முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.
திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை முகாமின் கீழ் இரகசிய வதை முகாம் இருந்தாகவும், அதனைத் தாம் நேரில் சென்று பார்வையிட்டதாகவும் ஐ.நா. செயற்குழுவினர் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, ஐ.நாவின் குற்றச்சாட்டை நிராக பக்.20

## முன்னாள் போராளி ஒருவர் மன்னாரில் சடலமாக மீட்பு

மன்னார், நவ.22
மன்னார் , மூன்றாம்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி ஒருவர் நேற்றுச் சனிக்கிழமை காலை மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் அவருடைய வீட்டு முற்றத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலமாக மீட்கப்பட்டவர் புனர்வாழ்வு பக்.20

## பாதுகாப்பற்ற கடவையில் காரைப் பந்தாடியது ரயில்

பொறியியலாளர் சாவு
மேலும் மூவர் படுகாயம்



யாழ்ப்பாணம், நவ. 22
பாதுகாப்பற்ற ரயில் கடவையால் கடந்து சென்ற சொகுசுக் காரைக் கடுகதி ரயில் மோதிப் பந்தாடி இழுத்துச் சென்றதால் காரில் பயணித்த பொறியியலாளர் சம்பவ இடத் பக்.20

## உறவுகளுக்கு அஞ்சலி செய்ய அனுமதிக்கவேண்டும் அரசு

நாடாளுமன்றில் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, நவ.22
தமிழ் மக்கள் இந்த வாரம் தமது உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வுள்ளதால் அதற்கான அனுமதியை அரசு வழங்கவேண்டும் என்று நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப் பக்.20

## தேசிய அரசின் பட்ஜெட்; கூட்டமைப்பு வரவேற்பு

கொழும்பு, நவ.22
தேசிய அரசின் வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்ற பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்பு மற்றும் நிவாரணங்கள் மக்களைச் சென் பக்.20

SMEPLUS
speedloan
பிரதிபலன்களை பெறத்தக்கவர்கள்
உற்பத்தியாளர்களான உங்களை கரை சேர்க்கும் வழி
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 5 411 411
தேவைக்கு ஏற்ப அதிகூடிய கடன் தொகை
ஆகக் குறைந்த ஆவணங்களுடனான துரித கடன் சேவை
வெற்றிகரமான வாழ்க்கைப் பயணத்திற்கான ஆலோசனை வழிகாட்டல்கள்.
கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏதுவானது.
SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

# யாழ். மாநகர சபை ஊழியர்களின் பதவி உயர்வுச் சிக்கலுக்குத் தீர்வு

## விரைவில் காணப்படும் என்று வடக்கு முதமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ். மாநகர சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பதவி உயர்வில் காணப்படும் சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும். இது தொடர்பாக மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவுடன் கலந்துரையாடப்படவுள்ளது என வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையில் நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமைகிளைத் தலைவர்கள் மற்றும் தொழிற் சங்க ஊழியர்களுடனான சந்திப்பிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

உள்ளூராட்சி மன்றங்களின் அமைச்சர் என்ற வகையில் யாழ். மாநகர சபைக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் வருகை தந்திருந்தார். இதன்போது மாநகர சபையின் கிளைத் தலைவர்கள் மற்றும் தொழிற் சங்கத்தின் ஊழியர்களையும் சந்தித்தார். அத்துடன் மாநகர சப்பையில் காணப்படும் வளப் பற்றாக்குறைகள் தொடர்பிலும் ஆளணிப் பற்றாக் குறைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். இரண்டு மணிநேரமாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாம் பிரதானமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இதன்படி நீர் வடிகாலமைப்பில் காணப்படும் சிக்கலான நடைமுறைகள், யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளில் தரம் பிரிக்க முடியாத வகையில் கலந்துள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றை கையாளுவதில் காணப்படும் சிக்கலான நடைமுறைகள், மாநகர சபைக்கான நிரந்தரக் கட்டட வசதிகள் இல்லாத நிலைமைகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உள்ளகப் பதவி உயர்வு தொடர்பாக தொழிற் சங்கத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதாவது ஆரம்ப காலத்தில் சிறுமட்டத் தொழிலாளர்களாக மாநகர சபையில் உள்நுழைந்த ஊழியர்கள் பின்னாளில் தொடர்ச்சியான அனுபவங்களைப் பெற்ற போதும். தற்காலத்தில் தொழில் தகைமைகளுக்கான தகுதியீனங்கள் போதாத நிலையில் ஆரம்ப மட்டத்திலேயே பதவி வகிக்கும் நிலைகள் காணப்படுகின்றன. அது தொடர் பில் சீரான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டிய அவசியம் பற்றியும் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் மாநகர சபையின் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்தி செய்வதற்கான தீர்வை எட்டுவது தொடர்பாகவும், கழிவகற்றலில் காணப்படும் குறைகளைத் தீர்ப்பதற்கான நிதி முதலீட்டைப் பெறுவதற்கான ஒரு முயற்சியையும் முதலமைச்சரிடம் கோரியுள்ளோம். இந்த விடயங்கள் தொடர்பாக சீர் செய்யக்கூடிய நடைமுறைகள் மேற் கொள்ளப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்தார் – என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (ற–ரி5)

# பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு செலுத்துமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 22
பெண் ஒருவரைத் தாக்கி பாலியல் தொந்தரவு செய்த சகோதரர்கள் இருவருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதமும் 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்த சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது யாழ். நீதிமன்று. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 50 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்கவேண்டும்என்றும்நீதிமன்று உத்தரவில் தெரி வித்துள்ளது.

குருநகர் பூங்கா வீதியில் கடந்த ஜுலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. குறித்த பெண்ணைச் சகோதரர்கள் இருவர் தாக்கியுள்ளனர் என்றும் பாலியல் முறைகேட்டில் ஈடுபட்டனர் என்றும் குறித்த பெண் யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதனடிப்படையில் குறித்த இருவருக்கும் எதிராக பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றில் வழக்குவிசாரணைக்குவந்தபோது குறித்த இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்கு நீதிமன்று தீர்ப்பு வழங்கியது.

அதன்படி குறித்த இருவருக்கும் 3 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்ததுடன் தலா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் 7 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது. தவிர நட்ட ஈடாக தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 50 ஆயிரம் ரூபா பெண்ணுக்குச் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டதுடன் இருவருக்கும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்தது நீதிமன்று.

இவ்வாறு தண்டனைத் தீர்ப்பு வாசிக்கப்பட்டபோது அவர்களில் மூத்த சகோதரர் எதிரிக் கூண்டில் நின்றவாறு மயங்கி விழுந்து விட்டார். அவரைச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தூக்கிச் சென்று முதலுதவி அளித்தனர்.

பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களும் பாலியல் முறைகேடுகளும் அதிகரித்து வரும் நிலையில், பாலியல் முறைகேடு புரிந்த குற்றத்துக்காக சில நாள் களுக்கு முன்னர் நவாலியைச் சேர்ந்த 3 பேருக்கும் இதே போன்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ற–4,103)

# அரச சாராயம் விற்றவருக்கு ஒரு வருட சிறை

யாழ்ப்பாணம், நவ. 20
அரச சாராயத்தை காசுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் விளக்கத்தின் முடிவில் குற்றவாளியாகக் காணப்பட்டதால் அவரை 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முப்பதாம் திகதி யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் தலைமையில் சிவிலுடையில் சென்ற பொலிஸார் பணத்துக்கு மதுபானத்தைக் கேட்டுப் பெற்ற பின்னர் அதனை விற்பனை செய்த குறித்த குடும்பஸ்தரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவருக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட போது அவர் சுற்றவாளி என தெரி வித்ததையடுத்து வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இருதரப்பு சாட்சியங்களும் நீதிமன்றில் நெறிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வழக்கு தீர்ப்புக்கு நியமிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை வழக்கு தீர்ப்புக்காக அழைக்கப்பட்டபோது நீதிவான் பெ. சிவகுமார் வழக்கு தொடருநரான பொலிஸார் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபித்துள்ளனர். எனவே அவரை குற்றவாளியாக் கண்டு குறித்த குற்றச்சாட்டுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப் படுகிறது எனத் தீர்ப்பளித்தார். (ற–103)

# நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி கல்லுண்டாயில் திரவக் கழிவு கலப்பு

## சம்பந்தப்பட்ட பணியாளர்கள் இடைநீக்கம் என யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.22
ஒப்பந்தத்தை மீறி கல்லுண்டாய் கடலில் கழிவு நீரைக் கலந்த ஊழியர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்கள் மீதான விசாரணைகள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. – இவ்வாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

கல்லுண்டாய் வெளி நீர் நிலைகளில் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி கடந்த 17ஆம் திகதி கழிவுநீர் கலக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் குறித்த பகுதியில் கழிவு நீர் அகற்றும் வாகனத்தின் சக்கரங்கள் புதையுண்டன என்றும் மேற்கொண்டு வாகனத்தைச் செலுத்த முடியாத நிலையில் வாகனம் பாலத்தில் குடைசாயும் நிலை ஏற்பட்டது. அதனால் கழிவு நீரை அருகிலிருந்த நீர் நிலையில் கலந்தனர் என்று குறிப்பிட்டுள்ளனர். எனினும் இந்தவிடயம் தொடர்பாக எமக்கு முன்னறிவித்தல்கள் இன்றியும், மாற்று ஏற்பாடுகளுக்கான கோரிக்கையைச் செயற்படுத்தாமலும் கழிவகற்றல் தொடர்பாக செய்துகொண்ட ஒப்பந்த நடைமுறையை அவர்கள் மீறியுள்ளனர். எனவே இவர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான விசாரணை நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.– என்றார்.

சேகரிக்கப்படும் திரவக் கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படுகின்றன. இந்த நடைமுறையால் குறித்த பிரதேசத்தில் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்புக்கள் அதிகரிக்கின்றன என்று மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பில் கடந்த மே மாதம் 10 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பில், சுற்று சூழல் அதிகார சபையின் நியமத்திற்கமைய கழிவு கொட்டப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்தத் தீர்ப்பை மீறி கடந்த 17ஆம் திகதி யாழ் மாநகர சபை வாகனம் நீர் நிலையில் கழிவு நீரைக் கலந்துள்ளது. (ற–ரி5)

# புரியாத விவரத் துண்டுடன் வெண்ணெய்க்கட்டி விற்பனை

## அபராதம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம்

சாவகச்சேரி, நவ.22
இலங்கை முழுவதும் ஒரு மொழியிலான சுட்டுத் துண்டுடன் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் வெண்ணெய்க் கட்டிகளை மீளப் பெற்று உணவு அதிகாரசபையின் ஆலோசனைப் பிரகாரம் இலங்கை மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய இரு மொழிகளில் விவரங்கள் குறிப்பிடப்பட்டு விற்பனைசெய்யவேண்டும்என்று இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் பிரதிநிதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொடிகாமம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் கடந்த ஓகஸ்ட் மாதம் கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களைப் பரிசோதனை செய்தபோது கடையொன்றில் பழுதடைந்த வெண்ணெய்க் கட்டிகள் காணப்பட்டதை அடுத்து அங்கிருந்த இறக்குமதி செய்யப் பட்ட 7 வெண்ணெய்க் கட்டிகளை கைப்பற்றினார்.

பொதி செய்யப்பட்ட குறித்த வெண்ணெய்க் கட்டிப் பொதியில் பொதுப் பெயர் இலங்கையில் பாவனையில் உள்ள இரு மொழிகளில் இல்லாமல் தனியொரு மொழி குறிப்பிட்டிருந்ததாலும், பொதியில் குறிப்பிட்டிருந்த பொதுப் பெயர் வர்த்தகப் பெயரை விட மூன்றிலொரு பங்கு குறைவாக இருந்ததாலும் இதுதொடர்பாகவெண்ணெய்க் கட்டிகளை இறக்குமதி செய்யும் நிறுவனம், யாழ்.மாவட்ட விநியோகத்தர், யாழ் மாவட்ட முகவர், குறித்தவர்த்தகர் ஆகியோருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் இலங்கையில் பயன்படுத்தப்படும் இரு மொழிகளில் சுட்டுத் துண்டு விவரம் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதால் உடனடியாக இலங்கை பூராவும் நிறுவனத்தால் விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ள உருது மொழியுடன் கூடிய வெண்ணெய்க் கட்டிகளை மீளப் பெற்று உணவு அதிகார சபையின் அனுமதியுடன் உரிய சுட்டுத்துண்டு பொறித்து விற்பனைக்கு விடவேண்டும் என்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் இறக்குமதி செய்யப்பட்ட வெண்ணெய்க்கட்டிப் பொதிகளை உரிய அலுவலர்கள் மூலம் கண்காணிக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் அறிவித்தல்கள் வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

அத்தடன் நிறுவனப் பிரதிநிதி, யாழ். மாவட்ட விநியோகத்தர், யாழ். மாவட்ட முகவர் ஆகியோருக்கு இரு குற்றங்களுக்குமாக தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் வர்த்தகருக்கு 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

பல வருடங்களாக குறித்த வெண்ணெய்க் கட்டிகள் இலங்கை பூராகவும் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் கொடிகாமம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் மட்டும் இலங்கைஉணவுஅதிகாரசபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம்அதனைக்கண்டுபிடித்தமைக்காகநீதிமன்றல்பாராட்டப்பட்டார்என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

# நகை விற்பனை நிலையத்தில் தீ

வவுனியா தர்மலிங்கம் வீதியிலிருக்கும் தங்க நகை விற்பனை நிலையத்தில் நேற்று மதியம் ஏற்பட்ட தீ விபத்தால் இரண்டாம் மாடியிலுள்ள நகை செய்யும் இடம் முற்றாக சேதமைந்துள்ளது. எனி னும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. நேற்று வழமைபோல் தமது வேலைகளை செய்து கொண்டிருந்த சமயம் திடீரென மின் ஒழுக்கு ஏற்பட்டு கூரையில் தீ பரவி வயர் வழியாக எரிந்து கொண்டிருந்த சமயம் தொழிலாளர்கள் தண் ணீரை ஊற்றிதீ பரவலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்என்றுகூறப்படுகின்றது. வவுனியா பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ற)

உதயன்

# யாழில் நெற்செய்கை 50 வீதமளவில் சேதம்

## விவசாயத் திணைக்கள மதிப்பீடுகள் கூறுகின்றன

அச்சுவேலி, நவ.22

யாழ். மாவட்டத்தில் நெற் பயிர்ச் செய்கை 50 வீதத்துக்கு குறையாத அளவு சேதமடைந்துள்ளது. வலி.மேற்கு, வலி.தென் மேற்கு, வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் பெருமளவில் நெற் பயிர்கள் சேதத்துக்கு உள்ளாகி உள்ளன. - இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்ட பயிர்ச் செய்கையில் மழைவெள்ளச் சேதம் தொடர்பாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்ததாவது-

யாழ்.மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் விவசாயப் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள் ளன. கிழங்கு வகைப் பயிர் இனங்கள், மரக்கறிப் பயிர் வகைகள், சிறுதானியப் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. நெற் பயிர்களும் பெருமளவில் சேதமடைந்துள் ளன. விவசாயத்திணைக் களத்தின் முதற்கட்ட சேத மதிப்பீட்டின்படி சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் நெற்பயிர்கள் 50 வீதத்துக்குக் குறையாத அளவில் சேதமடைந்துள்ளன.

மழை பிந்தியதால் நெல் விதைப்பு காலம் தாழ்த்தி மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் நவம்பர் முற்பகுதியிலேயே மழைவெள்ள நிலை ஏற்பட்டது. அதனால் நெற்பயிரை மூடி வெள் ளம்தேங்கி நிற்பதால் அவை அழுகிச் சேதமடைந்துள்ளன. தீவகம், வட மராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் ஒப்பீட்டளவில் சேதம் குறைவாகவே உள்ளன. கிழங்கு வகைப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், சிறுதானியப் பயிர்கள் என்பன மழை வெள்ளத்தால் பெருமளவில் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் விவசாயிகள் ஆர்வமேலீட்டால் தாழ்நிலங்களில் கிழங்கு வகை மற்றும் மரக்கறிப் பயிர் இனங்களை நடுகை செய்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

பயிர்ச் செய்கை நிலங்களில் அளவுக்கு அதிகமாக வெள்ளம் தேங்கி நிற்பதற்கு வெள்ள வாய்க்கால்கள் உரியமுறையில் தூர்வாரி துப்புரவு செய்யப்படாமல் இருப்பதும், மதகுகள் பல வெள்ளம் பாய்வதற்கு உரிய முறையில் இல்லாமல் மூடப்பட்டிருப்பதும் காரணமாக உள்ளது - என்றார். (ற-11)

### கடலில் குளித்த 15 வயதுச் சிறுவன் உயிரிழப்பு



புத்தளம், நவ.22

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடப்புப் பகுதியிலுள்ள முகத்துவாரத்தில் சக நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவன் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் நேற்று கடலின் நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவனை மீட்கும் வகையில் மீனவர்கள், பொதுமக்கள் மற்றும் கடற்படையின் சுழியோடிகள் ஆகியோர் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் அவர்களது தேடுதல் நடவடிக்கை தோல்வியடைந்த நிலையில், குறித்த சிறுவனின் சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

இந்தநிலையில், சிறுவனின் சடலம் நீதிவான் விசாரணைக்காக முகத்துவாரத்துக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ற)

### சாவகச்சேரியில் எறிகணை மீட்பு

சாவகச்சேரி நவ.22

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள காணியொன்றில் வெடிக்காத நிலையில் மோட்டார் எறிகணையொன்றுநேற்றுசாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டது.

நகரிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் டச்சு வீதியில் சேதமடைந்த கட்டம் உள்ள காணியொன்று நேற்று முன்தினம் வாகனம் மூலம் துப்புரவு செய்யப் பட்டபோது மண்ணுக்குள் புதைந்திருந்த நிலையில் காணப்பட்ட எறிகணை கண்டுபிடிக்கப்பட் டது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் நேற்றுக் காலை அதனை மீட்டுச் சென்றுள்ளனர். (ற-9)

### மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை கட்டடங்களுக்குள் வெள்ளம்

சாவகச்சேரி நவ.22

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலைக் கட்டடங்களுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் வகுப்புகள் அங்குள்ள மோகனதாஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் பெய்த பெரு மழையால் பாடசாலையின் வகுப்பறைகள், அதிபர் அறை, சமையலறை உட்பட அனைத்துக் கட்டடங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

வகுப்புக்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை நடைபெறுவதால் அருகில் உள்ள மோகனதாஸ் சனசமூக நிலையக் கட்டடத்தில் வகுப்புகள் நடைபெறுகின்றன என்று பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (ற-9)

### பயிரழிவுகள் தொடர்பில் விவரங்களில்லை

#### கிளி. கமநலசேவை பிராந்திய ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.22

கால போக நெற் செய்கையின் அழிவுகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளிடம் இருந்து எந்தவிதமான தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை என்று கிளிநொச்சி கமநலசேவை பிராந்திய ஆணையாளர் ஈ.தயாரூபன் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக வடக்கில் கால போக நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. வன்னி மாவட்டத்திலும் கால போகச் செய்கை அழிவடைந்துள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அது குறித்துக் கேட்டபோதே பிராந்திய ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வயல்களில் தேங்கி உள்ள வெள்ளம் முழுமையாக இன்னமும் வழிந்தோடவில்லை. அதனால் விவசாயிகள் பயிர் அழிவுகளை முழுமையாகக் கணிப்பிட முடியாது உள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கால போகப் பயிர்ச் செய்கையின் அழிவு தொடர்பானமுழுமையானவிவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. தற்போது கால போகத்துக்கான இரண்டாம் கட்ட பசளை விநியோகமும் நடைபெறுகின்றது - என்றும் அவர் தெரிவித்தார். (ற-21,ரி3)



கடந்த சில நாள்களாக பெய்த கடும் மழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்து காணப்பட்ட முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் நேற்றுமுன்தினம் சீர் செய்யப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்கள் குறித்த பாலத்தை திருத்தும் பணியில் ஈடுபட்டனர். குறித்த பாலம் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது. முல்லைத்தீவிலிருந்து பரந்தன் ஊடாக கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் வட்டுவாகல் பாலத்தின் ஊடாகவே பயணம் செய்கின்றனர். அதனால் குறித்த பாலத்தை அகற்றி முற்றுமுழுதாகப் புனரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-433)

### முஸ்லிம் மக்களுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்து வதற்கான நடமாடும் சேவை தொடர்பாகவும் முன்னெடுக்கப்படவுள்ள மீள்குடியேற்றத்திட்டங்கள், நடைமுறைகள் தொடர்பாகவும் முஸ்லிம் சமூக ஆர்வலர்களுடனான கலந்துரையாடலை அரச அதிபர் நாளை திங்கட்கிழமை ஏற்பாடு செய்துள்ளார் என்று யாழ், கிளிநொச்சி மாவட்ட மத்திய நிலைய மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி.பி.ஏ.எஸ். சுபியான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் -

இந்த மாதம் 19,21ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட நடமாடும் சேவை சீரற்ற கால நிலை காரணமாக நடைபெறவில்லை. இதனை மீள நடத்துவது தொடர்பாகவும்,முன்னெடுக்கப்படவுள்ள மீள்குடியேற்றத் திட்டங்கள், நடைமுறைகள் தொடர்பாகவுமான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் அரச அதிபருடன் நடைபெறவுள்ளது. இந்தநடமாடும்சேவையை மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ற-ரி6)

### பொருத்தமான காணி இல்லாததால் கைவிடப்பட்டது வீடமைப்புத் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் பொருத்தமான இடத்தில் அரச காணிகள் இல்லாததால் தலா இரண்டரை லட்சம் ரூபா செலவில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அமைக்கப்படவிருந்த 250 வீடுகளுக்கான திட்டம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது. இதனால் வீட்டு வசதியின்றி அல்லல்படும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 250 குடும்பங்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளன.

வீட்டு வசதியின்றி உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் நன்மை கருதி அவர்களுக்கு நிரந்தர வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபை தேசிய ரீதியாக மாவட்டங்கள் தோறும் கிராம மட்டத்திலுள்ள அரச காணி களில் ஒவ்வொன்றும் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

அதன்படி யாழ்.மாவட்டத்தில் 250 வீடுகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபை அதற்குரிய அரச காணிகளையும் பயனாளி களையும் கிராம மட்டத்தில் தெரிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தது.

இந்த அறிவுறுத்தலுக்கமைய யாழ். மாவட்டத்தில் வீடுகளை அமைப்புதற்கு அரச காணிகள் கிடைக்காததால் இதுபற்றி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அறி விக்கப்பட்டது. அதையடுத்து யாழ். மாவட்டத்துக்கான கிராமிய வீட்டுத்திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் வீட்டுத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவிருந்த 250 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் ஏமாற்றத்துக்கு உள்ளானார்கள். (ற-115)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475,
021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஓரவஞ்சகம் காட்டுகிறது அரசின் வரவு- செலவுத் திட்டம்

இந்த நாடு, மிகப்பெரிய- அதிகவலு மிக்க - பொருளாதார நெருக்கடிக்குப் பலியாகி உள்ளது. அதன் காரணமாக, மக்கள் குறைந்த வருமானத்தையே பெறும் துர்லபமும் வேலை வாய்ப்பற்ற பாதக நிலையும் மேலும் அதிகரிக்கலாம்.

இது எமது அனுமானம் அன்று. வரவு -செலவுத் திட்டத்தின் நாயகரான நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆழ்ந்து உணர்ந்த அறிவிப்பு.

அத்தோடு, முந்திய அரசின் பல செயற்பாடுகளால் நாடு மிகப்பெரிய வெளிநாட்டுக் கடனுக்குள் சிக்கி உள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டபோதிலும் அவை கேள்விப்பத்திர நடைமுறைகளை முற்றாக மீறியே முன்னெடுக்கப்பட்டன. அவை மட்டுமன்றி, வெளிப்படைத் தன்மை யும் மிகப் பெரிய அளவில் தேய்ந்து போனது.

வெளிநாட்டு உதவிகளைப் பெரிய அளவில் இழந்ததால் எங்கள் நாடு மிகமிகப் பெரிய அளவில் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது. அது மிக வலுமிக்க பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது. அந்த நிலை தொடர்ந்திருந்தால் நாடும் மக்களும் நட்டாற்றில் முற்றாக மூழ்கும் நிலை தோன்றியிருக்கும்.

ஆயினும், எமது இன்றைய அரசு அனைத்துலக அரசுகளிடம் இரந்து சாதகமான பதில்களைப் பெற்றுள்ளது - என்றவாறு தமது வரவு -செலவுத் திட்டத்தை, நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றியவேளை நிதி அமைச்சர் கருத்து வெளிப்படுத்தி உள்ளார்.

அது ஒருபுறம் இருக்க, மக்கள் மீது வரிச் சுமைகளை ஏற்றும் தன்மை கொண்ட வரவு- செலவுத் திட்டமே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இப்போதைய அரசினால், அதன் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மக்கள் அனைவரையும் தளம்பல் நிலைக்குள் இந்த அரசின் வரவு-செலவுத் திட்டம் தள்ளிவீழ்த்தி உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டி இருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில், 740 பில்லியன் ரூபா துண்டு விழுகிறது. அத்தியாவசியப் பாவனைப் பொருள் பதினொன்றின் விலைகள் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதிலும், மக்களின் (அன்றாட) வாழ்க்கை நிலையில் அது பெரிதாக மாற்றத்தைக் கொண்டு வரப் போவதில்லை

குழந்தைகளுக்கான பால்மா, பால்மாவைக்கெற், உருளைக்கிழங்கு, பெரிய வெங்கரயம், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், மண்எண்ணெய் (பத்து ரூபாவால் மட்டும்), சமையல் எரிவாயு ஆகிய உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகள் மிகச் சுமாராக குறைக்கப்பட்டிருக்கின்றன. இது ஓரளவு வரவேற்கத்தக்கதொன்றே.

ஆனால், போரினால் பாதிப்புற்ற மக்களுக்குரிய நிவாரணங்கள் குறித்து ஒரு சொல் தானும், நல்லாட்சி அரசின் வரவு- செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவே இல்லை.

ஒட்டு மொத்தத்தில், போரினால் பாதிப்புற்ற மக்களுக்கென நிவாரணங்கள் எவை குறித்தும் வரவு- செலவுத் திட்ட உரையில் ஒரு சொல் தானும் இல்லை!

தென்னிலங்கை மக்களுக்கென பல நலன்கள் சார் அறிவிப்புக்கள் வரவு - செலவுத் திட்டத்தில் இருந்தபோதிலும், போரினால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்கு மக்களுக்கான மறுவாழ்வுக்கு உரிய அறிவிப்புகள் தானும் வெளிப்படுத்தப் படவில்லை.

வெறுமனே, அபிவிருத்தி என்ற அடைமொழியைப் பதித்து, முலாம் பூசப்பட்ட, தறுக் கணிக்கப்பட்ட ஒன்றாக நல்லாட்சி அரசின் முதலாவது வரவு- செலவுத் திட்டம் பெரும் ஓரவஞ்சகம் காட்டி நிற்கிறது.....

# பிரிவினைவாத வரைவை தயாரிக்கின்றார் சம்பந்தன்

## நாமல் எம்.பியின் குற்றச்சாட்டு இது



கொழும்பு, நவ.22
நாட்டில் பிரிவினைவாதிகள் தோன்றுவதற்கான வழி வகைகளை அரசு ஏற்படுத்தி வருவதாகவும், அதற்குத் தேவையான வரைவுத் திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் முன்னெடுத்து வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.


ஹுங்கம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே, நாமல் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக அறிவித்த அரசு மக்களின் வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளதாகவும், 100 மீற்றர் தூரத்துக்குக்கூட வீதியொன்றைக் காப்பெற் செய்ய இந்த அரசால் முடியவில்லையெனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

மாறாக நாட்டில் பெரியளவில் கொள்ளைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களே அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அவர், அவன் கார்ட் சம்பவத்தைப் பெரிதாகக் காண்பித்து ஏனைய பிரச்சினைகளை மூடிமறைப்பதாகவும், மொத்தத்தில் நல்லாட்சி அரசு நஞ்சாட்சி அரசாக மாற்றம் அடைந்துள்ளதாகவும் குறிப் பிட்டுள்ளார். -(கு)

# ராஜபக்ச குடும்பம் மீது 750 குற்றச்சாட்டுக்கள்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



கொழும்பு, நவ.22
ராஜபக்ச குடும்பத்தினர் மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புபட்ட ஊழல், மோசடி மற்றும் கொலைக்குற்றச்சாட்டுக்கள் என 750 சம்பவங்கள் உள்ளன என்றும், அவை தொடர்பான விசாரணைகளை 4 வருடங்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வர அரசு முயற்சி செய்வதாகவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல், மோசடிகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் இன்னமும் தண்டிக்கப்படாமை தொடர்பில் பொதுமக்கள் அரசின் மீது அதிருப்தியில் உள்ளனர். சிறு குற்றவாளிகள் என்றால் உடனே தண்டிக்க முடியும். இவர்கள் பெரும் குற்றவாளிகள் என்பதால் குற்றங்களை நிரூபிக்கக் கால தாமதம் ஏற்படலாம். இருப்பினும், நான்கு வருடங்களுக்குள் அனைத்து விசாரணை களையும் நிறைவுசெய்து குற்ற வாளிகளைத் தண்டிக்கவே முயற்சி செய்து வருகின்றோம்.

ராஜபக்ச குடும்பத்தினர் பெரிய மோசடிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். ராஜபக்சவின் சகாக்கள் மீது ஊழல், மோசடி மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் என 725 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் ராஜபக்ச குடும்பத்தவர் ஒருவரேனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டுள்ளனர். அதேவேளை, ஊழல், மோசடி மற்றும் கொலைக்குற்றச்சாட்டுக்கள் 25 உடன் மகிந்த ராஜபக்ச குடும்பம் நேரடியாகத் தொடர் புபட்டுள்ளது. இவை தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டே வருகின்றன.

எனினும், எம்மிடமுள்ள வளப் பற்றாக்குறை காரணமாக விசாரணைகள் தாமதமாகின்றன. குறைந்தளவிலான அதிகாரிகளே விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். அதேபோன்று, இக் குற்றச்சாட்டுக்களுடன் சர்வதேச தொடர்புகளும் உள்ளமையினால் ஒரு குற்றச்சாட்டை விசாரிக்க 7, 8 நாடுகளுக்குப் பயணம் செய்ய வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது – என்றார்.

இதன்போது, உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேலுக்கு விசா வழங்கப்படுமா என்பது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும்போது, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்கள் அனைவரும் நாட்டுக்கு மீண்டும் வர வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். 2014ஆம் ஆண்டு தேர்தலை இலக்காக வைத்து பல அமைப்புக்களுக்கு மகிந்த ஆட்சியில் புலி முத்திரை குத்தப்பட்டு தடைவிதிக்கப்பட்டது. அதில் இறந்தவர்களது பெயர்களையும் உள்வாங்கியிருந்தனர். எனினும், இந்த அமைப்புக்கள் பற்றிய தற்போதைய உண்மை நிலைவரங்கள் தொடர்பில் நாங்கள் கூடி ஆராயவுள்ளோம். நாட்டின் நலனில் கரிசனையுள்ளவர்களுக்கு இலங்கை வருவதற்கும் போவதற்கும் அனுமதி உள்ளது. அந்த நிலைப்பாடே உலகத்தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் என்பவர் தொடர்பிலும் உள்ளது - என்று கூறினார். (கு-சி)

# அவன்கார்ட் மூடப்பட்டதால் 12,500 பேர் தொழில் இழப்பு

## கோடிக்கணக்கான ரூபா அந்நியச் செலாவணி நட்டம்

கொழும்பு, நவ.22
அவன்கார்ட் நிறுவனம் மூடப்பட்டதால் அதில் தொழில் புரிந்த 12 ஆயிரத்து 500 பேர் தொழில்களை இழந்துள்ளதுடன், அரசு பல கோடி ரூபா அந்நியச் செலாவணியை இழக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக அவன்கார்ட் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவன்கார்ட் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டாளர் கமல் கமகே தெரிவித்தவை வருமாறு:-

சட்ட ரீதியாக நடத்தப்பட்டுவந்த இந்தப் பெரிய நிறுவனத்தை அரசியல் பகடையாக்கி ஒரேயடியாக மூடச் செய்ததன்மூலம் அதில் தொழில் புரிந்த ஆயிரக் கணக்கானோர் வீதிக்கு வந்துள்ளனர். அத்துடன், அரசுக்குப் பல கோடி ரூபா அந்நியச் செலா வணி நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நாங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடனும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுடனும் பேச்சு நடத்தினோம். எனினும், இதுவரை எந்தத்தீர்வும் எட்டப்படவில்லை. தொழில் இழந்தவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்களது குடும்பங்கள் திக்குத் திசை தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு நியாயமான தீர்வொன்றைப் பெற்றுத்தர வேண்டும்- இவ்வாறு தெரிவித்தார் கமல் கமகே. (கு)

# திருமலை இரகசிய முகாமில் தடுப்பில் இருந்தோர் எங்கே?

## நாடாளுமன்றில் சுமந்திரன் கேள்வி

பலவந்தமாகக் கடத்தல் மற்றும் காணாமற்போதல் தொடர்பான ஐ.நா. குழுவாலும், இலங்கை கடற்படையின் முன்னாள் கட்டளையிடும் அதிகாரியினாலும் உறுதிப்படுத்



தப்பட்டுள்ள திருகோணமலை இரகசியத் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் எங்கே?"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இதுபோன்ற பாரதூரமான விடயத்தை மூடிமறைத்துவிட்டு, கவர்ச்சிகரமான வார்த்தைகளால் பேசுவதனூடாக மட்டும் நல்லிணக்கம் ஏற்படுமா? என்றும் கேள்வி எழுப்பியதுடன் முன்னாள் ஆட்சியாளர்களுக்கு அஞ்சிச் செயற்படாது, நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற 2016ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தை ஆரம் பித்துவைத்து உரையாற்றியபோதே மேற் கண்டவாறு கேள்விகளை எழுப்பி வலியுறுத்திய சுமந்திரன் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மக்கள் பலர் கைது செய்யப்பட்டனர். இது ஒரு மோசமான சட்டமென சர்வதேசமே கூறிவருகின்றது. ஜே.வி.பி. என்று நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் இது பாதித் தது. நல்லதொரு சமூகத்தில் இப்படியான தொரு சட்டம் இருக்கமுடியாது.

**புள்ளி விவரத்தில் சந்தேகம்**

இறுதிப் போரின்போது சரணடைந்த 12,000 விடுதலைப்புலிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு கடந்த அரசால் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், புலிகளுக்கு உதவியதாகக் கூறி 800 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை 273, 216, 217, 268 எனக் கூறப்பட்டது. இந்தப் புள்ளிவிபரம் எனக்கு சந்தேகத்தை எழுப்புகின்றது.

**திருமலை இரகசிய முகாம் உண்மை**

இலங்கைக்கு பயணம் செய்திருந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு (பலவந்தமாக கடத்தல் மற்றும் காணாமல்போதல் தொடர்பான ஐ.நா. குழு) திருகோணமலை இரகசிய முகாம் தொடர்பாக நாம் முன்வைத்த குற்றச்சாட்டு உண்மையெனக் கூறியது.

அது இரகசிய சிறை என்பது உண்மை என்று கடற்படையின் முன்னாள் கட்டளை யிடும் அதிகாரி கூறினார். இது பிரிட்டன் போன்ற நாடுகளிலுள்ள சிறை போன்றது என்றும், இதில் தடுத்துவைத்திருந்தோம் என்றும், ஆனால், சித்திரவதை செய்யவில்லை என்றும் அவர் கூறினார். இப்போது அவர்கள் எங்கே? கடற்படையின் முன்னாள் கட்டளையிடும் அதிகாரி கூறிய நபர்கள் எங்கே?

2009இல் காணாமற்போதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐ.நா. சென்றார். அந்தக்குழுவிடம்பட்டியலொன்றைக் கையளித்தார். ஆனால், அந் தக் குழுவை (இலங்கைக்குள்) அனுமதிக்கவில்லை. நல்லிணக்கம் பற்றிக் கவர்ச்சிகரமான வார்த்தைகளைக் கூறுகிறீர்கள். ஆனால், இது போன்ற பாரதூரமான விடயத்தை மூடிமறைக்கும்போது நல்லிணக்கம் ஏற்படுமா?

இதேவேளை- தமிழ் அரசியல் கைதிகள் புனர்வாழ்வுக்குத் தயார் எனக் கடிதம் மூலம் அறிவித்தனர். அப்படியாவது தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்றே அவர்கள் புனர்வாழ்வுக்குக் கோரிக்கை விடுத்தனர். ஆனால், இதற்கு அரசிடமிருந்து இதுவரை உரியமுறையில் உறுதிமொழி வழங்கப்படவில்லை. அரசின் பிணை நிபந்தனை விதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. புலிகளுடன் தொடர்புடையவர்கள் முன்னாள் ஆட்சியாளர்களால் விடுவிக்கப்பட்டனர். உங்கள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையிலும் அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான பொலிஸாரின் கொலைக்குக் காரணமானவர் கடந்த அரசில் பிரதியமைச்சராக இருந்தார். இப்போதும் அவர் வெளியில் இருக்கின்றார். இன்னும் பல கொலைகளுக்குக் காரணமானவர் கடந்த அரசின் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தார். இப்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். எனினும், இது மிகவும் காலதாமதமான நடவடிக்கையாகவே உள்ளது.

ஆயுதங்கள் கடத்து பவ ரென அனைவராலும் அறியப்பட்டவர், இன்டர் போலால் தேடப்பட்டவர் சுதந்திரமாக வெளியில் திரிகிறார். இவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை? நல்லாட்சி என்று கூறப்படுகின்றது. இது நாட்டு மக்களுக்கு நல்லாட்சி அல்ல. நாட்டிலுள்ள செல் வந்தர் களுக்கே இது நல்லாட்சியாக உள்ளது- என்றார். (த-சி)


**தேவை**

புத்தகம கட்டுநர்கள் ஆண், பெண் தேவை.

077 555 3918, 021 221 7868

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

சாவகச்சேரியிலுள்ள வீடொன்றில் தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.

077 461 8002



**பிள்ளையார் கதை உற்சவமும் இலட்சார்ச்சனையும்**

மருதடி விநாயகர் அடியார்களே,

26.11.2015 வியாழக்கிழமை முதல் 15.12.2015 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை வரை மேற்படி உற்சவங்கள் நடைபெறும்.

தினமும் காலை 8.00 மணிக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகி நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 10.00 மணிக்கு பிள்ளையார் கதை படிப்பு ஆரம்பமாகி நடைபெறும்.

முற்பகல் 11.00 மணிக்கு விநாயகருக்கு அபிஷேகம் நடைபெற்று மதியம்12.00 மணிக்கு மதிய பூசை நடைபெற்று12.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று எம் பெருமான் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

15.12.2015 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு கஜமுக சம்காரம் நடைபெறும்.

16.12.2015 ஆம் நாள் புதன் கிழமை காலை 8.00 மணிக்கு கணபதிஹோமம் நடைபெற்று பஞ்சமுக விநாயக பெருமான் வெளிவீதி உலா வருவார். மாலை 3.00 மணிக்கு பிள்ளையார் பெருங்கதைப் பூர்த்தி விழா நடைபெறும்.

17.12.2015 ஆம் நாள் வியாழக்கிழமை அதிகாலை திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

"தீராத நோய் தீருஞ் செல்வமிகும் பத்தி வரும்
வராத கல்வியெல்லாம் வந்தெய்தும் - பேரார்
மருதடியானை ஐங்கரத்தான் மாமுகத்தான் பாதம்
கருதிக் கசிந்தேத்துங்கால்"

"சுபம்"

விளம்பர அனுசரணை
விநாயகர் பட்டுச்சோலை,
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

ஆலய தர்மகர்த்தா சபை
மானிப்பாய் மருதடி
விநாயகர் ஆலயம்.

(66279)

**நவீன, எடை குறைந்த இலகுவாகச் செயற்படக் கூடிய செயற்கைக் கால்கள் வழங்கல்**

Rotary

Be a gift to the world

றோட்டறி மாவட்டம் 2982 – சேலம் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் ஆகிய இணைந்து போரினால் கால்களை இழந்தவர்களுக்காக ஒரு தொகுதி செயற்கைக் கால்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




- நவீன தொழில் நுட்பத்தில் வடிவமைப்பு
- பாரம் குறைந்த கால்கள்
- இலகுவான பராமரிப்பு
- உறுதித் தன்மை கூடியது

இந்தியாவிலிருந்து வருகை தரும் சிறப்பு வைத்தியர் குழுவினரால் எதிர்வரும் 23.11.2015, திங்கட்கிழமை, முற்பகல் 08.30 மணி முதல் கால் அளவுகள் எடுக்கப்படவுள்ளன.

பதிவுகளுக்கு : 021 493 6666

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பொற்பதிவீதியில் தாயகத்திற்கு அண்மையில் ஐந்து (5) பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

(66274) (14.15)

தொடர்பு: 077 905 0196

**கார் தேவை**

Maruti Suzuki ALTO அல்லது ESTILO தேவை.

தொடர்பு: 077 9565 509

**விற்பனைக்கு**

தனியார் நிறுவனத்திற்கு ஏற்ற நான்கு பகுதியாக அமர்ந்து வேலை செய்யக் கூடிய தம்புரோ தயாரிப்பு கணினி மேசை மற்றும் HP கலர் பிறிண்டர் (CP 1025), A/C வெளி இணைப்பு இயந்திரம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : 071 4620 806

**வாடகைக்கு**

அரச பணிபுரியும் பெண்களுக்கு சமையல் அறை வசதியுடன் கூடிய அறை நல்லூர் பகுதியில் வாடகைக்கு உண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

(66277) தொடர்புக்கு: 071 462 0806


## பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம்

க.பொ.த (சா/த) பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளது. க.பொ.த (சா/த) பரீட்சையில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலகர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலகர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற் பார்வையாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் மார்கழி மாதம் 2ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப் பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலகர் களை பங்குபற்றுமாறும், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக் கடமைகளில் கடமையாற்றமுடியும் என்பதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (ந-ரி)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்


வெற்றி வாரம்: 2702 திகதி: 2015-11-21

07 59 67 68 o 10

ரூ. 10,419,250/-

# மரண அறிவித்தல்கள்

## நவரெட்ணம் லோகேஸ்வரன்



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரெட்ணம் லோகேஸ்வரன் 18.11.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற த. நவரெட்ணம் மற்றும் நல்லநாயகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான பாலசிங்கம் ஜெயலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் தனேஸ்வரியின் அன்புக் கணவரும் பிறேம்தாஸ் (பிரான்ஸ்), பிறேம்குமார் (பிரான்ஸ்), பிறேம்நாத் (லண்டன்), சிந்துஜா (NVQ Level 5 தொழில்நுட்ப கல்லூரி) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் சுதர்சனா (பிரான்ஸ்), நந்தரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வராணி செல்வராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் புஸ்பராணி (சுவிஸ்), இந்திராணி (RDA) வவுனியா கணேசலிங்கம் (RDA) யாழ்ப்பாணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற நடராஜா மற்றும் மோகனா (சுவிஸ்), சிவராஜா (சுவிஸ்), மகேந்திரன் (Retd P.S RDA), ஈஸ்வரி, புவனேஸ்வரி (செங்குந்த பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும், ஹரிணி (பிரான்ஸ்), சுபிக்ஷா (பிரான்ஸ்), அஸ்வினி (பிரான்ஸ்), நிஸ்திதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்குஎடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல :
**021 222 0053**

(66268) (12.17.16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி கனகாம்பிகை சண்முகநாதன்

(முன்னாள் ஆசிரியை - கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் - புங்குடுதீவு- 7)



பிறப்பு:- 07.03.1952
இறப்பு:- 20.11.2015

புங்குடுதீவு, மடத்துவெளி, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவரும் தற்போது மடத்துவெளி 7ஆம் வட்டாரத்தில் வசிப்பவருமாகிய திருமதி கனகாம்பிகை சண்முகநாதன் 20.11.2015 வெள்ளிக் கிழமை இறைபதமடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அமராவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் பத்தினிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், சுமித்திரா (கனடா), சுஜீவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்றவர்களான மங்கையர்க்கரசி, வரராசசிங்கம், மனோன்மணி, கைலாயநாதன் மற்றும் தனபாலசுந்தரம், திருஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலசேகரம்பிள்ளை, ஞானம்மா, திருநாவுக்கரசு,ஞானவல்லி, சந்திரகுமாரி, நமசிவாயம், இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு, ஸ்ரீராசசிங்கம், காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை மற்றும் சதாசிவம், நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (23.11.2015) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டாரம் -7,
புங்குடுதீவு .

தகவல்:
அ.சண்முகநாதன் (கணவர்)
077 476 6441

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசேஸ்வரி இராசரத்தினம்



நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேஸ்வரி இராசரத்தினம் நேற்று (21.11.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற இரத்தினம் மற்றும்தங்கச்சியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையா மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் பாசமிகு மனைவியும் வதனமோகன்(டோகா), சுபகரன், ஜெககரன் (கனடா), ராதிகா, சுஜகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சசிரேகா, ரூபமலர், சிந்துஜா, ஜீவதாசன், வினோதினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. 077 0563 987

(66276)

தகவல்:
குடும்பத்தினர்.

## குட்டியர் திருஞானம் (மணியம்)



விக்னேஸ்வரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியர் திருஞானம் (மணியம்) 21.11.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், குட்டியர் - வள்ளிப்பிள்ளை, குட்டியர் - லட்சுமி தம்பதியரின் மகனும், நாகமுத்து - தங்கம்மா தம்பதியரின் மருமகனும்,சுசீதன் (ஜேர்மனி),முகுந்தன் (Director B.I.School) சியாமளா (ஆசிரியை - பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் தந்தையும்,சிவகுமார் (உதவிக் கல்விப் பணிப்பாளர், முறை சாராக்கல்வி, யாழ். வலயம்), அகல்யா (ஜேர்மனி), அஜந்தா ஆகியோரின் மாம னும், மகாதேவன்,ஜெகநாதன் (ஓய்வுநிலை அதிபர்), காலஞ்சென்ற ஜெகதீசன் (அதிபர்), பாக்கியநாதன் (ஜேர்மனி), ரம்பாதேவி,மோகனலீலா, லகாயினி, காலஞ்சென்ற சந்திரவதனி (ஆசிரியர்),கிருபன் (பணியாளர், மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இராசதுரை, காலஞ்சென்ற பூமணி, பொன்னுத்துரை,காசிநாதன்,மகாலிங்கம், ரங்கநாதன், பாஸ்கரன், சுமிதி, லிங்கேஸ்வரி, பராசக்தி (ஜேர்மனி), சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும், அஸ்வத், அனிருத்,ஆதவ் (ஜேர்மனி), அபினயா,கவினயா (உடுவில் மகளிர் கல்லூரி),பவினயா (B.I.School),சகீனா,சாத்வீகன் (யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வினாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
சங்கானை.

(66188) (13.15)

தகவல்:
குடும்பத்தினர்.

### வாகனங்களின் விலைகள் அதிகரிக்க வாய்ப்பு

வாகனங்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக கொழும்பு வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.


நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைய வாகன இறக்குமதிகளின் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவாகனங்களின் விலைகளில் அதிகரிக்கப்படும் என அது குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய இலக்ரோனிக் வாகனங்கள் 25 லட்சம் ரூபாவாலும், மினி கெப் 10 லட்சம் ரூபாவாலும், மாருதி 2 லட்சம் ரூபாவாலும், முச்சக்கரவண்டி 1 லட்சம் ரூபாவாலும் அதிகரிக்கும் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த வரி அதிகரிப் பின்காரணமாகவாகன விற்பனையிலும் தமக்கு தாக்கம் ஏற்படும் என கூறியுள்ள வாகன இறக்குமதியாளர்கள் சங்கம், புதிய வரி காரணமாக இலக்ரோனிக் ரக மோட்டார் வாகன இறக்குமதி நிறுத்தப்படும்எனவும் தெரிவித்துள்ளது.

(வ)

# மரண அறிவித்தல்



## சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன்

(ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் மக்கள் வங்கி சுன்னாகம்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன் அவர்கள் கடந்த (19.11.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதபிள்ளை மற்றும் இராசமணி தம்பதியரின் மகனும்
காலஞ்சென்ற செல்வநாயகம் (செல்வரத்தின வாத்தியார்) மற்றும் கௌரியம்மா தம்பதியரின்
மருமகனும் ஸ்ரீபதி அவர்களின் அன்புக்கணவரும் செந்தூரன், கஸ்தூரி, சர்மிலன், சாமந்தி
ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - தேசிய
வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனாரும், இரஞ்சனா
தேவி (ஓய்வு பெற்ற முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), தேவமனோகரன்
(திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் கல்வி வலயம்), இராசதேவி (கனடா),
இராசமலர் (லண்டன்), சுலோசனா (ஆசிரியை - உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்),
கிருபாகரன் (கனடா), செல்வாகரன் (கனடா), ஐங்கரன் (கனடா), திருக்குமரன் (கனடா)
ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் துஷ்யந்தி, பரமானந்
தம், உதயகுமார், யுவராஜ், மதுரா, ரஜித்தா, சந்திரிக்கா, புகழினி, சிவகுமார் (ஓய்வு பெற்ற
பிரதி அதிபர்-யா/ஊரெழு கணேசா வித்தியாசாலை), இரவீந்திரன் (டென்மார்க்), காலஞ்
சென்ற தயாபரன் மற்றும் மோகனதாஸ் (கனடா), இராகவன் (சுவிஸ்), செல்வநாயகி, விமலா
தேவி, கௌசலா, தங்கலஷ்மி, சிவதர்சினி ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகா, ஜனகன்,
அனு, அனந்தன், பானு, பாரி, ஐதுர்சா, விக்னேஸ், ஹரிஸ், ஹரினி, ஹேதுசன், ஹேதுசா,
தேனுசியன், ரதீசன், நித்தியா, சுஜன், ராம்ஜித், ரோகித், அச்சுதா ஆகியோரின் மாமனாரும்
மாதுமை, ஜயபவன், சயான், கிருசான், மதுசான், சேயோன், ரனேஸ், சுவாதி, சரிகா, அவேந்
திகா, யுவேந்திகா, சுபீக்சா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00
மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து
மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீபதி' இணுவில் தெற்கு, இணுவில்.
(021 224 1712, 075 041 3011, 077 129 9524)

தகவல்:
குடும்பத்தினர்.

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### வீடு விற்பனைக்குண்டு

கோப்பாய் வடக்கு, வெள்ள வாய்க்கால் ஒழுங்கையில் உள்ள உத்தேசம் 5 பரப்பு 2 குளியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 432 4662 (66281) (12.16)

### காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி மீசாலை வங்களா வீதியில் 5பரப்புக் காணியுடன் வீடு மற்றும் சகல வசதிகளுடன் 06 அறைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 703 1495

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வடக்கு
உடுவில் (றோட்டில்) வீதியில்,
Green ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக
சந்திக்கு அண்மையாகவுள்ள
ஐந்து (05) பரப்புக் காணி
விற்பனைக்கு.
இல 17, உடுவில் வீதி,
மானிப்பாய்

தொடர்பு :

**இரவீந்திரன்**
077 727 0310
Sam- UK- London
+ 44 7818557193 (64533) 12.30

### விற்பனைக்கு

BAB XXXX Pluser Motor Bike
விற்பனைக்குண்டு.

(66256) (14.15.16) தொடர்பு: 076 711 2102

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500M (½ Km தூரத்திலும் ஆண், பெண் பாடசாலைகள், தபாற் கந்தோர், புகையிரத நிலையம், சந்தை முதலியவற்றி லிருந்து நடந்து செல்லக்கூடிய தூரத்தில் பஸ் வசதி யுடனும்) 7 துண்டங்களாக அமைந்துள்ள 65 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. துண்டங்களாகவோ (வரை பட முள்ளது) முழுமையாகவோ விரும்பியபடி வாங்க முடியும். வீதிக்கு அருகில் பரப்பு 4 லட்சம்படியும் பின் காணித் துண்டுகள் அதற்கு சற்றே குறைவாகவும் விற்கப்படும். உடனே தொடர்புகொள்ளுங்கள் திருமதி.யோகா நாகேந் திரம், கெருடாவில் கந்தசாமி கோயில் அருகில், பருத்தித் துறை வீதி, கெருடாவில் சாவகச்சேரி. 077 160 1115 2015.11.30 இன் பின்னர் 075 997 6601, 075 598 0863 (c 20181) (12.15)

### காணி விற்பனைக்கு

குடத்தனை, பிரதான வீதி,
ஆறாம் கட்டையில் தென்னை
மரங்கள், துரவோடு கூடிய
33 பரப்பு மேட்டுக் காணி
உடன் விற்பனைக்குள்ளது.

விவரங்களுக்கு: 077 810 3394

## தேவை

### காணி தேவை

கந்தர்மடம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் பலாலி வீதிக்கு அருகில் மூன்று, நான்கு பரப்புக் காணி தொழில் முயற்சிக்காகத் தேவை.

தொடர்பு:
077 8813737 (66219)(12.15)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த 40 வயதுடைய அவிட்ட நட்சத்திரம் 5' 7" உடைய கனடாவில் பிராஜாவுரிமையுடன் கணினிப் பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த அழகிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

(Russia)
ZHENGZHOU UNIVERSITY
(China)



இலங்கை மருத்துவ சபை மற்றும் USA, Canada,UK, New Zealand, Dubai, Thailand etc.. நாடுகளில் அங்கீகாரம் பெறப்பட்டது.

மேலதிக விபரங்களுக்கு

கௌரவ கலாநிதி சேனாநாயக்கவை
கீழேயுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

INSTITUTE OF VOCATIONAL STUDIES

476, Kandy, Road,
Dalugama, Kelaniya.
Office: 011 2910323
Hotline: 0777444500


## மரண அறிவித்தல்



### அமலோற்பவநாயகி பிரகாசம்

பிறப்பு: 28.11.1950 இறப்பு: 20.11.2015

அச்சுவேலி விழங்கியவத்தையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி பரலோகமாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசம் அமலோற்பவநாயகி (20.11.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரகாசம் - பிரகாசி தம்பதியினரின் மகளும் ஆரோக்கியம்மா, ஆரோக்கியநாதன், அந்தோனியம்மா காலஞ்சென்ற அன்ரனி மற்றும் சூசைப்பிள்ளை, பசில், கில்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்பிரகாசம், லூர்த் தம்மா, அமிர்தநாதர், பூங்கொடி காலஞ்சென்ற லியோனா மற்றும் யூலியற்ராணி ஜெகதீசர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.11.2015) திங்கட்கிழமை இறுதிஅஞ் சலிக்காக நீர்வேலி பரலோகமாதா பதியில் வைக்கப்பட்டு பின்னர்அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் முற்பகல் 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத் திற்காக வல்லை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 139 0219, 077 528 4614

(66259) (14.15.16)

**தகவல் :**
**அ.அருட்பிரகாசம்**

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 . 07 . 1924



விண்ணில் 11 . 12 . 2005

### அமரர் சுப்பையா செல்லத்துரை

திதி:கார்த்திகை பூர்வபக்க ஏகாதசி

கார்த்திகைத் திங்கள் கனிந்த நல் ஏகாதசியில் - நாம்
பார்த்திருக்கப் பரனுலகு ஏகிய எம் பிதாவே
நேற்றுப் போல் இருக்கிறது நிறைந்தது பத்தாண்டு
காற்று இருக்கும்வரை உம் நினைவு
கலந்திருக்கும் எம்மோடு...

(66262)(11,15,17)

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

நீங்காத நினைவலைகளுடன்
குடும்பத்தினர்.


நேரடி விமான சேவை




தற்போது லண்டன் நகரிற்கான மீள் வருகைக் கட்டணம்

ரூ 59,900 இலிருந்து*

விசேட மீள்வருகைக் கட்டணத்துடன் லண்டன், பிராங்போர்ட், ரோம் மற்றும் பாரிஸ் ஆகிய நகரங்களின் அதிசயங்களை கண்டுகளித்திட இதுவே சிறந்த தருணம்.

Economy class: 59,900 ரூபாவிலிருந்து*
Business class: 239,900 ரூபாவிலிருந்து*

2015 நவம்பர் 03ஆம் திகதி முதல் 2016 மார்ச் 31ஆம் திகதி வரை பயணிக்க கிடைக்கும் நீண்ட கால சலுகையை தவறவிடவேண்டாம்.

இச்சலுகையை அனுபவித்திட உங்கள் டிக்கட்டுகளை 2015 நவம்பர் 30ஆம் திகதிக்குள் கொள்வனவு செய்யவேண்டும்.


மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள பயண முகவரை நாடுங்கள், 1979 இற்கு அழையுங்கள் அல்லது www.srilankan.com இற்கு பிரவேசியுங்கள்.

விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
*விமான நிலையம் / புறப்படல் வரிகள் உள்ளடக்கப்படவில்லை.

SriLankan Airlines

# மரண அறிவித்தல்

## திருமதி தேவமலர் பரமேஸ்வரநாதன்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21.01.1933 | 19.11.2015 |

யாழ்ப்பாணம், வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு சுவர்ணா வீதியில் வசித்தவருமான திருமதி தேவமலர் பரமேஸ்வரநாதன் 19.11.2015 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், சுகீர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரநாதன் (அதிபர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி) அவர்களின் பாசமிகு துணைவியாரும் காலஞ்சென்ற பாமதி (சேவைக் காலப் பயிற்சி ஆலோசகர் - வலயக்கல்வி அலுவலகம் களனி), ராதா, ரவீந்திரன்(K.G.Plastic Pvt Ltd - ஹெந்தளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளினிகலாவின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம், செல்வராஜசிங்கம், அரியராஜசிங்கம் மற்றும் விஜயராஜசிங்கம், சுகீர்த்தராஜசிங்கம், தேவராஜசிங்கம்,கருணேந்திரன், சத்தியதேவி, திவ்யராணி, தேவரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விவேகானந்தம், லில்லிமலர், நேசமலர், புஷ்பமலர் மற்றும் வித்தியானந்தன், சிவானந்தன், யோகரட்ணம்,செல்வானந்தன், சுவர்ணகாந்திமலர், தவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக தெஹிவளை, நெதிமாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(c 20180)
(14.15.16)

தகவல்:

077 171 5076,
077 196 8638

ரவீந்திரன் (மகன்),
சகோதர, சகோதரிகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சந்திரா இரத்தினசபாபதி



கொக்குவில் மேற்கு, சொர்ணவடலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரா இரத்தினசபாபதி நேற்று (21.11.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், கேசவன், அகிலன் ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தவமணி, சண்முகநாதன், வேலாயுதம் மற்றும் கணேசபிள்ளை, தங்கராசா,சந்தனராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜனார்த்தனியின் அன்பு மாமியும், திஷானனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
சொர்ணவடலி லேன்.
077 163 8006

தகவல்:
சு.இரத்தினசபாபதி (கணவர்)

## திருமதி மீனாட்சியம்மை சிவப்பிரகாசம்



வராம்பற்றை, கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சியம்மை சிவப்பிரகாசம் 20.11.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஊரெழுவைச் சேர்ந்த நல்லையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்- யாழ் பிரதேச சபை) அவர்களின் அன்பு மனைவியும் சோமஸ்கந்தன் (UK), சுபாஜினி, சாந்தினி (சுவிஸ்), சிவாஜினி (ஆசிரியர், யாழ் .கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), சிவாஸ்கந்தன்(UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தி(UK), மகேந்திரம்(சுவிஸ்), ஏகாந்தநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடராசா, கதிரேசுப்பிள்ளை, பாலசுந்தரம்(கனடா) ஆகியோரின் சகோதரியும் துர்க்காவெ்ன்(UK), துர்சந்(UK), காலஞ்சென்ற துர்சிகா , போல்ராஜ்(சுவிஸ்), பியுளா(சுவிஸ்), தாவித்ராஜ்(சுவிஸ்), வினோதவன்(2017 கணிதபிரிவு/யாழ். இந்துக் கல்லூரி), தவசுதன் (தரம்08-யாழ்/பரியோவான் கல்லூரி) அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வராம்பற்றை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (66244)(12.15.17)

தகவல்:
போ. ஏகாந்தநாதன்
(மருமகன்-கோப்பாய்)

# சாயி பாபா அவதார தினம்

யாழ்ப்பாணம், நவ.22

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 90 ஆவது அவதாரதினம் நாளை திங்கட்கிழமை வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது;. நிலையத்தலைவர் ஸ்ரீ.கு.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு காலை,மாலை என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது. காலை நிகழ்வு அதிகாலை 5 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும், மாலை நிகழ்வு பி.ப 4.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரையும் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி6)



# இலவச சட்டக் கருத்தரங்கு


வவுனியா, நவ.22

வவுனியா பிரதேச செயலகம், வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் தமிழ் விருட்சம் ஆகியவை இணைந்துநடத்தும் இலவசசட்டக் கருத்தரங்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30மணிக்கு பிரதேச செயலர் கா. உதயராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பெண்கள் உரிமையும் சட்டமும், பிள்ளைகள் உரிமையும் சமுதாயப் பொறுப்பும் பெற்றோர் கடமையும், இடம்பெயர்வும் காணிப் பிணக்குகளும், இலவச சட்ட உதவியும் பொது மக்களும் எனும் தலைப்புக்களில் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் சிறப்புரையை ஜனாதிபதி சட்டத்தரணியும் வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான மு. சிற்றம்பலம் வழங்கவுள்ளார். (ற)

# மரண அறிவித்தல்



## அருணாசலம் விக்கினேஸ்வரமூர்த்தி

### (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும்,வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் விக்கினேஸ்வரமூர்த்தி 18.11.2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), லோகதாசன் (லண்டன்), இராஜேந்திரக்குமார் (ஜேர்மனி), ரவிசங்கர் (லண்டன்), சுனில்கவஸ்கர் (லண்டன்), ரஜனி (சுவீடன்), பிரமிளா (நோர்வே), சுயனி (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பிஐயா லீலாவதி அவர்களின் அன்புச் சகோதரரும், சத்தியபாமா, சத்தியசீலா, விஜிதா, குமுதினி, கிருஸ்ணதாஸ், ரமேஸ், கோணேஸ், பிறேமரஞ்சினி, அபயகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அருளீஸ்வரன், அஸ்வினீசன், ஆரணியா(சுவிஸ்), சாரங்கன், சபர்னா, சாருகா(லண்டன்),மதுவந்தி, துவாரகீஸ், அதிரதன், சச்சின் (ஜேர்மனி), ரவிராஜ், வைஸ்ணவி, அருந்ததி (லண்டன்), சாருஜன், கபீசன், றேகிதா (சுவீடன்), அபினயன் (நோர்வே), அஞ்சனா, அச்சுதா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பத்மாவதி - (இலங்கை +947 7350 5264),
தீசன் (ஜெகா, சுவிஸ்)
(இலங்கை [illegible])

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன்மேற்கு,
தெல்லிப்பழை. (66247)(11.15.16)

# வீடமைப்புத் திட்டங்களில் சலுகை அரசுக்கு 600 லட்சம் ரூபா இழப்பு

கொழும்பு, நவ. 22

விமல் வீரவன்ஸ அமைச்சராகச் செயற்பட்ட காலத்தில் அரசின் வீடமைப்புத் திட்டங்களில் அவரது உறவினர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகை காரணமாக அரசுக்கு 600 லட்சம் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கும்வகையிலேயே அமைச்சர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் சஜித், மத்தேகொட மற்றும் கஹதுடுவை பிரதேசங்களில் கடந்த அரசின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சொகுசுமாடி வீட்டுத் திட்டங்களில் ஐந்து வீடுகள் விமல் வீரவன்ஸவின் உறவினர்களுக்குச் சலுகை கட்டணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அவர்கள் சுமார் 500 லட்சம் வரை அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அத்துடன் கடந்த அரசின் காலத்தில் ஜனாதிபதி ஊடகப்பிரிவில் பணியாற்றிய ஒருவருக்கும் இவ்வாறு வீடொன்று வழங்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸவின் உறவினர்களுக்கு முறைகேடாக வழங்கப்பட்ட வீடுகளை ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவர்கள் அரசிடம் மீண்டும் கையளித்துவிட்டனர். எனினும், ஜனாதிபதி ஊடகப்பிரிவில் பணியாற்றியவர் தொடர்ந்தும் குறித்த வீட்டில் வசித்துவருகின்றார்.

இவ்வாறான முறைகேடுகள் காரணமாக இந்த வீடமைப்புத் திட்டத்தில் மட்டும் சுமார் 600 லட்சம் ரூபா இழப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது-என்றார்.

(து-சி)

# இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்துடன் பெண் கைது

கொழும்பு, நவ. 22

வெளிநாட்டுப் பணத்தைச் சட்ட விரோதமாகத் தம்வசம் வைத்திருந்த பெண் ஒருவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12.45 அள வில் பாங்ஹொக் நோக்கி செல்ல விருந்த டி.ஜீ.308 இலக்க விமா னத் தில் வைத்தே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அப்பெண்ணிடம் ஸ்ரேலிங் பவுண், அமெரிக்க டொலர், சுவிஸ் பிராங் யுரோ மற்றும் சவூதி ரியால்கள் உட்பட சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் காணப்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட பெண் 50 வயதானவர் என்றும், இவர் கடுவலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(து-சி)

கண்ணீர் அஞ்சலி



அமரர்

வில்வராஜா சுதாகர்

(முன்னாள் பகுதி நேர விரிவுரையாளர் (BCAS JAFFNA CAMPUS)

மலர்வு 12.06.1974

உதிர்வு 21.11.2015

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

BCAS CAMPUS JAFFNA

# அமைச்சரவைக் கூட்டங்களின்போது செல்போன்களுக்கு தடை வேண்டும்

*தலதா அத்துக்கோரள கோரிக்கை*

கொழும்பு, நவ. 22

அமைச்சரவைக் கூட்டங்களின்போது தொலைபேசி பயன்படுத்துவதனைத் தடை செய்ய வேண்டுமென அமைச்சர் தலதா அத்துக்கோரள கோரியுள்ளார்.

அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட முன்னதாகவே சிலருக்குத் தெரிந்துவிடுகின்றது. அமைச்சரவையின் இரகசியங்களை பேணிப் பாதுகாத்துக்கொள்ள தொலைபேசிப் பயன்பாட்டுக்குத் தடைவிதிக்க வேண்டும்.

கூட்டங்களுக்கு செல்லிடப் பேசிகளை அமைச்சர்கள் எடுத்துச் செல்வதனைத் தடை செய்ய வேண்டும்.

சில அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிடும் கருத்துக்களை வெளி நபர்கள், கேட்டுக்கொள்ள செல்லிடப்பேசிகளின் ஊடாக வேறு சில அமைச்சர்கள் ஆவன செய்து வருகின்றனர்.

இவ்வாறு சில அமைச்சர்கள் செய்யும் நடவடிக்கையானது வெட்கப்படவேண்டியதாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறு தொலைபேசிகளை எடுத்துச் செல்ல தடை விதிப்பது அமைச்சர்களின் கௌரவத்துக்குப் பங்கமாக அமையும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை இரகசியங்களைப் பாதுகாப்பது அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(து)

# விமானம் இறங்காத விமான நிலையம் உலகில் இலங்கையில் மட்டுமே உண்டு

*அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்*



கொழும்பு, நவ.22

உலகிலேயே விமானம் இறங்காத விமான நிலையம் உள்ள ஒரே நாடு இலங்கையாகும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து நிகழ்த்திய உரையிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

முன்னைய அரசு துறைமுகத்தைக் கட்டி வைத்துப் பெரியளவில் நிதியைச் செலவு செய்துள்ளது. இருப்பினும், அந்த துறைமுகத்திலிருந்து எந்தவித வருமானத்தையும் அரசு இதுவரை பெற்றதில்லை.

கடந்த அரசு பெரியளவில் நிதியைச் செலவு செய்து அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்தது. இதற்காக வெளிநாட்டிலிருந்து கூடிய வட்டிக்குக் கடனையும் பெற்றுக் கொண்டது. இப்படி கூடிய வட்டிக்குப் பெற்ற கடனால் பயன் கிடைக்கிறதா ? என்று நோக்கினால் அதுவும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

இவ்வாறு வருமானம் பெறப்படாத பெரியளவிலான அபிவிருத்தித் திட்டத்துக்கு கடந்த அரசின் தலைவரின் பெயர் மாத்திரம் பொறிக்கப்பட்டுள்ளது.-என்றார்.

(கு-வ)

## மரண அறிவித்தல்கள்

### வில்வராஜா சுதாகர்

(நரேசா இன்ஜினியர்ஸ் உரிமையாளரும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், இல. 28/1 நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வில்வராஜா சுதாகர் (நரேசா இன்ஜினியர்ஸ் உரிமையாளரும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும்) நேற்று (21.11.2015) சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வில்வராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி) மற்றும் பத்மாவதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் கமலேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தயாணியின் (பிரதேச செயலகம், சங்கானை) அன்புக் கணவரும், நரேந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி), சாம்பவி (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தினி (வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்), பிரபாகர் (யாழ். பொது சன நூலகம்), மனோகர் (யாழ். பொதுசன நூலகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நற்குணராஜா, தனேஸ்வரி, சிந்துஜா, சக்தீஸ்வரி (லண்டன்), யனோசியா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/1, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி.
077 9309738, 0778348976

தகவல்: குடும்பத்தினர்.

(66282) (10.17)



### கோபாலப்பிள்ளை மணிசேகரம்

சரவணை மேற்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை, மகிழங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலப்பிள்ளை மணிசேகரம் நேற்று (21.11.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலப்பிள்ளை பூமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகனதாஸ்ஸின் (ஆஷா) பாசமிகு தந்தையும், பகீரதன், பவளராணி, சிவரூபன் ஆகியோரின் சிறியதகப்பனாரும் காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் சந்திரசேகரம் (யாழ்ப்பாணம்) குணசேகரம் (கொழும்பு), ஞானசேகரம் (கொழும்பு), இராசசேகரம் (சுவிஸ்) புஸ்பராணி (லண்டன்) சிவசேகரம் (லண்டன்) குலசேகரம் (சுவிஸ்), தவராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கனகாம்பிகை கிருபாம்பிகை, சிவசோதி, லிங்கநாயகி பாக்கியநாதன், கீதாஞ்சலி சுதா மோகனதாஸ், நாகேஸ்வரன் ஈவரட்ணம் றோகினி, தேவராசா, மோகனாம்பிகை, செல்வரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும், பாமினி, விஜயகுமார் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஓமந்தை மகிழங்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, நாளை (23.11.2015) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, பி.ப ஒரு மணியளவில் மகிழங்குளம் இந்து மயானத்தில் தகனகம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 1981234 / 077 58 06422

(66281) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லாச்சி தங்கராசா



விடத்தற்பளை, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி தங்கராசா நேற்று (21.11.2015) சனிக்கிழமை இறைவனடி சேந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் கிட்டினர் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமு -மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், இராமு தங்கராசாவின் அன்பு மனைவியும், செபரத்தினம்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சரத்பாபு மற்றும் தசீபன், சுபா, சுமதாஸ்(லண்டன்), செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயும், ராசரத்தினம், ரஞ்சிதா, சற்குணவதி,பத்மாதேவி, மகேஸ்வரி, இராசகுலன்(சுவிஸ்), ராசுதன், தயாகரன்(கட்டார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கம், கனகம்மா, சிவலிங்கம் (சோமு), ரதி, ராணி,செல்வா, பவா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கௌதமி (பிரான்ஸ்), மீனாம்பிகை, மயூரி ஆகியோரின் அன்பு மாமியும், ஜஸ்ரின், சோபியா, டினுயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(60660) (14.15.16)

தகவல் : குடும்பத்தினர்.

### திருமதி நிர்மலகுமாரி பஞ்சரட்ணம்



3/3, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலகுமாரி பஞ்சரட்ணம் நேற்று (21.11.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பஞ்சரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் துவாரகா, பிரியா (லண்டன்) காலஞ்சென்ற ஜனார்த்தனன் மற்றும் கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயகுமாரி, கிருஸ்ணகுமார், கமலகுமாரி, தங்கவேல், ஞானகுமாரி, குசலகுமாரி காலஞ்சென்ற மகேந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், மதியாவரணம் (கோபால்), பாலசிங்கம், தணிகாசலம் மற்றும் கணேசமூர்த்தி, ஈஸ்வரி, மூத்துராசா, நவரத்தினராசா, தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாபு, பகீதரன்(லண்டன்), ரமேஸ்குமார் ஆகியோரின் மாமியாரும் வைதேகி, வைஷ்ணவி, ருக்ஷனா, ரக்ஷனா, பானு, சகானா, வைசாலி, நஜித், ராகவி (லண்டன்), அபிநயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/3, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
077 3546 547

## திருமலை

ரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலையிலோ அல்லது வேறும் இடங்களிலோ சித்திரவதைக் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. சித்திரவதைக் கூடங்களை நடத்தவேண்டிய அவசியம் எதுவும் இருக்கவில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிளவடைந்த கருணா தலைமையிலான தரப்பினர் படையினருடன் இணைந்து கொண்டனர். அவ்வாறானவர்களே திருகோணமலை முகாமில் தங்க வைக்கப் பட்டிருந்தனர்.

இவ்வாறு அரச படையினரிடம் சரணடைந்த கருணா தலைமையிலான புலிப் போராளிகளைப் பயன்படுத்தப்படாத கட்டடங்களில் தங்க வைத்திருந்தோம். 2004 ஆம் ஆண்டு புலிகளிடமிருந்து பிளவடைந்த கருணா அம்மான் தலைமையிலான பெருமளவிலான முன்னாள் புலிகள் படையினருடன் இணைந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.

படையினர் சித்திரவதைக் கூடங்களை அமைத்து எவரையும் சித்திரவதை செய்யவில்லை. இந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுக்கிறேன் -என்றார் அவர். (த-5)

## எட்டு

கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

தற்போதைய புதிய அரசு, குறித்த பட்டியலை மீளாய்வு செய்து வருவதாக அறிவித்திருந்தது. இதனடிப்படையில் மீளாய்வு செய்த புதிய பட்டியல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கடந்த அரசினால் தடை செய்யப்பட்ட எட்டு அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் தேசிய அவை, தமிழ்த் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு - ஆஸ்திரேலியா, உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் மீதான தடையே நீக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று 269 தனிநபர்கள் மீதும் தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (த-5)

## தேசிய

றடைய வழியேற்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியது.

நாடாளுமன்றில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2016ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முதலாம் நாள் விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு வரவேற்று உரையாற்றினார். இதன் போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகள் வரவேற்கப்படக் கூடியதாகும். நாட்டின் பொருளாதார கொள்கைக்கும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்துக்கும் இடையே பெரும் இடைவெளி காணப்படுவது உணரப்படுகின்ற போதிலும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசு முற்பட்டிருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தாலும் அந்த நிவாரணங்கள் வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோரை சென்றடையுமா என்பதில் சந்தேகமாகவே உள்ளது. இது தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகிறது.

முன்மொழிவுகளின் சில விடயங்கள் எதிர்மறையானவையாக காணப்படுகின்றன. அரசிற்கான வருமானத்தை ஈட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உபாயமார்க்கங்களை எடுத்து நோக்கினால் அதனை ரொபின்ஹூட் வரவு-செலவுத் திட்டமா (உள்ளவர்களிடமிருந்து பறித்து இல்லாதவர்களுக்கு வழங்குவது) அல்லது காத்திரத் தன்மையுடையதான கொள்கைகளைக் கொண்டுள்ளதா? அல்லது பொருளாதார அடைவுகளை உள்வாங்கியுள்ள வரவு செலவுத் திட்டமா? என்றவாறான கேள்விகள் சூழ்ந்திருக்கின்றன. எவ்வாறிருப்பினும் நாட்டினதும், அரசினதும் வருமானத்தை ஈட்டிக்கொள்வதில் புதிய பொருளாதார பெரிய மார்க்கங்களை அரசு [illegible]ண்டறிய வேண்டும்.

[illegible]க்கு [illegible]க்கை மையப்படுத்தி 14 மில்லியன் ரூபா ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு அபிவிருத்தி எனும்போது வீதி, அமைப்பு, கட்டுமானம் என்பவற்றுடன் நின்றுவிடமுடியாது. அது அபிவிருத்தியாக அமையாது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு 14 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும், இது முறையாக பயன்படுத்தப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். 2016இல் வடக்கு-கிழக்கில் நன்கொடையாளர் மாநாட்டை அரசு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அழிவிலிருந்து மீண்டெழக்கூடிய நோக்கில் இந்த மாநாட்டை அரசு நடத்தும் என நினைக்கின்றேன். போரால் பாதிக்கப்பட்ட நிலையில், 6ஆண்டுகளாக இருந்து வரும் மக்கள் தொடர்பிலும் சிந்திக்கவேண்டும். எமது மக்களுக்கு பாரிய தேவைகள் உள்ளன. அபிவிருத்திகள் பொது மக்களை சென்றடையவில்லை. எமக்கு பெரும் தேவைகள் உள்ளன. இதற்குப் பெருந்தொகையான ஒதுக்கீடு தேவை. அந்த ஒதுக்கீடு எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும். என அந்த மக்களிடம் ஆலோசிக்கவேண்டும். அவர்களின் தேவை வித்தியாசமானது. அதற்கான பொறிமுறையை உருவாக்க அந்த மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஆலோசனை நடத்தவேண்டும்.

போர் முடிந்ததன் பின்னர் அந்த மக்களுக்கு வங்கிகள் கடன் வழங்கின. இந்த கடன் தற்போது மக்களுக்கு பெரிய பிரச்சினையாகி உள்ளது. கடன் பெறுவோர் எவ்வாறு அதை மீள செலுத்தவேண்டும் என்ற மதிப்பீடு இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்திய வீட்டுத்திட்டத்தில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுகின்றன. இதில் 25 ஆயிரம் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அந்த மக்கள் இந்த வீட்டை அடகுவைக்க வேண்டிய அளவுக்கு கடன் சுமைக்குள் சிக்கியுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு பெரும் தேவைகள் உள்ளன. இவை குறித்து சிந்திக்கவேண்டும். ஆலோசனை நடத்தவேண்டும். பொருளாதார பொறி முறை, கொள்கை உருவாக்க வேண்டும்-என்றார். (த-சி)

## தொண்டையில்

இருக்கவில்லை. நின்றிருந்த தாதியரும் ஆரம்பச் சிகிச்சைகூடச் செய்ய முற்படவில்லை என்று குற்றம் சுமத்தும் குழந்தையின் பெற்றோர், வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்புக் கூறவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் அல்லீன் வீதியைச் சேர்ந்த மனோகரன் ஜெனவன் என்ற ஒரு வயதுக் குழந்தையே உயிரிழந்தது.

நேற்றுமுன்தினம் தாயார் சம்பல் அரைப்பதற்காக வெங்காயம் உள்ளிட்ட பொருள்களை எடுத்து வைத்துள்ளார். தவண்டு வந்த குழந்தை வெங்காயம் வைக்கப் பட்டிருந்த பாத்திரத்தைத் தட்டிவிட்டது. அதனால் சிதறுண்ட வெங்காயத்தைத் தாயார் மறுபடி பாத்திரத்தில் எடுத்துச் சென்று சம்பல் அரைத்துள்ளார். ஆனால் சிதறுண்டு கிடந்தபோதே குழந்தை ஒரு வெங்காயத்தைக் கையில் எடுத்துவிட்டது. அதனைத் தாயார் கவனிக்கவில்லை போலும். அந்தக் குழந்தை கையிலெடுத்த வெங்காயத்தை வாய்க்குள் வைத்துள்ளது. அதன்போது அந்த வெங்காயம் குழந்தையின் தொண்டையினுள் சிக்கியதனால் சுவாசிக்க முடியாமல் திணறியுள்ளது. சம்பல் அரைத்துக் கொண்டிருந்தபோது குழந்தை திணறுவதைக் கண்ட தாயார் உடனடியாகக் குழந்தையைக் காரைநகர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்.

ஆபத்தான நிலையில் குழந்தையை வைத்தியசாலையில் சேர்க்கும்போது அங்கு மருத்துவர் இருக்கவில்லை. சுமார் 15 நிமிடங்களாக அங்கு மருத்துவர் வரவில்லை என்று குழந்தையின் பெற்றோர் குற்றம் சுமத்துகின்றனர். நின்றிருந்த தாதியர்களும் ஏற்ற ஒழுங்குகள் செய்யவில்லை. அங்கு கட்டிலில் குழந்தையைப் படுக்க வைத்திருந்தனர். பின்னர் அம்புலன்ஸில் குழந்தையை ஏற்றி யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அம்புலன்ஸில் பயணிப்பதற்கு அங்கு நின்றிருந்த தாதியர்கள் அக்கறை கொள்ளாது மறுத்துவிட்டனர். இதனால் அங்கு நின்றிருந்த சிற்றூழியர் ஒருவரே அம்புலன்ஸில் குழந்தையையும் பெற்றோரையும் ஏற்றிக்கொண்டு போதனா வைத்தியசாலைக்குப் புறப்பட்டார் என்றும் பெற்றோர் குற்றம் கூறினர்.

அதுமட்டுமன்றி குறித்த அம்புலன்ஸில் இரவு 10.30 மணியளவிலேயே பயணித்ததாகவும், அம்புலன்ஸின் உள்ளே மின்குமிழ் எதுவும் ஒளிரவில்லை எனவும், அதனால் கைத்தொலைபேசியின் வெளிச்சத்திலேயே குழந்தையை அவதானித்தவாறு பயணித்ததாகவும், எனினும் சிறிது தூரம் திணறிக்கொண்டிருந்த குழந்தை பின்னர் அசைவற்றுக் கிடந்ததாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கும்போது குழந்தை உயிரிழந்துவிட்டதாகப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டதாகவும் பெற்றோர் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். விசாரணையின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குழந்தையின் உயிரிழப்புக்கு வைத்தியசாலை நிர்வாகம் மீது பெற்றோர் குற்றம் சுமத்துவது தொடர்பில், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சம்பவம் தொடர்பில் தனக்குத் தெரிவிக்கப்படவில்லை. எனினும் அது தொடர்பில் விசாரிப்பதாகத் தெரிவித்தார். (த-4)

## இன்று

சிவில் சமூகத்தினரைச் சந்தித்துப் பேசவுள்ளார். இத னைத் தொடர்ந்து ஒரு மணியளவில் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்கு வருகை தரவுள்ளார்.

இறுதியாகப் பி.ப. 2 மணிக்கு யாழ்.பொது நூலகத்தைச் சுற்றிப் பார்வையிடவுள்ளார். இதன்போது கலாசார நடன வரவேற்புகளும் இடம்பெறவுள்ளது. பனை ஓலை சுவடிகளைப் பாதுகாப்பதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான அமெரிக்க அரசின் அறிவிப்பு ஒன்றையும் பொது நூலக நிகழ்வில் வைத்து வெளியிடவுள்ளார்.

இந்த நிகழ்வுகளை முடித்துக் கொண்டு மாலை 3.30 மணிக்கு கொழும்புக்கு அவர் திரும்பிச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## உறவுகளுக்கு

பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், மாவீரர் மயானங்களை புல்டோசர்களைக் கொண்டு அழித்தமை மிகவும் பாரதூரமான விடயம் என்றும் குற்றஞ்சாட்டினார்.

2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தை நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே இதனை வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் கூறுகையில்,

உயிர்நீத்த வீரர்களை நினைவுகூரும் முக்கிய மாதம் நவம்பர். இலங்கையில் தேவையற்ற போரில் உயிர் நீத்த ஒவ்வொரு சிங்கள, தமிழ், முஸ்லிம் வீரர்களையும் நாம் நினைவுகூர வேண்டும். அதனால்தான் நான் நவம்பர் மாத ஆரம்பத்தில் என் ஆடையில் பொப்பி மலரைக் குத்தினேன்.

இதேவேளை, இவ்வாறு தமிழ் மக்கள் போரால் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளனர். இதற்கான உரிமை அவர்களுக்குண்டு. எனவே, அவர்கள் தமது பிள்ளைகளின் உறவுகளின் கல்லறைகளில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்த அரசு அனுமதிக்கவேண்டும்.

தமிழ் மக்கள் பிரிவினையைக் கேட்கவில்லை. உங்கள் கொள்கைக்கு அவர்கள் வாக்களித்துள்ளனர். எனவே, அனுமதி வழங்கவேண்டும். நான் வடமராட்சியிலுள்ள எள்ளங்குளம், உடுத்துறை மாவீரர் மயானங்களைச் சென்று பார்த்தேன். அங்குள்ள மாவீரர் கல்லறைகள் எல்லாம் புல்டோசர்களைக்கொண்டு அழிக்கப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமான விடயம்-என்றார்.

## முன்னாள்

பெற்ற முன்னாள் போராளியான வீரசிங்கம் தனபாலசிங்கம் (வயது-40) மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த குடும்பஸ்தர் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் நேற்றுச் சனிக்கிழமை காலை கடற்றொழிலுக்குச் செல்லுவதற்காக நேற்றுச்- சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் வீட்டுக்கு வெளியே வந்துள்ளார்.

இந்த நிலையில் வீட்டு முற்றத்தில் காணப்பட்ட மரத்தில் [illegible] கட்டப்பட்டிருந்த ஊஞ்சல் [illegible] கழுத்தில் சுற்றப்பட்ட நிலையில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக இலுப்பைக்கடவைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். பின் சடலம் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாகப் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. குறித்த நபர் முன்னாள் போராளியாக இருந்து பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் எனக் கூறப் பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை குறித்த மூன்றாம் பிட்டி கிராமத்தில் ஒரு இளைஞனை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் குறித்த இளைஞன் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த தாக்குதல் சம்பவத்தை சடலமாக மீட்கப்பட்ட முன்னாள் போராளியான வீரசிங்கம் தனபாலசிங்கம் நேரில் கண்டுள்ளதாகவும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட இலுப்பைக்கடவைப் பொலிஸார் குறித்த இளைஞனைத் தாக்கிய மூன்றாம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்களையும் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்துள்ளனர். (த-56)

## பாதுகாப்பற்ற

திலேயே உயிரிழந்தார். அதில் பயணித்த ஏனைய 3 பேரும் படுகாயமடைந்து மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சொகுசுக் காரை சுமார் 350 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சென்று நசித்து நின்றது ரயில். யாழ். கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பாதுகாப்பற்ற கடவையில் குறித்த விபத்து நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம் பெற்றது.

அந்தக் காரில் பயணித்தவர்களில் ஒருவரான செல்லர் வீதி, நல்லூரைச் சேர்ந்த வில்வராஜா சுதாகரன் (வயது- 41) என்ற பொறியியலாளரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவர் 2 குழந்தைகளின் தந்தை. கம்பதாசன் (வயது- 23), அரவிந்தன் (வயது-27), ஆதவன் (வயது-28) ஆகிய 3 பேரும் சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த கடுகதி ரயில் கல்கிசையில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதேநேரம் நல்லூரில் இருந்து கச்சேரியை நோக்கிச் சொகுசுக் கார் சென்றுகொண்டிருந்தது. அதன்போதே கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் காரை அடித்துத் தூக்கியது ரயில். அவ்வாறு தூக்கிய காரை சுமார் 350 மீற்றர் தூரத்துக்கு இழுத்து முதலமைச்சரின் அலுவலகம் உள்ள சோமசுந்தரம் வீதி வரை சென்று வேகத்தைக் கட்டுப்படுத்தி நின்றது ரயில். அதனால் சொகுசுக் கார் நசிந்து சிதைந்தது.

விபத்து நடைபெற்றபொழுது ரயில் வருவதற்கான எச்சரிக்கை ஒலியும் சிவப்பு விளக்கும் எரியவிடப்பட்டிருந்ததாக ரயில் நிலைய ஊழியர்களும் அந்த இடத்தில் நின்றிருந்தவர்களும், குறித்த பகுதி மக்களும் தெரிவிக்கின்றனர்.

விபத்து இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்புக் கடவைக்குரிய இரும்பினாலான தடை போடப்பட்டிருக்கவில்லை. ஏனைய சில இடங்களில் உள்ளது போன்று அந்த இடத்திலும் பாதுகாப்புக் கடவை பூரணமான பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறிய அங்கிருந்த மக்கள், அதனை இன்றுவரை செய்யாதது குறித்து விசனமும் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்றதும் அந்த இடத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கூடி விட்டனர். சம்பவம் பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் பறந்தது. 15 இற்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு வந்தனர். விபத்தையடுத்து 4 பேரையும் அங்கு நின்றிருந்த வாகனங்கள் உடனடியாகவே யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு விரைந்தன. எனினும் பொறியியலாளர் ஏற்கனவே உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் உறுதிப் படுத்தப்பட்டது.

பின்னர் சிதைந்த காரை பொலிஸாரும் பொது மக்களும் சேர்ந்து தண்டவாளத்திலிருந்து அகற்றினர். அதன் பின்னர் ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்தது.

## ஐஸ்கிறீம் மெசின் விற்பனைக்கு

ஓட்டோமெற்றிக் மிக்சர் கொம்பிறசர் (Germany) 8 லீற்றர் ராங்குடன் மற்றும் இங்கு தயாரித்து பாவனையில் உள்ள ஐஸ்கிறீம் பிறிச் ஒன்றும் அதே அளவில் சர்பத் மற்றும் குளிர்பானம் பாவனையில் உள்ள பிறிச் ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 648 7264 (66266) (12.15)

## வான் விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள Toyota - Hiace - HaighRoof 252 - XXXX விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 330 5344

## Build your Career & Be Part of a Growing Team

Calling All School Leavers

### Trainee Sales & Marketing Executives

We offer exciting income potential and career growth opportunities, that's why, ETL Worldwide is represented by over 3,000 executives in 21 countries worldwide, with over 50 million customers, we are expanding our operations in Sri Lanka and are looking for YOUNG and positive minded individuals to join our team.

**Requirements**

- Must have lots of energy and be a positive minded individual. If you are lazy then don't bother applying.
- Willing to learn the job and work hard towards achieving goals.
- Must be good in communication either in Tamil or English
- Studied upto GCE A/L and passed the GCE O/L examination.
- Age preferably 18 and above but not more than 30 Years

**Benefits**

- You can earn over Rs.50,000/- per month.
- We will pay you a Basic Salary, Travelling Allowance and provide you cash incentives and commissions.
- You also have the opportunity to travel overseas through our Annual Overseas incentives.
- If you are one of top achievers, you will get an opportunity to participate at Our Annual Achievers Conference.
- You will be class room trained by our Senior Manager and subsequently trained on the job on a daily basis.
- If you possess leadership qualities and a high achiever, you will be absorbed to the Management Trainee position within 6 - 9 months of your employment.



Call us or send your CV to schedule an interview

Branch Manager - Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130

ASS Managers -
Mr.Arun Selventhirakumar
077 363 9755
Mr.Simson
077 242 7924

No.100.2nd floor
Manipay Road, Jaffna.
Jaffnapioneerhouse@gmail.com

## மலேசியாவில் வேலை

| சுப்பமார்கட் | பிளாஸ்ரி கம்பனி | பிரின்ரிங் கம்பனி |
|---|---|---|

சம்பளம் : 45,000-55,000 2கிழமையில் வீசா

பிளஸ் ஜொப்ஸ் 32A 2/1 2வது மாடி, ராஜ வீதி, மாத்தளை | 066 5 678675 076 8 587475

## கணக்காளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல தொழில் நிறுவனத்திற்கு கணக்கியல் அனுபவம் மற்றும் கல்வி தகைமையுடைய 35 வயதிற்கு மேற்பட்ட ஆண் கணக்காளர் தேவை.(அடிப்படைச் சம்பளம் 30000/= விற்கு மேல்) விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் கல்வித்தகைமைக்குரிய சான்றிதழின் பிரதியை இணைத்து 30.11.2015 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல: 5081
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(66249) (14.15.17)

## THILEEP CIVIL CONSTRUCTION

நவீன முறையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் கட்டிக் கொடுக்கப்படும். றெறாசோ, கட் அன்ட் பினிஸ், ரைற்றானியம் ஆகிய வேலைகள் சிறந்த முறையில் குறித்த காலத்தில் செய்து தரப்படும்.

(66250)(14.15.16)

தொடர்பு: 077 707 8229, 076 704 0214

## நிறைபணி நிறைவிழா அழைப்பு




மேனாள் அதிபர்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
உயர்திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம்

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 22.11.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப. 09.00 மணி
தலைமை: திரு.கோ.ஜீவபாலன்(பழையமாணவன்)

உளம் கனிந்து உவந்து அழைக்கின்றோம்.

(66261)(12.15.17) ஒன்றித்த நாவற்குழியூர் சமூகம்

## மகிந்தவிடம் மீண்டும் டிசெ. 17 விசாரணை

கொழும்பு, நவ.22

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் நேற்று முன் தினம் பெரும் நிதி மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு வாக்குமூலத்தைப் பதிவு செய்திருந்தது. என்றாலும், விசாரணைகள் முழுமை பெறாத தன் காரணமாக அவரை மீண்டும் டிசெம்பர் 17ஆம் திகதி ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கு ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியின்போது விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தைச் செலுத்தாமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கே மகிந்த ராஜபக்ச, பெரும் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்காக நேற்று முன்தினம் அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகள் முடிவில் மகிந்த ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

நாட்டில் பல வருடங்களாக பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்தவர்களை எமது அரசு சிறைப்பிடித்தது. ஆனால், தற்போதைய அரசு பயங்கரவாதிகளை விடுதலை செய்து வருகின்றது. அதுமாத்திரமன்றி, தமது உயிரைப் பணயம் வைத்து பயங்கரவாதத்தை இல்லாதொழித்த இராணுவச் சிப்பாய்களை அரசு சிறைப்பிடித்து வருவதுடன், நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து, சமாதானத்தை உருவாக்கிய எம் மீது போலியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றது- என்றார்.

ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த வியாழக்கிழமை மகிந்த ராஜபக்சவிடம் விசாரணைகளை நடத்தவிருந்த நிலையில், அவர் அன்றைய தினம் சமுகமளிக்கவில்லை. அவர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணியும், அவரது புதல்வருமான நாமல் ராஜபக்சவின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று முன்தினம் விசாரணைகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-ஸ்ரீ)

## Lovers Corner

நாளை கோலாகலமாக திறக்கப்படவுள்ளது

காகில்ஸ் சதுக்கத்தில்
New Lover's Corner இன்
3 ஆவது Beauty Parlour (பியூட்டி பாலர்)

### திறப்பு விழா

நாளை (23.11.2015) திங்கட்கிழமை ந.ப. 12.11 - ந.ப. 12.29 வரையுள்ள சுப நேரத்தில் எமது 3ஆவது அழகுகலை நிலையத்தை (பியூட்டி பாலர்) அதி நவீன வசதிகளுடன் யாழ்ப்பாணத்தில் காகில்ஸ் சதுக்கத்தில் திறக்கவுள்ளது. இந்த நிகழ்வுக்கு எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நாளைய தினத்தில் இருந்து 23.12.2015 வரை 1000/- இற்கு மேல் அழகு சேவையைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு 15% விலை கழிவு வழங்கப்படும் என்பதையும் மிகவும் அனுபவமுள்ள நேர்த்தியான அழகு கலை நிபுணர்களால் சேவை வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- எமது சேவைகள் சில -

- மணப்பெண் அலங்காரம்
- முடி ஸ்ரேட்டறிங் பேர்மிங்
- கெயார்கட் கெயார்கலர்
- கால் கை நக ஒப்பனை

மற்றும் Facial ரீட்மென்ட்



அத்துடன் திருமண வைபவங்கள் மற்றும் பூப்புனித நீராட்டு விழாவிற்குரிய சகலவிதமான மணப்பெண் நகை ஆபரணங்களை எமது எந்தவொரு கிளையிலும் மலிவாக வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம். (அண்மையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை)

அருகில் உள்ள எமது Lover's Corner கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

**New Lover's Corner & Beauty Parlour**
No:12, 1ஆம் மாடி, காகில்ஸ் சதுக்கம், யாழ்ப்பாணம்.
021 222 3020 021 222 7070

New Lover's Corner & Beauty Parlour
No:4, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
021 225 6444

New Lover's Corner & Beauty Parlour
No:9, கனகபுரம் வீதி, உதயநகர், கிளிநொச்சி.
021 228 5111

## Celltronics

ஆண்டு இறுதி மாபெரும் மலிவு விற்பனை

2 வருட உத்தரவாதம்




எமது காட்சியறையில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு தொலைபேசிக்கும் 1000 ரூபா Gift வவுச்சர் இலவசமாக வழங்கப்படும்.

கீழ் உள்ள எமது காட்சியறைக்கு விரையுங்கள்

Celltronics இல.127, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3393 www.celltronics.lk

கிளைகள்:- கண்டி : 081 2238 538 கொழும்பு : 011 2 574475

# துறைமுக அபிவிருத்தி; மைத்திரி அரசின் பட்

**அவரது உரை நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கே பிரசுரமாகிறது**

கடற்றொழிற் கைத்தொழிலுக்கு வசதியளிப்பதற்காக, குளிரறைகளைக் கொண்ட களஞ்சியங்களுடனான நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட உள்நாட்டு மீன்பிடித்துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கும், தரமுயர்த்துவதற்கும் நான் முன் மொழிகின்றேன். மேலும், சிலாபம், மிரிஸ்ஸ, கல்முனை, வல்வெட்டித்துறை, காரைநகர் மற்றும் புராணவெல்ல ஆகிய இன்னோரன்ன மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 750 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் மொழிகின்றேன்.

இவ்வாறு நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் துறைமுகங்கள் மீன்பிடிப் படகுகளைத் திருத்துவதற்கும், தயாரிப்பதற்குமான வசதிகளையும் மேற்கொள்ளும். விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் இடங்களுக்கு அண்மையில் அதனுடன் இணைந்த விவசாய மற்றும் மீன் பதப்படுத்தும் வசதியளிப்புக்களை உருவாக்குவதற்கும் முன் மொழிகின்றேன். இந்த வசதியளிப்புக்களைப் பகிர்ந்து கொள்வதனால் அவை கிரய வினைத்திறனை உடையதாக இருக்கும். மேலும், அனுராதபுரம், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை இணைத்து விவசாய கால்நடை மற்றும் மீன் பதப்படுத்தும் பூங்காக்களை உருவாக்குவதற்கும் முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

நன்னீர் மீன் வளர்ப்பானது உணவுப் போசாக்கை வழங்குவதோடு வருமானத்திற்கான ஒருமூலமாகவும் விளங்குகின்றது. இத்துறையானது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு துறையாகவும் விளங்குகின்றது. எனவே, மீன் இனப்பெருக்கத் திறனை விருத்தி செய்யவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவ்வதற்கு தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

**கிராமியப் பொருளாதார மீளெழுச்சி**

எமது பொருளாதாரக் கொள்கையின் மைல்கற்களில் ஒன்றாக விளங்குவது. கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகும். இது தொடர்பாக கிராமியப் பொருளாதார அலகுகளைப் பூர்த்தி செய்வதற்காக 14,022 கிராம அலுவலர் பிரிவுகள் 2,500 கொத்தணிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படும். அதற்கிணங்க, கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் இக்கிராமங்களின் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். விவசாயிகளும் அங்கத்தவர்களாகக் கூடிய பெரிய அளவிலான கருத்திட்டங்களும் இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்ளடக்கப்படும்.

இந்தக் கிராமிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூபா 1.5 மில்லியன் வீ த ம் ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன். இதற்குச் செலவாகும் மொத்த நிதி ரூபா 21,000 மில்லியன்களாகும்.

அதேபோல, வவுனியாவில் புதிய பொருளாதார வலய மொன்றையும் ஸ்தாபிப்பதற்கு முன் மொழிவதோடு, அதற்காக, கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு ரூபா 200 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

**தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்**

அனைத்து உயிர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு, ஜனாதிபதியினால் 3 ஆண்டுகளுக்கான தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதான செயற்பாடுகளுக்குள் வன வளங்களைப் பாதுகாத்தலும், அபிவிருத்தி செய்தலும், சுற்றாடல் மாசுபடலைக் கட்டுப்படுத்தலும், நிலையான நில முகாமைத்துவம், உயிர் வளங்களின் பாதுகாப்பு போன்றனவும் உள்ளடக்கப்படுகின்றன. இந்நடவடிக்கைகளுக்காக ரூபா 2,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழில்**

நாம் முன்னோடிகளாக விளங்கும் அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலை பெரியளவில் அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. நான் தனியார் துறையை, விசேடமாக இந்த நாட்டின் இளைஞர்களை இக்கைத்தொழிலில் ஈடுபடுமாறு ஊக்குவிக்க விரும்புகின்றேன். அதே போல, இந்தக் கைத்தொழிலில் வியாபாரத்தை ஆரம்பிப்போருக்கு சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளை வழங்குவதற்கும் முன் மொழிகின்றேன்.

**தங்கம்**

தங்க ஆபரணக் கைத்தொழிற்றுறை விரைவான நடவடிக்கையாக, முக்கியமாக தங்கத்தின் விலை தொடர்பாக எதிர்பார்க்கின்றது. இதனால் நான் மத்திய வங்கிக்கு சுமார் 50 இறக்குமதி வரிச் சலுகையுடனான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திட்டமொன்றை முன்னெடுக்குமாறு பரிந்துரைக்கின்றேன்.

**ஆரம்பக் கைத்தொழில்கள்**

முதன்மைக் கைத்தொழில்கள் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக ஏற்படக் கூடிய விலை ஏற்றத் தாழ்வுகளுக்கு உள்ளாகின்றன. எனவே, இக்கைத்தொழிலிலுள்ள நிபுணர்களை உள்ளடக்கிய முதன்மைக் கைத்தொழில் சபையொன்றை நிறுவுவதற்கு முன்மொழிகின்றேன்.

**பொருளாதாரத்தை டிஜிற்றல் மயமாக்கல்**

டிஜிற்றல் மயப்படுத்தல் இன்று பல நாடுகளில் பிரபல்யமடைந்துள்ள ஒரு செயன்முறையாகும். இது தரவுகளைச் சேகரித்தல், தரவுகளை நிரற்படுத்தல் முறைமைகளின் ஊடாக மேலதிக வருமானங்களை உழைப்பதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளது. ஆகவே, இந்தச் செயல்முறையின் ஊடாக இலங்கையானது தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகின் ஏனைய பல்வேறுபட்ட அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஒத்ததாகவே, தொழில்நுட்ப முன்னேற்றத்தில் அடுத்த கட்டத்தை அடைவதற்கான நிலையில் உள்ளது.

அதே போன்று, எமது சகல அரச துறைப் பல்கலைக்கழகங்களிலும், இலவச வை-பை வசதிகள் வழங்கப்படும். அத்துடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள், பிரதேச சபைகள், உப தபால் நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள் உள்ளடங்கலாக சகல அரச கட்டடங்களும் இலத்திரனியல் ரீதியாக இணைக்கப்படும். இதன் மூலம், அவர்களின் நாளாந்த வேலைகளில் 70 சதவீதத்தை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

தேசிய எண்ணியல் அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்கும் நாம் முன் மொழிகின்றோம். அதன் மூலம் சகல நிதிசார் மற்றும் நிதி சாராத எண்ணியல் கொடுக்கல் வாங்கல்களை மிகவும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளலாம் என்பதை உறுதிப்படுத்த முடியும். கடவுச்சீட்டு, வரிக்கோவை, சுங்கப் பத்திரங்கள், வாகனப்பதிவு, வாக்காளர் பதிவு, நலன்புரிப் பதிவுகள், வங்கித் தகவல்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டு பற்றுச்சீட்டுக்கள் என்பவற்றைக் கொண்டதாக தேசிய எண்ணியல் அடையாள அட்டை தனித்துவமான இலக்கத்தைக் கொண்டதாக இருக்கும். இது வரி சேகரிப்புக்குப் பயன்படுவதற்கு மேலதிகமாக ஊழல், தாமதம், வீண் விரயம் என்பவற்றைக் குறைப்பதோடு வினைத்திறனைக் கூட்டுவதுடன் நலன்புரிக் கொடுப்பனவு போன்ற ஏனைய முறைமைகளையும் சீர்படுத்த உதவும்.

எமது எண்ணியல் உபாயமானது, தேசிய கொடுப்பனவுத் தளமொன்றை அறிமுகப்படுத்தலை உள்ளடக்குவதோடு, இதன் மூலம் அவர்களது தேசிய எண்ணியல் அடையாள அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் தனது கையடக்கத் தொலைபேசியின் ஊடாகத் தான் பெற்றுக் கொண்ட பொருள்களுக்கும் சேவைகளுக்கும் தமது வங்கிக் கணக்குகளின் ஊடாகப் பணத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. தேசிய கொடுப்பனவுத் தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் சந்தையின் பணப் புழக்கமும், பண மிதப்பும் குறைக்கப்படுவதன் மூலம் வினைத்திறனை விருத்தி செய்வதன் மூலம் அரசுக்கான சேமிப்புக்களைக் கொண்டு வர முடிகின்றது.

மருத்துவமனை சேவைகள், காணி விடயங்கள், சமுர்த்திக் கொடுப்பனவு உள்ளடங்கலாகப் பொது மக்களை அடிப்படையாகக் கொண்ட பொதுச் சேவைகளை வழங்குவதில் தேசிய எண்ணியல் அடையாள அட்டையுடன் ஒன்றிணைப்பதற்கான ஒரே கூரையின் கீழான எண்ணக் கருவை நடைமுறைப்படுத்த நாம் எண்ணுகின்றோம். அரச காணிகளை முகாமைத்துவம் செய்யும் முறைமை மற்றும் காணிக் கேந்திர முறைமை ஆகியனவும் ஒரே கூரையின் கீழான எண்ணக் கருவின் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தப்படும்.

வகுப்பறைக்குள் கற்பிக்கும், படிக்கும் செயற்பாடுகளுக்குத் தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை பலப்படுத்தும் நோக்கு டன் கல்வி அமைச்சினால் கருத்திட்டங்கள் பல திட்டமிடப்பட்டுள்ளன. இங்கு பிரதான நடவடிக்கையாக 2016 ஆம் ஆண்டில், 200 ஸ்மார்ட் எண்ணியல் வகுப்பறைகளும், 2017 ஆம் ஆண்டில் 1000 வகுப்பறைகளும் ஆரம்பிக்கப்படும்.

அரசு திறந்த அரச பங்கேற்பிற்காகத் தன்னை அர்ப்பணித்துள்ளதோடு, தேசிய தரவுத் தளமொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு திறந்த அரச பங்கேற்புக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் ஆதரவளிக்கும்.

பொருளாதார எண்ணியலாக்க முறைமைக்காக ரூபா 10ஆயிரம் மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் பிரேரிக்கின்றேன்.

**முதலீட்டு ஊக்குவிப்பு**

2014 ஆம் ஆண்டில், வெளிநாட்டு நேரடி முதலீடு 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததோடு, இது சந்தேகத்துக்கு இடமின்றி வலயத்தின் சமனான நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது.

உபாய ரீதியான வரைபடத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றோம். இந்த முயற்சியில், எமது அரசு செயற்பாட்டு வினைத் திறனை விருத்தி செய்தல் மற்றும் முதலீடுகளுக்கு வசதியளித்தல் போன்ற இன்னோரன்ன நோக்கங்களுடன் முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகியனவற்றை மீள்கட்டமைக்கவுள்ளது. மீள்கட்டமைப்புச் செயன்முறையானது முடிவுறும் வரை அபிவிருத்திக்கான நிறுவனம் என்ற பெயரின் கீழ் ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்படும்.

எமது நாடு இப்போது வர்த்தகத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. பிரதமர் அவர்களினால் இந்த நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட கூற்றின் பிரகாரம், நாட்டின் முதலீட்டுச் சூழ்நிலையை விருத்தி செய்வதற்கு அவசியமான சட்டங்கள் ஏற்கனவே வரையப்பட்டு வருகின்றன. நல்லாட்சிக்கான எமது அர்ப்பணிப்புக்களின் காரணமாக பிரதான முதலீட்டாளர்கள் இந்த நாட்டில் முதலீடு செய்வதற்கு மிகுந்த ஆர்வத்தைக் காட்டியுள்ளனர்.

2 பில்லியன்அமெரிக்க டொலர் களுக்கு அதிகமான முதலீடு கிடைக்கக் கூடிய விசேட துறைகளாக பின் வரும் துறைகளை நாம் இனங் கண்டுள்ளளோம். எண்ணெய் சுத்திகரிப்பு, புத்தாக்கச் சக்தி, ஒன்றிணைக்கப்பட்ட மோட்டர் வாகனங்களின் தயாரிப்பு, பிராந்தியத்திற்கான உருக்குப் பாலங்களின் தயாரிப்பு, உரம், ட்றிபின் சுப்பர் பொஸ்பேற் தயாரிப்பு, செயற்கைக்கோள் தொழில்நுட்பம், விமானங்களின் திருத்தங்களும், அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆதரவுச் செயற்பாடுகளும், ஒன்றிணைக்கப்பட்ட சீனிக் கைத்தொழில். இந்த நிலைமையில் முதலீடுகளைக் கவர்வதற்குள்ள ஒரு சில தடைகள் பின்வருமாறு:-


வெளிநாட்டவர்களுக்கு காணியைக் குத்தகையாக வழங்கும் போது விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்குவதற்கும் நான் பிரேரிப்பதோடு, காணிகள் கைமாற்றல் வரையறைச் சட்டத்தின் ஊடாக விதிக்கப்பட்ட இனங் காணப்பட்ட முதலீடுகள் மீதான உரித்தின் மீதான தடைகளை நீக்குவது தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கும் முன் மொழிகின்றேன்.

முதலீட்டுச் சபைகளுக்குப் பதிலாக நிறுவப்படும் அபிவிருத்திக்கான நிறுவனம் வெளிநாட்டு முதலீட்டுக்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 50 நாள்களுக்குள் வர்த்தகத்தை ஆரம்பிப்பதை உறுதிப்படுத்தும். முதலீட்டு மேம்பாட்டுக்கு இது சந்தேகமின்றி நெகிழ்வான ஒரு பிரவேசமாக அமையலாம்.

அதிகளவிலான முதலீடுகளைக் கவர்வதற்கும் தக்க வைத்துக் கொள்வதற்கும் தற்போது உள்ள ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை நவீனமயப்படுத்தல் அத்தியாவசியமாக உள்ளது. எனவே, இவ்வலயங்களை முகாமைத்துவம் செய்வதற்



# தி; மீன்பிடிக்கு வசதிகள்
# ஜெட்டில் முன்மொழிவு



காக, தேவையான நிபுணத்துவமுள்ள தனியார் துறை முகாமைத்துவக் கம்பனிகளுக்கு ஒப்படைப்பதற்[illegible] நான் முன் மொழிகின்றேன். முதலீட்டுச் சபையும் புதிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் இந்தப் புதிய வலயங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகளும் தனியார் துறைக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்படும்.

**காணி**

அரச காணிகளின் பயன்பாட்டை உச்சப்படுத்தும் மற்றும் அரச காணிகள் தொடர்பாக முறையற்ற கொடுக்கல் வாங்கல்களை ஒழிக்கும் நோக்கில் ஒரு காணி வங்கியை அறிமுகம் செய்வதற்கு முன் மொழிகின்றேன். இது அரசுக்கு உரிமையான காணிகள் தொடர்பான இலத்திர[illegible]யல் தரவுத் தளத்தையும் கொண்டதாகும். இந்நடவடிக்கைகளுக்காக நான் ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் இலத்திரனியல் தரவுத்தளத்திற்கு இத்தகவல்கள் உடனடியாக மாற்றப்படுவதை உறுதி செய்யும். அதன் பின்பு இத்தரவுத் தளம் தனியாருக்குச் சொந்தமான காணிகளின் தரவுகளை உள்வாங்கிக் கொள்ள முடியும்.

**வீடமைப்பு**

இந்த அனைவருக்கும் இருப்பிட வசதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாத மற்றும் குறை பாவனையுடைய அரச காணிகள் விடுவிக்கப்படும். சேரி வாழ் மக்கள் எதிர் கொள்ளும் வெளிப்படுத்தப்படாத கஷ்டங்களை நான் நன்கு அறிந்தவன். இப்பிரச்சினையானது சாதி, இனம், மதம் மற்றும் பொருளியல் என்பவற்றுக்கும் அப்பால் சுகாதாரம், கல்வி, சமூக அபிவிருத்தி, என்பவற்றில் மட்டுமல்லாமல் அரசியலிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. ஆகவே, நாட்டின் பிரஜைகளான அவர்களது பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்வது எமது கடமையாகும்.

எனவே, எதிர்வரும் 5 ஆண்டுகளில் அரச, தனியார் பங்குடமையின் கீழ் சேரி வாழ் மக்களுக்கு 100,000 வீட்டு அலகுகளை நிர்மாணித்து வழங்குவதற்கு முன்மொழிகின்றேன். அதேவேளை, மீள் குடியமர்த்தலின் போது அவர்களது வாழ்வாதாரம் மற்றும் சமூக வலையமைப்பு பாதிப்புக்குள்ளாகாது என்பதும் உறுதி செய்யப்படும்.

தனியார் துறையின் பங்களிப்புடன் நடுத்தர மட்ட அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு 150,000 வீட்டு அலகுகளையும் அரச சிரேஷ்ட ஊழியர்களுக்காக 5,000 வீட்டு அலகுகளையும் நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு திட சங்கற்பம் பூண்டுள்ளது.

இந்த வீடுகளானது கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி,மாத்தறை, மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்படும். அரச ஊழியர்கள் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகள், செய்து கொடுக்கப்படுவதோடு, தனியார் துறை முதலீட்டாளர்களுக்கு அரை வரி விடுமுறை பெற்றுக் கொடுக்கப்படும். இந்த வீட்டு அலகுகளைச் சுற்றி ஏனைய சமூக அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் எமது அரசு புதிய கிராமிய வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசானது செலவினை குடியிருப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும். 500 சதுர அடி நிலப்பரப்பைக் கொண்ட வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு அரசு அதிகபட்சமாக ரூபா300,000 ரூபாவை கட்டம் கட்டமாக பெற்றுக் கொடுக்கும். ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் குறைந்த பட்சம் 5,000 வீடுகளையாவது நிர்மாணிக்கும். இதற்காகரூபா 4,500மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், சுவர்ண பூமி மற்றும் உதாகம ஆகியனவற்றின் கீழ் காணி மற்றும் வீடுகளை பெற்று அனுமதிப்பத்திரத்துடன் 10 வருடங்களுக்கு மேல் குடியிருந்தவர்களுக்கு அவற்றின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இந்த விதி விலக்கானது 10 வருடங்களுக்கு மேல் அரச வீடுகள் மற்றும்பெருந்தோட்டத்துறை வீடுகளில் வாழ்பவர்களுக்கும் விரிவாக்கப்படும்.

வெவ்வேறு உள்ளூராட்சி சபைகள் வெவ்வேறு வகையான சொத்து வரிகளை நடைமுறைப்படுத்துவது வரி செலுத்துபவர்களுக்கு மிகுந்த பாதிப்பினை கொடுக்கின்றது. எனவே உள்ளூராட்சி சபைகளின் வரி அறவீடுகள் வருடாந்த வர்த்தக பெறுமதியில் 15 சதவீதத்தை மீறுதல் கூடாது என்பதனை நான் முன்மொழிகின்றேன். மேலும் வருடாந்த சொத்து மதிப்பு ரூபா 500 அல்லது அதற்கு குறைந்ததாக இருந்தால் வரி விலக்கு அளிக்கவும் நான் பரிந்துரைக்கின்றேன்.

மின்சக்தி சேமிப்பினை ஊக்கப்படுத்துவதற்காக வீட்டுரிமையாளர்களை சூரிய சக்தியை பயன்படுத்துவதற்கும் அதன் மூலம் வரித் தேவைகளிலே கணிசமான வரிக் குறைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நான் ஊக்கப்படுத்துகிறேன்.

தற்போதைய நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் நடைமுறையில் உள்ள வாடகை மற்றும் வீட்டு ஆதனங்கள் மீதான வரையறை தொடர்பான சட்டங்கள் மீளாய்வு செய்யப்படும். மேலும் கூட்டு ஆதனங்களில் முதலிடும் வெளிநாட்டவர்களுக்கு உள்ளூர் வங்கிகளினூடாக உள்ளூர் பணத்தில் ஆதனத்தின் 40 சதவீத பெறுமானமுள்ள கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

**நிர்மாணத் துறை**

உள்ளூர் நிர்மாணக் கைத்தொழில் துறையின் கடந்த தசாப்தத்தில் அவர்களின் செயலாற்றுகை தொடர்பாக பாராட்டுகிறேன். இந்தக் கைத்தொழில் துறையானது வெளிநாடுகளில் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய அளவில் முதிர்வு அடைந்துள்ளது. எமது அரசானது இவ்வாறான தொழில் முயற்சிகளில் பங்கு கொள்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஆகவே,வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முயலும் கம்பனிகளுக்கு அவை இலங்கைக்கு வெளியில் உழைக்கும் வருமானங்களுக்கு பாதி விகிதம் உட்பட பல வரி நலன்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. மேலும், இலங்கையின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக உள் வரும் எந்த ஒரு வெளிநாட்டுக் கம்பனியும் உள்ளூர் நிர்மாணக் கம்பனிகளுடன் கட்டாயம் கூட்டு முயற்சியை உருவாக்குதல் வேண்டும்.

நிர்மாணக் கைத்தொழில் துறையானது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது கடும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இதனால், சிறிய நிறுவனங்களின் தொடர் செயற்பாடுகள் பாதிப்படைந்து வங்குரோத்து நிலையை எதிர்நோக்குகின்றது. ஆகவே, நான் கொடுப்பனவு உத்தரவாத பாதுகாப்புச் சட்டத்தை முன் மொழிகின்றேன். இது அவர்கள் நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு போதுமான உறுதியை அளிக்கும்.

இரும்பு,பீங்கான், ஓடு, சுகாதார உபகரணங்கள் போன்ற கட்டட நிர்மாணப் பொருட்கள் உயர் விலை மற்றும் பற்றாக்குறையை நீக்கும் முகமாக இவற்றின் இறக்குமதியுடன் தொடர்பான கட்டணங்கள் கீழ் நோக்கிச் சீராக்கம் செய்யப்படும். மேலும், இலங்கை முதலீட்டுச் சபையின் எதிர்மறை நிரலில் இருந்து பீங்கான், ஓடு, கூரைத் தகடு, மற்றும் மலசல கூட உபகரணங்கள் நீக்கப்படும்.

பாரம் தூக்கிகள்,கொங்கிறீட் கலவை இயந்திரங்கள், மீதான இறக்குமதிக் கட்டணங்கள் நீக்கப்படும். மேலும், அதிக பாரம் கூடிய நிர்மாணத் துறை இயந்திர சாதனங்கள் மீதான இறக்குமதி வயதுக் கட்டுப்பாடு தற்போது 7 வருடங்களிலிருந்து 10 வருடங்களாக அதிகரிக்கப்படும்.

ரூபா 50 மில்லியனுக்கும் குறைவான அரச பெறுகை ஒப்பந்தங்கள் மீதான சிறிய மற்றும் நடுத்தர நிர்மாண ஒப்பந்தங்களுக்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். இதன் மூலம் அவர்களது காசுப்பாய்ச்சலை மேம்படுத்த முடியும்.

கட்டட நிர்மாணத் துறையில் திறன் கொண்ட தொழிலாளர்களுக்கு உயர் கேள்வி காணப்படுகின்றது. ஆகவே, அரச தனியார் பங்குடமை அடிப்படையில் தனியார் துறை நிர்மாணக் கைத்தொழில் நிறுவனங்களினால் தொழில்சார் நடைமுறைப்பயிற்சி அளிக்கப்படும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபா 10,000 அரசினால் மூன்று மாதங்களுக்கு பயிற்சிக் காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படும். இதன் கீழ் ஒவ்வொரு காலாண்டிலும் மேசன், தச்சு, குழாய் பொருத்துகை, மின்னியல், மற்றும் அலுமினியம் இணைப்புத் துறைகள் சுமார் 7,500 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவர். இதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**சுற்றுலா**

சுற்றுலாத்துறையானது நாட்டின் பொருளாதாரத்தில் மிகவும் உறுதியான ஒரு துறையாக தொடர்ந்து காணப்படுகின்றது. இது 2015 ஆம் ஆண்டின் முதல் 10 மாத காலப்பகுதியில் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 18 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், எமது நாட்டை நாம் உரிய முறையில் சந்தைப்படுத்தப்படாமையையிட்டு நான் கவலைப்படுகிறேன்.

தனியார் துறையின் பங்களிப்புடன் இளைஞர்களுக்கு உபசரிப்புத் துறையில் பயிற்சியளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். ஒவ்வொரு காலாண்டிலும் 3000 இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் வகையில் 3 மாதங்கள் நிலையான பயிற்சிக் காலமாகக் கொண்ட ஒரு பயிற்சிநெறிக்கு அதி கூடிய தொகையாக ரூபா 15000 வரையில் 50 சதவீத பயிற்சிக் கட்டணத்தை அரசினால் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

தனியார் துறை ஹோட்டல்கள் இத்தகைய பயிற்சிப் பாடசாலைகளை உருவாக்குவதற்கு ஊக்குவிப்பு வழங்கும் வகையில் திறன் அபிவிருத்தி துறைக்கு வழங்கப்பட்டுள்ள மும்மடங்கு கழிவு வரிச்சலுகையை இந்த நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தனியார்துறை பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் சுற்றுலாத் துறையில் ஈடுபடுவதற்காக விசேடமாக உருவாக்கப்பட்ட கம்பனிகளுக்கு மூன்று வருடங்களுக்கு 50 சதவீத விடுமுறை அளிப்பதற்கு முன் மொழிகின்றேன். அத்தோடு நான் இதற்காக ரூபா.3,000 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

சுற்றுலாப் பிரயாணிகளினால் கூடுதலான அளவு பணத்தை செலவழிப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் இலங்கையை பிராந்தியத்தில் ஆடம்பரப் பொருட் கொள்வனவு தளமாக மாற்றுவதற்கும் உடைகள்,இலத்திரனியல், மற்றும் மின்சார உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைப் பொருட்கள் மீதான வரிகளை சீராக்கம் செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

**நாணய மாற்றாளர்கள்** - மத்திய வங்கியின் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வழிகாட்டல்களுக்குட்பட்டு அந்நிய நாணயமாற்று வியாபாரத்தை மேலும் இலகுபடுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

நாம் மேலும் கண்காட்சிக் கூடம் ஒன்றை அரச தனியார் பங்களிப்பினூடாக நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகில் நிர்மாணிக்க உள்ளோம். மேலும் பின்தங்கிய பிரதேசங்களில் கருப்பூங்காக்களை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கின்றேன். அத்துடன் அதற்காக அரச காணிகளை வழங்குவதற்கும் அரைவாசி வரி விடுமுறைகளை 10 வருட காலத்திற்கும் முன் மொழிகின்றேன். இது அந்தப் பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை களை விரிவுபடுத்துவதற்கான சுற்றுலா மற்றும் ஓய்வுநேர களிப்பு செயற் பாடுகளை விரிவுபடுத்தல்கள் மூலமான நன்மைகளை ஏற்படுத்தும்.

நாட்டில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுற்றுலா விடுதிகளில் 60 சதவீதமானவை பதிவற்றதாகும். இது நாட்டில் உபசரிப்புத் துறையில் உரிய தரங்களைப் பேணுவதில் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, 2016 மார்ச் 31 அம் திகதியில் அனைத்து சுற்றுலா விடுதிகளும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என முன் மொழிகின்றேன்.

பதிவு செய்யப்படாமல்இயங்கும் சுற்றுலா விடுதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது மேற்கொள்ள வேண்டும் எனவும் முன் மொழிகின்றேன். நட்சத்திர வகுப்பு வகைப்படுத்தலுக்கு அமைவாக சுற்றுலா விடுதிகள் புரள்வின் மீது அதிக பட்சமாக 3 சதவீதம் கட்டணம் விதிக்கப்படும். இதற்காக வர்த்தக சபைகளின் கூட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகள் வர்த்தக சம்மேளனத்தினால் வகைப்படுத்தப்பட்டுள்ள நட்சத்திர வகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டவையாக அமைய வேண்டும்.

விடுதி வாகனங்கள், சுற்றுலாப் படகுகள், நீர்ச்சறுக்கு உபகரணங்கள், விசைப்படகுகள் மற்றும் சிறிய சுற்றுலாக் கப்பல்கள் மீதான இறக்குமதி கட்டணங்களை நீக்குவதற்கு முன்மொழிகின்றேன்.(த-வ)

*(நிதியமைச்சரின் மிகுதி முன்மொழிவுகள் நாளைய உதயனில்)*

## அதிபர்களுக்கான செயலமர்வு நாளை

சாவகச்சேரி, நவ.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான நான்கு நாள் செயலமர்வு நாளை முதல் வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நவம்பர் 23, 24, 30ஆம் திகதிகள் மற்றும் டிசெம்பர் முதலாம் திகதி ஆகிய தினங்களில் செயலமர்வு இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற-9)

**22ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்

(ஓய்வுபெற்ற (P.W.D ஓவசியர். R.M.C, R.D.A)

தோற்றம் 24.07.1929

ஒடுக்கம் 25.11.1993

திதி: வளர்பிறை ஏகாதசி

இணையில்லா இனுவையிலே இன்பமுடன் வாழ்ந்திருந்தே
இரப்போர்க்கு இருப்பதில் பகுத்தளித்து இருந்தீரே
வளமுடன் நாம் வாழ வழிமுறைகள் வகுத்தீரே
இருபத்திரண்டு ஆண்டுகளாய் இழந்துவிட்டோம் இதயத்தை
இறைஞ்சுகின்றோம் இறைவனை நாம் நல்வழியே தேடி.

"அன்பகம்"
இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர்.

# இனவாத அரசியல் செய்ய எவரையும் அனுமதியோம்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,நவ. 22

இந்த நாட்டிலே பல்லின மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் தங்களின் இனத்துவ ரீதியான மதம், மொழி என்பவற்றை பேசியும் பின்பற்றியும் வருகின்றனர். இது எல்லோரும் ஏற்றுக்கொள்கின்ற யதார்த்தமான உண்மையான விடயம். இந்த அடிப்படைகளில் இருந்துதான் நாம் இந்த நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டுமென அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாகபூசணி அம்மன் ஆலயமும், நாகவிகாரையும் அமைந்துள்ள தீவின் பெயர் என்ன என்பதை, 60 வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற மாவட்டச் செயலக நிர்வாக பதிவுகளும், தபால்-தந்தி அலுவலகப் பதிவுகளும் தெளிவுபடுத்தும். இவை தவிர தேர்தல் செயலகத்தின் நடைமுறைகளும் இதனைத் தெளிவுறக் காட்டும். அந்தப் பகுதியில் நிரந்தரமாக வாழும் மக்கள் அந்தத் தீவை எப்படி அழைக்கின்றார்கள் என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த நிலையில் இந்துக்கள் இந்த தீவின் பெயரை நயினாதீவு என்றும், பௌத்தர்கள் நாகதீப என்றும் பேச்சு வழக்கில் அழைத்துக்கொள்ளட்டும். எமது நாட்டின் பெயர் சிங்களத்தில் ஸ்ரீலங்கா என்றும், தமிழில் இலங்கை என்றும் அழைக்கப்படவில்லையா..? இந்த அடிப்படைகள் இவ்வாறிருக்க இலங்கையில் எல்லாம் எமக்கு மட்டுமே சொந்தம் என்ற கொள்கையை இனி எவரும் முன்னெடுக்க முடியாது. இந்த அடிப்படைகளில் இருந்து கொண்டுதான் நாம் அரசுக்குள் அங்கம் வகிக்கிறோம்.

மேலும் இந்த விடயங்கள் தொடர்பில் பேசிவருகின்ற இராவண பலய என்ற அமைப்பினர், முதலில் தங்கள் அமைப்பின்பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும். இராவண வேந்தன், இலங்கைத் தீவின் விபூதி தரித்த பண்டைய திராவிட சைவ மன்னன் என்பது வரலாறு சொல்லும் உண்மை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்-என்றார்- (து-ரி2)




## பணமோசடியில் கைதானவருக்கு விளக்கமறியல்

பணத்தைக் கைமாற்றாக வாங்கித் திருப்பிக் கொடுக்காமல் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துன்னாலை கோவிற்சந்தையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து 9 லட்சம் ரூபாவைக் கைமாற்றாக வாங்கிய குறித்த நபர் அதனைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றி வருகின்றார் என்று நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து மேற்படி நபரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவரை 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-108)

## இறுவட்டு வெளியீடு

'பருத்தித்துறையின் பண்பாட்டுப் பாரம்பரியம் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு இன்று மு.ப 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை யுடன் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட ஓய்வு நிலை அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். இறுவட்டை வடமாகாண ஓய்வு நிலை பிரதமசெயலாளர் ஆ.சிவசுவாமி வெளியிட்டு வைக்கவுள்ளார் என்று பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-ரி5)

மங்கலகரமான திறப்பு விழா

22.11.2015 காலை 9 மணிக்கு

VARSAANA HARD WARE

வர்ஷனா இரும்பகம்

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வெள்ளிரும்பு வகைகள் ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட ரில்லர், கிறைண்டர் மற்றும் இரும்பு வேலைகளுக்கான கருவிகள் விற்கப்படும்.

021 222 2588
077 974 9343

**வேலைவாய்ப்பு**

FR கம்பனியில் புதிதாகத் திறக்கப்பட்ட கிளைகளுக்கு வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. கல்வித்தகைமை O/L, A/L எதிர்பார்க்கப்படுகின்றது. (O/L அல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்) தகுதியுடைய இளைஞர், யுவதிகள் நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். குறுகிய காலத்தில் பதவி உயர்வுடன் கூடிய வேலைவாய்ப்பு காணப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:

தொடர்பு: 077 880 9695, 077 354 8006, 077 280 3773, 076 843 3804

கிளைகள்: கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மூதூர்.

FR கம்பனி, கிளிநொச்சி.




மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் உள்ள ரடிஸ்ஸன் எனும் சர்வதேச தர விடுதிக்குள் நேற்றுமுன்தினம் முன்னிரவு நுழைந்த தீவிரவாதிகள் அங்கிருந்தவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டனர். அதையடுத்து அந்த விடுதியை மாலி இராணுவத்தினரும், பிரான்ஸ் இராணுவத்தினரும் சுற்றி வளைத்தனர். நடத்தப்பட்ட சிறப்பு அதிரடி நடவடிக்கை மூலம் தற்போது பணயக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர் என்று மாலி பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது. 170 பணயக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் 19 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அல் குவைதா அமைப்பின் கிளையான அல் மொரேபிடன் இயக்கம் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது. (ற)

# மலேசியா, இந்தோனேசியா மீது திரும்புகின்றது ஐ.எஸ். கவனம்!

## மலேசிய துணை உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

கோலாலம்பூர், நவ.22

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளிலும் தங்கள் இயக்கத்தை வலுப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று மலேசிய துணை உள்துறை அமைச்சர் நூர் ஜஷ்லான் முகமது தெரிவித்துள்ளார்.

மலேசியப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளரான மக் மூத் அகமது என்பவர் தலைமையில் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பினர் கிளைகளை உருவாக்கத் தீவிரம் காட்டி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


வெடிகுண்டு மற்றும் வெடிபொருள்கள் தயாரிப்பதில் மிகவும் திறமையான மக்மூத் அகமது தலைமையில் மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளனர் என்றும் அதற்கான முயற்சியை மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் உள்ள மற்ற தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்தவும் முடிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைமுகமாக அதற்காக நிபுணர்களை இணையத்தளத்தில் விளம்பரம் செய்து வெடிகுண்டு மற்றும் வெடிபொருள்களின் மீது அதிக திறமை கொண்டவர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தச் செயற்பாட்டை மலேசியா பொலிஸார் சாதுரியமான முறையில் கண்டுபிடித்து விசாணைகளைமேற்கொண்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# அசாத் இருக்கும்வரை சிரியப் போர் முடியாது

## அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு



டமஸ்கஸ், நவ.22

சிரியாவில் பார் அல் அசாத் ஆட்சியில் இருக்கும்வரையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வராது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனாதிபதி அல் அசாத் ரஷ்யா சென்று ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதை அடுத்தே ஒபாமா இவ்விதம் தெரிவித்தார்.

சிரியாவில் அசாத் ஆட்சியை முட்டுக் கொடுத்து நிறுத்த வேண்டுமா அல்லது சட்டபூர்வமாக அரசை ஏற்படுத்தி நாட்டை காப்பாற்ற வேண்டுமா என்பதை ரஷ்யா மற்றும் ஈரான்தான் முடிவுசெய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அசாத் ஆட்சிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட போர் தற்போது உள்நாட்டுப் போராக உருவெடுத்துள்ளது. அதில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதிகமான மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு வெளியேறி வருகின்றனர். (ற)

# எபோலாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு

லண்டன், நவ.22

ஆபிரிக்க நாடுகளில் பல லட்சம் மக்களின் சாவுக்குக் காரணமாக இருந்த உயிர்க்கொல்லி நோயான எபோலாவை குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா, சாட், சியாராலோன் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஆண்டு எபோலா என்ற உயிர்க் கொல்லி நோய் பரவியது.

இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்படாததால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். லட்சக் கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டனர். இந்த நோயைக்கட்டுப்படுத்தவும், குணப்படுத்தவும் மருந்து கண்டு பிடிப்பதில் பல நாட்டு விஞ் ஞானிகள் தீவிரமாக செயற்பட்டனர்.

இந்த நிலையில், தற்போது இந்த நோயைக்குணப்படுத்த புதிய மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தயாரித்துள்ளனர். அதற்கு சாட் 3எபோ இசட் என பெயரிடப்பட்டுள்ளது. இந்த மருந்தில் அடினோ வைரஸ் என்ற கோல்டு வைரஸ் உள்ளது. இதை மனிதர்கள் உடலில் செலுத்தும் பட்சத்தில் மேலும் நோயை ஏற்படுத்தாது. அதிக அளவில் பெருகாது. மாறாக எபோலா நோயை உருவாக்கும் வைரஸ்களை அழிக்கும் திறன் கொண்டது.

இந்த மருந்து மாலி, மேற்கு ஆபிரிக்கா மற்றும் அமெரிக்காவின் பால்டிமோர் ஆகிய இடங்களில் எபோலா நோயாளிகளிடம் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இந்த மருந்தை வைத்திய சாலைகளில் பயன்படுத்துவதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பெரும் அழிவை ஏற்படுத்திய எபோலா என்ற உயிர்க் கொல்லி நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# வட – தென் கொரியா இடையே சமரசப் பேச்சு

சியோல், நவ.22

வடகொரியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளிடையே பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சு எதிர்வரும் 26ஆம் திகதி பான்முஞ்சோம் போர் நிறுத்த கிராமத்தில் நடைப்பெறவுள்ளது.

வடகொரியா, தென் கொரியா இடையே தொடர்ந்து மோதல் போக்கு நிலவி வருகிறது. இதனால் கொரிய தீபகற்பப் பகுதியில் பதற்றம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் அங்கு படைகள் இல்லாத பிரதேசத்தில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் தென்கொரிய வீரர்கள் 2 பேர் காயம் அடைந்தனர்.

அதையடுத்து, தென்கொரியா, வட கொரியாவுக்கு எதிராக கொரிய எல்லையில் ஒலிபெருக்கிப் பரப்புரை நடத்தியது. இது வடகொரியாவுக்கு கோபத்தை உண்டு பண்ணியது.

தென்கொரியாவை குறிவைத்து வடகொரியா பீரங்கித் தாக்குதல் நடத்த, தென்கொரியாவும் பதிலடி கொடுத்தது. இதனால் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இரு தரப்புக்களும் சமரசப் பேச்சு நடத்தின. அதன் போது அதில் உடன்பாடு எட்டப்பட்டது. இரு தரப்பினரும் மீண்டும் பேச்சு நடத்தவும் அப்போது முடிவானது.

இந்த நிலையில், கொரிய தீபகற்பப் பகுதியில் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் பேச்சுக்கு வட கொரியா அழைப்பு விடுத்தது. இந்த அழைப்புக்கு, தென் கொரியா சம்மதம் தெரிவித்துள்ளதை அடுத்து பேச்சு நடைபெறவுள்ளது. (ற)

# உலகின் 2ஆவது பெரிய வைரம் வெட்டியெடுப்பு




லண்டன், நவ.22

ஆபிரிக்க நாடான போட்ஸ்வானா சுரங்கத்தில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய வைரம் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது.

போட்ஸ்வானாவின் தலைநகர் காபோரோனின் வடக்குப் பகுதியில் உள்ள காரோவ் சுரங்கத்திலிருந்து இந்த ஆயிரத்து 111 கரட் வைரம் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வைரத்தின் மதிப்பு தெரிவிக்கப்பட வில்லை. இதனுடன் 813 கரட், 274 கரட் எடையுள்ள வைரங்களும் கிடைத்துள்ளன.

1905ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா நாட்டில் 3 ஆயிரத்து 106 கரட் அளவிலான வைரம் வெட்டியெடுக்கப்பட்டிருந்தது. இந்த வைரம் 9 தனித்தனி கற்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இதுதான் உலகின் மிகப்பெரிய வைரமாக உள்ளது. அப்போது அது 22.1 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டது. (ற)

# பெல்லின் புறக்கணிப்புக்கு பீற்றர்சன் கடும் கண்டனம்



இங்கிலாந்து அணியில் முன்னணி துடுப்பாட்ட வீரரான இயான் பெல் தெரிவு செய்யப்படாதமையை முன்னாள் அணித் தலைவர் பீற்றர்சன் கடுமையாகச் சாடியுள்ளார்.

கடந்த சில இன்னிங்ஸில், பெல்லின் சராசரிகள் திருப்தி தரும்படியாக அமையவில்லை. இதனால் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் இங்கிலாந்து அணியில் இருந்து இயான் பெல் நீக்கப்பட்டார். இந்த விடயம் தனக்குக் கடுமையான கோபத்தை ஏற்படுத்தியதாக பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள வீடியோவில், 'ஆண்டில் நடைபெறவிருக்கும் ஆகச்சிறந்த டெஸ்ட் தொடரில் இருந்து, இதுவரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கும் ஒரு வீரரை ஏன் தெரிவு செய்யாமல் புறக்கணித்தார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார். உலகின் தலை சிறந்த அணியுடன் மோதவிருக்கும் போது சிறந்த வீரர்களையே தெரிவு செய்ய வேண்டும், ஆனால் 100 டெஸ்ட் ஆட்டங்களுக்கு மேல் விளையாடிய அனுபவம் மிக்க வீரரை எப்படி இதுபோன்ற ஒரு தனித்துவமிக்க தொடரில் இருந்து நீக்க முடிந்தது என வினவியுள்ளார். தென்னாபிரிக்கத் தொடரில் அவர் சோபிக்கவில்லை என்றால் கண்டிப்பாக அவரை நீக்குங்கள், ஆனால் அனுபவம் மிகுந்த ஒரு வீரரை எவ்வித காரணங்களும் இன்றித் தெரிவு செய்யாமல் விடுவது சிறந்த அணியாக இருக்க முடி யாது' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


## மற்றொரு களச்சாவு



உள்ளூர் ஆட்டத்தின் போது மயங்கி விழுந்த நமீபியா கிரிக்கெட் வீரர் ரேமண்ட் வேன் ஸ்கூர் சிகிச்சை பயனின்றிச் சாவடைந்துள்ளார்.

நமீபியா தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்த 25 வயதான ரேமண்ட், உள்ளூர்த் தொடர்களில் பங்கேற்று விளையாடி வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தின்போது தீடீரென மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது. இந்தநிலையில், சிகிச்சை பயனின்றி ரேமண்ட் சாவடைந்துள்ளார். அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்தான் நமீபியா அணியின் இலக்குக் காப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஸ்ரெயின் விலகல்; இணைந்தார் லங்க்



ஸ்ரெயினுக்கு ஏற்பட்ட இடுப்பு வலி காரணமாக டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக, தென்னாபிரிக்க அணியில் வேகப்பந்து வீச்சாளர் மார்சந்த் டி லங்க் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் ஸ்ரெயின் காயமடைந்தார், இடுப்புவலி மிகுதியால் அவரால் 2 ஆவது டெஸ்ட்டில் விளையாட இயலவில்லை. இந்நிலையில், அவருக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் மார்சந்த் டி லங்க் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

“மார்சந்த் டி லங்கின் மிகப்பெரிய பலமே வேகமாகப் பந்து வீசும் திறன்தான். தொடக்கத்திலேயே அவர் பந்தை 'ரிவர்ஸ் ஸ்விங்' செய்தால் அது அணிக்கு அனுகூலமாக இருக்கும். அவரால் மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீச முடியும்.”என்று தென்னாபிரிக்க பயிற்சியாளர் ரஸ்செல் டொமிங்கோ தெரிவித்துள்ளார். (ம)

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 22

வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 80 உடற்கல்வி ஆசிரியர்களுக்கான 4நாள்கள் கொண்ட வதிவிட பயிற்சி முகாம் இன்று முதல் 24ஆம் திகதி வரை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த வருடம் வடமாகாணத்தில் இருந்து தேசிய மட்டத்தில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடனேயே இவ் வதிவிட பயிற்சி முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வளவாளர்களாக இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தின் தேசிய பயிற்றுவிப்பாளர்கள் வழங்கவுள்ளனர். (ம-422)

# அணித் தெரிவில் திறமை மட்டுமல்ல சூழ்நிலைகளும் கருத்தில் கொள்ளப்படும்



அணியைத் தெரிவுசெய்யும் பொழுது வீரர்களின் திறமை மட்டுமல்ல சூழ்நிலைகளும் கருத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார் இந்திய டெஸ்ட்அணியின் தலைவர் கோக்லி.

பெங்களூரில் நடந்த 2ஆவது டெஸ்டில் அமித் மிஸ்ரா நீக்கப்பட்டார். அவருக்குப்பதிலாக சகலதுறை ஆட்டக்காரரான பின்னி இடம் பெற்றார். இது போன்ற மாற்றங்கள் செய்யப்படுவது ஏன் என்பது குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி அளித்துள்ள பேட்டியில், விடாப்பிடியாக வெறும் திறமையை மட்டும் பார்க்கக் கூடாது, சூழ்நிலைக்கு ஏற்றவாறு சகலதுறை ஆட்டக்காரர்களைத் தெரிவுசெய்யவேண்டும். சில மாதங்களாக அமித் மிஸ்ரா சிறப்பாக பந்து வீசி வருவது உண்மைதான். ஆனால் பெங்களூர் ஆடுகளத்துக்கு பின்னி போன்ற வீரர் தேவையாக இருந்தார் என்பதை அவர் (மிஸ்ரா) புரிந்து கொண்டார். இது நல்ல அறிகுறியாகும்.' என்றார். (ம)

# தேசியமட்ட கொக்கித் தொடரில் வடமாகாண அணிகள் காலிறுதியில்

யாழ்ப்பாணம், நவ. 22

தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கொக்கித் தொடரில் வடமாகாண கொக்கி அணிகள் காலிறுதியாட்த்துக்குத் முன்னேறியுள்ளன.

**ஆண்கள் பிரிவு**

41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இரு பாலாருக்குமான கொக்கித் தொடர் கொழும்பு டொறிங்ரன் கொக்கித் திடலில் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று சனிக்கிழமை முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வடமாகாண கொக்கி அணியை எதிர்த்து கிழக்கு மாகாண கொக்கி அணி மோதிக்கொண்டது. இதில் வடமாகாண கொக்கி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் ஊவா மாகாண கொக்கி அணியை எதிர்த்து வடமாகாண கொக்கி அணி மோதவுள்ளது.

**பெண்கள் பிரிவு**

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் வடமாகாண பெண்கள் கொக்கி அணியை எதிர்த்து சப்ரகமுவ மாகாண கொக்கி அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தகர்ப்பு உதைகளில் வடமாகாண பெண்கள் கொக்கி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் ஊவா மாகாண கொக்கி அணியை எதிர்த்து வடமாகாண பெண்கள் கொக்கி அணி மோதவுள்ளது. (ம-23)

## திருப்தியான வருடம் -சானியா



இந்த வருடத்தைப் போன்ற சிறந்த வருடமொன்று தனது ரென்னிஸ் வாழ்வில் அமையப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சா.

அவர் தனது நேர்காணலில் – 'இந்த வருடம் மிகச் சிறப்பானதாக அமைந்தது. இதைவிடச் சிறப்பான வருடம் அமையவாய்ப்பேயில்லை. கிங்கிஸும் நானும் இரட்டையர் பிரிவில் 9 கிண்ணங்களை கைப்பற்றியுள்ளோம். விம்பிள்டனைக் கைப்பற்றியது மறக்க இயலாத ஒன்று. அடுத்த வருடம் இதைவிடச் சிறப்பாக அமையுமா என்று தெரியவில்லை. ஆனால் குறைந்த பட்சம் இந்த வருடத்துக்கு ஏற்றால் போல் சாதிப்போம்' என்றார். (ம)

# கிண்ணம் இங்கிலாந்திடம் சென்றது இறுதி ஆட்டத்திலும் பாக். தோல்வி




இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்குஇடையிலானநான்காவதும் இறுதியுமான ஆட்டத்தில் 84 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இதனால் தொடரை 3–1 என்ற அடிப்படையில் அந்த அணி கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் கேல்ஸ். கேல்ஸின் ஆட்டம் பெருமளவு எடுபடவில்லை. றோய் வழக்கமான தனது பாணியில் இருந்து விலகி சிறிது நிதானித்துக்கொண்டிருந்தார். இதனால் சராசரி ஐந்துக்கும் குறைவாகவே காணப்பட்டது. 11ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே அணி ஐம்பதை எட்டியது. 22 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் கேல்ஸ். ரூட் ஒருநாள் ஆட்டங்களுக்கு உரிய சீரான சராசரியில் சென்றுகொண்டிருக்க இங்கிலாந்து பலமான அடித்தளத்தை அமைத்துக்கொண்டது. சதம் கடந்து 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் றோய். ரூட் 71 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். பட்லரின் வடிவில் பாகிஸ்தானுக்கு வில்லங்கம் ஆரம்பமானது. 30 பந்தில் அரைச்சதம் கண்டார் பட்லர். ஒருமுனையில் இலக்குகள் சரியத்தான் செய்தன. எதனையும்கண்டுகொள்ளவில்லை பட்லர். எவ்வித பதற்றமும் இன்றி அதிரடியை இரட்டிப்பாக்கினார். அடிக்கொரு தடவை பந்துகள் உருண்டும் பறந்தும் எல்லைக்கு விரைந்தன. கிடுகிடு வேகத்தில் ஓட்டங்கள் பயணித்துக் கொண்டிருந்தன. அடுத்த 16 பந்துகளில் தனது சதத்தை நிறைவுசெய்தார் பட்லர். முடிவில் இங்கிலாந்து 355–5.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அசார்அலி, இர்பான் இருவரும்தலா இரு இலக்குகளையும் சாஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கு அசார் அலி சிறிது நம்பிக்கை கொடுத்தாலும் செசாட் 13 ஓட்டங்களுடன் அணியைக் கைவிட்டுச் சென்றார். 6 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் அசார். கபீஸ் அணியைக்கைவிட்டுச் செல்ல மலிக் மற்றும் அசாம் இருவரும் சிறிது நேரம் மிரட்டினர். தமது கடமைக்கு ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். இருப்பினும் வெற்றியை இங்கிலாந்திடம் இருந்து பறித்துவிட முடியவில்லை. பின்வரிசை வீரர்கள் இரட்டை இலக்கத்தை எட்டுவதே பெரும்பாடாக இருந்தது. முடிவில் 271 ஓட்டங்களில் சுருண்டது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயின் அலி மற்றும் ரசிட் இருவரும்தலாமூன்று இலக்குகளையும் வில்லி இரு இலக்குகளையும் ரொப்லி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் பட்லர் தெரிவானார். (ம)



## அரையிறுதியில் ஜோகோவிக்

முன்னணி வீரர்களின் தொடரில் அரையிறுதியில் விளையாடத்தகுதி பெற்றுள்ளார் சேர்பியாவின் ஜோகோவிக்.

தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கு என்று தனியாக ரென்னிஸ் தொடரொன்று நடத்தப்படுவதுண்டு. நடப்பு வருடத்தின் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜோகோவிக், பெர்டிச்சை எதிர்த்து மோதினார். இதில் ஜோகோவிச் முதல் செற்றை 63 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் பெர்டிச் சிறிது போராட்டம் காட்டினார். இருப்பினும் அந்த செற்றும் 75 என்ற கணக்கில் ஜோகோவிக்கின் வசமானது. முடிவில் அவர் 2–0 என்ற நேர்செற் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். நாளை நடக்கும் முதல்அரையிறுதியில்ஜோகோவிக், நடால் மோதுகிறார்கள். (ம)

## வில்லியர்ஸ்தான் வில்லன்



தான் சந்தித்ததில் மிகவும் கடினமான துடுப்பாட்ட வீரர் என்றால் அது தென்னாபிரிக்காவின் வில்லியர்ஸ்தான் என்று தெரிவித்துள்ளார் ஜோன்சன்.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து தனது ஓய்வை அறிவித்தார் ஜோன்சன். ஓய்வின் பின்னர் தனது கிரிக்கெட் வாழ்வில் நடந்த சில சுவாரஷ்யமான விடயங்களை அவர் பகிர்ந்துள்ளார். இதன்படி தனக்குச் சவாலான வீரராகவில்லியர்ஸைக் குறிப்பிட்டுள்ளார்.

வில்லியர்ஸ் தொடர்பாக ஜோன்சன் குறிப்பிடுகையில் – '2012ஆம் ஆண்டு செஞ்சூரியன் நகரில் நடந்த ஆட்டம் எனக்கு நினைவுள்ளது. ஆட்டத்தின் தொடக்கத்தில் நான் சில இலக்குகளை வீழ்த்தி, கம்பீரமாக வலம்வந்தேன். அப்போது களமிறங்கினார் வில்லியர்ஸ். மறுமுனையில் எத்தனை இலக்குகள் போயுள்ளன, எந்தப் பந்துவீச்சாளர் அந்த விக்கெட்டுகளை வீழ்த்தினார் என்பதையெல்லாம் அவர் யோசிக்கவேயில்லை. அவரது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மிகவும் அமைதியாகவும், அதேநேரம் ஆக்ரோசமாகவும் அவர் ஆடும்போது பந்து வீசுவது பெரும் சிரமம். எனது சம காலத்தில் நான் சந்தித்த வீரர்களில் கட்டுப்படுத்த முடியாத வீரர் என்றால் அது வில்லியர்ஸ்தான்' என்று தெரிவித்துள்ளார். (ம)

## சுழலிலேயே தெ.ஆபிரிக்கா வீழும்

### தெரிவிக்கிறார் சஞ்சய் மஞ்ரேகர்



தென்னாபிரிக்காவை வீழ்த்துவதுக்கான ஒரே ஆயுதம் சுழல் பந்துவீச்சு என்று குறிப்பிட்டுள்ளார் முன்னாள் வீரரும் தொலைக்காட்சி வர்ணனையாளருமான மஞ்ரேகர்.

குறித்த விடயம் தொடர்பாக மனோகர் தெரிவிக்கையில் – 'சுழல்பந்துவீச்சுக்கு .சாதகமான ஆடுகளங்களால்தான் தென்னாபிரிக்க அணியை வீழ்த்த முடியும் என்று இந்தியா தெரிந்து வைத்திருக்கிறது. இதனால்தான் சுழல்பந்துக்குச் சாதகமாக ஆடுகளங்கள் அமைக்கப்படுகின்றன. இது சிறந்த ஓர் உத்தி. வில்லயர்ஸ், அம்லா ஆகியோரைத் தவிர மற்ற வீரர்கள் சுழல்பந்துக்குத் தடுமாறுகிறார்கள். ஆனால் அஸ்வினையும், ஜடேயாவையும் பயன்படுத்தும் இடத்தை கோக்லி அடிக்கடி மாற்ற வேண்டும்.' என்றார். (ம)

## பிரத்தியேக இளஞ்சிவப்பு பந்துக்கு லயன் ஆதரவு தெரிவித்துள்ளார்

பகலிரவு டெஸ்ட் ஆட்டத்துக்கு என பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட இளஞ்சிவப்புப் பந்தில் திருப்தி தெரிவித்துள்ள ஆஸியின் சுழல் வீரர் லயன், பந்துவீச்சாளர்களுக்குச் சாதகமாக இரவு நேர ஆட்டங்கள் அமையும் என்ற குறிப்பிடுகிறார்.

ஆஸ்திரேலியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் பிரிஸ்பெய்னில் வருகிற 27ஆம் திகதி தொடங்குகிறது. இது பகலிரவாக மின்னொளியில் நடத்தப்படுகிறது. டெஸ்ட் வரலாற்றில் இதுவே முதல் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாகும். இந்த டெஸ்டில் சிவப்புநிறப்பந்துக்குப்பதிலாக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இளஞ் சிவப்புப் பந்து பயன்படுத்தப்பட இருக்கிறது. இளஞ் சிவப்பு நிறப் பந்து இரவு.நேரத்தில் கண்ணுக்குத் தெளிவாக தெரியாது என்று ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் இளஞ் சிவப்பு நிற பந்து பயன்படுத்தப்பட இருப்பதற்கு ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் லயன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.



இது குறித்து லயன் தனது நேர்காணலில் 'இளஞ் சிவப்பு நிற பந்து பயன்படுத்தப்படுவது பந்துவீச்சாளர்களுக்குச்சாதகமான அம்சமாகும். ஏனெனில் இளஞ் சிவப்பு நிற பந்தின் தையலை துடுப்பாட்ட வீரர்கள் பார்க்க முடியாது. தையலைப் பார்த்தால்தான் பந்து எப்படிச் சுழலும் என்பதைக் கணிக்க முடியும். சிவப்பு நிறப் பந்து, இளஞ் சிவப்பு நிற பந்து மற்றும் வெள்ளை நிறப் பந்து ஆகியவற்றில் எதை வைத்து ஆடினாலும் என்னைப் பொறுத்தமட்டில் வித்தியாசம் எதுவும் கிடையாது. எனது ஆட்ட பாணியில் மாற்றம் எதுவும் செய்ய மாட்டேன். எனது வியூகத்தை சிறப்பாகச் செயற்படுத்தி இலக்கை வீழ்த்த முயற்சிப்பேன்' என்றார். (ம)

# வாவ்ரிங்கா அரையிறுதிக்குள்

முன்னணி வீரர்களின் ரென்னிஸ் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் வாவ்ரிங்கா.

சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்கள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் உலகின் 4ஆம் நிலை வீரரான வாவ்ரிங்கா (சுவிற்சர்லாந்து) 7-6, 6-4 என்ற கணக்கில் இரண்டாம் நிலை வீரர் ஆண்டி முர்ரேயை (இங்கிலாந்து) வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதிபெற்றிருந்த ரபெல் நடால் (ஸ்பெயின்) 6-3, 6-4 என்ற கணக்கில் சகநாட்டைச் சேர்ந்த டேவிட் பெரரை வீழ்த்தி 3ஆவது வெற்றியைப் பெற்றார். (ம)



# அதியுயர் பாதுகாப்புத் தந்தால் பாகிஸ்தானுக்கும் வரத் தயார்

பாகிஸ்தானில் இந்திய வீரர்களுக்கு உயர்மட்டப் பாதுகாப்பு வழங்கப்படும் பட்சத்தில் பாகிஸ்தானிலேயே இந்திய அணி விளையாட எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துள்ளார் ஐ.பி.எல். நிர்வாகியான சுக்லா. ஆனால் சுக்லா நீண்டகாலத் திட்டங்களை அடிப்படையாக வைத்தே இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் போல் தெரியவருகிறது.

பாகிஸ்தானில் தொடரை நடத்துவது தொடர்பாக சுக்லா தெரிவித்ததாவது - "பாகிஸ்தான் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்தில் விளையாடி வந்தால், பாகிஸ்தானில் கிரிக்கெட் படிப்படியாகப் பாதிப்புக்குள்ளாகும். லாகூரை எளிதாகப் பாதுகாப்பான மைதானமாக மாற்றலாம். மைதானத்துக்கு அருகில் வீரர்கள் தங்கும் விடுதிகளை அமைத்து, போதுமான பாதுகாப்பு வசதிகளையும் ஏற்படுத்தி லாகூரைப் பாதுகாப்பான இடமாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஏற்படுத்தினால், லாகூரில் விளையாடுவதற்கு இந்தியாவுக்கு எந்த ஆட்சேபமும் இல்லை.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் உரிய பாதுகாப்பு உத்தரவாதத்தையும் ஐ.சி.சி.யில் உள்ள பிற நாடுகளின் உறுப்பினர்கள் யாரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்றால் மட்டுமே, லாகூரில் விளையாட இந்தியா சம்மதம் தெரிவிக்கும். தற்போதைய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர், இந்தியாவும் பாகிஸ் தானும் தத்தமது நாடுகளில் விளையாட வேண்டும் என்று விரும்புகிறார். இந்த முறை இந்தியாவுக்கு வந்து விளையாடுமாறு நாங்கள் கோருகிறோம். உள்நாட்டுத் தொடருக்காக இழப்பீடு வழங்கவும் தயாராகவுள்ளோம். பாகிஸ்தானில் விளையாடுவதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப் பட்ட பின்னர்பாகிஸ்தானுக்குச் சென்று ஒன்றிரண்டு தொடர்களில் விளையாடவும் தயாராகவுள்ளோம்." (ம)


FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர்: MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி. 1013 மாணவர்கள் French கற்றுள்ளனர்
உடன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள: 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி, ஆரிய குளத்துக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் உள்ளது. | 181, பிரதான வீதி நெல்லியடி. TP: 021 320 2973 | கண்டி வீதி, சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

உடனடி வேலை வாய்ப்பு
பாதுகாவலர் மற்றும் பராமரிப்பு வேலைகள்
Security & Cleaning
நிறுவனம்:- பிரெஞ்சு மொழி கற்பிக்கும் சர்வதேச தனியார் நிறுவனம்
Alliance Francaise De Jaffna.
61,Kachcheri Nallur Road, Jaffna.
021 222 8093

வேலைவாய்ப்புக்கள்
உங்கள் மனம் விரும்பும் தனியார் வேலை கிடைக்கவில்லையா?
பல நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றும் பலன் இல்லையா?
கவலையை விடுங்கள்!
உங்கள் கனவுத் தொழிலை நனவுத் தொழிலாக்க உடன் தொடர்பு கொள்ளுங்கள்
WIN STAR JOB BANK
(முதற்தர வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)
Accountant | Office works | Cashier
Security | Executives | Marketing
வேலைதேடும் புத்திசாலிகளின் தேர்வு WINSTAR JOB BANK மட்டுமே
WIN STAR JOB BANK
106, Palaly Road, Thirunelveli. 021 320 2789

வரணி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்
பழைய மாணவர்கள் சங்கம விழா - 2015
மேற்படி விழாவினை இந்த ஆண்டு இறுதியில் நடத்துவதாகத் தீர்மானித்துள்ளோம். இவ்விழாவில் சிறப்பு நிகழ்வாக இறுதியாக பல்கலைக்கழக, கல்வியியற்கல்லூரி அனுமதி கிடைத்தவர்களையும் மற்றும் க.பொ.த.(சா/த) இல் உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களையும், இவ்வாண்டு ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் கௌரவிப்பதாக முடிவு எடுத்துள்ளோம். இந்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தவராக உள்ள மாணவர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அங்கத்தவராக இணைந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் எதிர்வரும் டிசெம்பர் 8ஆம் திகதிக்கு முன்பாக பின்வரும்தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
077 959 5757 - பழைய மாணவர் சங்க செயலாளர்
077 130 1050 - பழைய மாணவர் சங்க பொருளாளர்
பழைய மாணவர் சங்கம், வரணி மத்திய கல்லூரி.

LONDON METROPOLITAN COLLEGE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
IELTS
Duration : 60 hours (Week | Weekends)
Student Visa / Skill Migration
IELTS LIFE SKILLS A1, B1 (Speaking & Listening)
Duration : 48 hours (Week | Weekends)
UKBAவின் புதிய நடைமுறைகளுக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் கிடைக்கப்பெறுகிறது
APPLIED SPOKEN ENGLISH (With Grammar)
Duration : 48 hours (Week | Weekends)
COMPUTER COURSES
Certificate in MS Office 2013
Certificate in JAVA, VB, Net,C#
Internet | Email
Diploma in Computer Studies
Diploma in Computer Programing
No.136, Palali Road, Parameswara Junction, Jaffna
Tel : 021 7538395 Mobile: 0774765990 | 071 4541099

Personal Class-கணினி
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker
TP:0779672038 கல்லூரி ஆசிரியர் KRC

காணி தேவை
யாழ் நகரில் இருந்து 3Km தூரத்திற்குள் வீடு கட்டுவதற்கு 2 அல்லது 1½ பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 075 511 6767

விசேட விலைக்கழிவுடன்
ஜூஸ் பக்கெட் மெசின்
விரைவான வேலை மூலம் அதிக இலாபம் பெற்றிட !!





1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்
ரூ.2/= ரூ.5/= ரூ.10/= பக்கட்டுகளை தயாரிக்கலாம்
Eastman
வேலையாட்கள் தேவையில்லை
• 1 வருட உத்தரவாதம்
• இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
• விற்பனைக்கு பின் சேவையுண்டு
• இலவச விநியோகம்
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

பின்வரும் சேவைகள் எம்மால் வழங்கப்படுகிறது
- வியாபார பதிவு மேற்கொள்ளல், வியாபாரம் ஆரம்பிப்பது தொடர்பான ஆலோசனைகள்
- நிர்வாக ஆலோசனைகள்
- கம்பனி கூட்டிணைவு ஆலோசனைகள்
- திட்ட அறிக்கையிடல்
- முகாமைத்துவ சேவைகள்
- கணக்கியல் / கணக்காய்வு வரி ஆலோசனைகள்
Ariyasena Millawa & Co charted Accountant Regional office
Navatkuli Janction, Kaithady, Jaffna.
T.P: 077 433 1841





யாழ். நகரில் தற்பொழுது......
மிஹின் லங்காவுடன் குறைந்த கட்டணங்களுடன் பயணிக்கலாம் விமான டிக்கட்டுகளுக்கான விசேட மீள்வருகைக் கட்டணத்துடன்
ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட கட்டணங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 18,000/- (RT) | லண்டன் | 59,200/- (RT) |
| மதுரை | 16,000/- (RT) | பாரீஸ் | 64,400/- (RT) |
| திருச்சி | 21,800/- (RT) | ஜேர்மனி | 72,900/- (RT) |
| கட்டார் | 19,100/- (OW) | கனடா | 1,48,500/- (RT) |

நிபந்தனைக்கு உட்பட்டது.
குறிப்பு:-
சர்வதேச விமான கற்கை நெறிகளை கற்க விரும்புவோர் எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும். இக்கற்கைநெறி 03 மாதங்களைக் கொண்டுள்ளது. கற்கை நெறிக் கட்டணம் 30.000 ரூபா மட்டுமே. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கி திறமையின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்.
100 % உத்தரவாதம்
இச்சலுகைகளை அனுபவித்திட இன்றே அழையுங்கள்





தொடர்புகளுக்கு:
MIHINLANKA JAFFNA PSA OFFICE
No: 289, Stanley Rd, Jaffna.
021 222 0266 021 222 0267
Email :- psa.jaffna@mihinlanka.com
MIHIN LANKA Yours to fly

Shanu Electrical Systems - Manipay
தரமான Solar panels, Bio disel Generators, Water Puritication equipment என்பன விற்கப்படும் அத்துடன் சகலவிதமான Electrical Control Panels, Electrical Wiring வேலைகளும் செய்து தரப்படும்.
Shanu Electrical Systems - Manipay
076 903 7423,
Shanuelesys@gmail.com

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்
லங்கா டைல், லங்காவோல் டைல் உட்பட அனைத்து மாபிள்கள், கொமட்செற் மற்றும் பெயின்ற் வகைகளுக்கும் 30% வரை விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
நியூ கமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
021 222 2085, 021 221 9305


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 22.11.2015



# எந்தளவு மாறும் ஐரோப்பா?

தமிழில்: சாரி.
மூலம்: நிக் கோஹன், தி கார்டியன்.

# எந்தளவு மாறும் ஐரோப்பா?



ஐரோப்பா இன்னும் எத்தனைக் காலம்தான் சுதந்திர மனப்பான்மை உள்ள நிலப்பரப்பாக இருக்கும்? படு பயங்கரமான ஒரு தாக்குதல் நடந்த உடனே சிந்திப்பதற்கு இது சரியான தருணம் அல்லத்தான். இந்தத் தாக்குதலின் கொடூரம் காரணமாக அரசை நிர்வகிப் போரும் மக்களும், மிகக் கடுமையாக இதை ஒடுக்க வேண்டும் என்றே ஆத்திரப்படுவார்கள். பாரீஸ் நகரில் கடந்த 13ஆம் திகதி நடந்த தாக்குதலுக்கு முன்னர் பயங்கர வாதத்துக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற நினைப்பே இல்லாமல் தான் நாடுகள் சோம்பியே கிடந்தன.

பயங்கரவாதச் செயல்கள் எப்படியெல்லாம் முற்றக் கூடும் என்று சில வட்டாரங்கள் எச்சரித்திருந்தன. ஆயினும் பாதுகாப்பைப் பலப்படுத்துவது, ஒற்று வேலைகளைத் தீவிரப்படுத்துவது, மக்களைக் கண்காணிப்பது போன்றவற்றில் ஐரோப்பிய அரசுகள் முனைப்புக் காட்டவில்லை. ஒரு சில சம்பவங்கள் நடந்தபோதும் எதிர்வினையாக அரசுத் தரப்பிலிருந்தோ மக்களிடமிருந்தோ பதில் தாக்குதல்கள் ஏதும் நடத்தப்படவில்லை. பயங்கரவாதச் செயல்களால் பாதிக்கப்படும் மக்களுக்குத்தான் நன்கு தெரியும், இத்தகைய சூழலை எதிர்கொள்வதில் நம்முடைய அரசு எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்று. பயங்கரவாதிகளுக்குப் பயந்து மக்கள் ஐரோப்பாவிலிருந்து ஓடவில்லை. ஐரோப்பாவை நோக்கியே ஓடிவருகிறார்கள் என்பது தான் இப்போதைய நிலை.

## ஐரோப்பாவின் மௌனம்

பயங்கரவாதிகளின் செயல்களும் மிதமாக இருந்ததால் அரசுகள் அதிகத் தீவிரம் காட்டவில்லை. 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் மீதும் பென்டகனில் உள்ள ராணுவத் தலைமையகம் மீதும் பயங்கரவாதத் தாக்குதல் நடந்தப்பட்ட பின்னரே ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் பாதுகாப்பையும் கண்காணிப்பையும் பலப்படுத்தி தொடர் தாக்குதல்கள் நிகழும் முன்னதாகவே சந்தேக நபர்களைக் கைது செய்ய முற்பட்டன.

எம்முடைய அரசுகள் இஸ்லாத்தின் பெயரில் செயல்படும் பயங்கரவாதிகளுக்கு எதிரானவையே தவிர, இஸ்லாம் என்ற மதத்துக்கு எதிரானவை அல்ல என்று நீங்கள் கூறலாம். காரணம் எதுவாக இருந்தாலும் இந்த மாதிரியான தாக்குதல்களில் ஈடுபடுவோரைச் சாதாரண குற்றவியல் சட்டப்படி தண்டித்தாலே போதும். ராணுவச் சட்டத்தைப் பயன்படுத்துவது அவசியம் இல்லை என்றே ஐரோப்பிய அரசுகள் கருதுகின்றன. மாட்ரிட், லண்டன் ஆகிய நகரங்களில் நடந்த தாக்குதல்களை ஐரோப்பிய அரசுகள் தாங்கிக்கொண்டன. யூதர்கள், அங்கதச் சுவை எழுத்தாளர்கள் மீது பாரீஸ், பிரஸ்ஸல்ஸ், கோபன்ஹேகன், மார்செய்ல்ஸ் நகரங்களில் தாக்குதல் முயற்சிகளும் சில சமயங்களில் தாக்குதல் சம்பவங்களும்கூட நடந்தன. அவற்றுக்கு அப்பால் சில தனிப்பட்ட ஓநாய்களின் (பயங்கரவாதிகள்) தாக்குதல்களும் இடம்பெற்றன.

ஐரோப்பா எப்போதும்போல்தான் இருக்கிறது என்று போலியாகக் கூற முடியாது. இறைத் தூதரைக் கேலிச் சித்திரமாக வரைந்ததால் பத்திரிகை அலுவல கம் மீது தாக்குதல் நடந்த பிறகு கலைத் துறையிலும் பத்திரிகைகளிலும் தொடை நடுக்கம் காரணமாக சுய தணிக்கை முறை நடைமுறைக்கு வந்தது. அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூட மறுக்கும் கோழைத்தனமும் உடன் வெளிப்பட்டது. மதத் தீவிரவாதம் காரணமாக சமூகமும் பழைய நிலையிலிருந்து தன்னுடைய தொடர்புகளை அறுத்துக்கொண்டு விடவில்லை.

## கவனம் தேவை

பிற கண்டங்களில் நடந்த பயங்கரவாதிகளின் செயல்களை ஒப்பிட்டால் ஐரோப்பாவுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் எவ்வளவோ பரவாயில்லை என்றுதான் கூறலாம். இப்படிச் சொல்வதால் ஐரோப்பாவில் நடந்தவை பயங்கரவாதச் செயல்களே அல்ல என்று குறைத்துக் கூறிவிட முடியாது. நைஜீரியாவிலிருந்து ஆப்கன் வரை மத அடிப்படையிலான பாசிசக் கொள்கை காரணமாக, கூட்டம் கூட்டமாகவும் தனித்தனியாகவும் அந்நியர்கள் கொல்லப்படுவது தொடர்கிறது. அதனால் அந்தப் பகுதிகள் அனைத்தும் உள்நாட்டுப் போரில் சிக்கிச் சீரழிகின்றன. இவ்வளவு இருந்தும் ஐரோப்பாவில் இந்தப் புனிதப் போர்த் தீ இன்னமும் பற்றாமல் இருக்கிறது.

குற்றங்கள் உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படும் வரையில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுவோரை அப்பாவிகளாகத்தான் கருதியாக வேண்டும். மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய மரபு இப்போதும் தொடர்கிறது. பயங்கரவாதச் செயல்கள் நடந்தால் அவற்றை ராணுவச் சட்டப்படி தண்டிக்கக் கூடாது. சாதாரணச் சட்டங்களின்படிதான் தண்டிக்க முடியும். எவ்வளவு சீண்டல்கள் விடுக்கப்பட்டாலும் சட்டத்தை மதிப்பதில் மாறாதே இருக்கிறோம்.

## பயங்கரவாதிகளின் திட்டம்

பாரீஸ் நகரில் நடந்துள்ள ஒருங்கிணைக்கப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் ஐரோப்பாவையே மாற்றிவிடும். சுதந்திரமான நடமாட்டத்தைத் தடுக்கும் அளவுக்கு மோசமாக்கிவிடும். நண்பர்களுடனும் குடும்பத்துடனும் உணவருந்தச் சென்றோர், இசையை ரசிக்கச் சென்றோர், உதைபந்தாட்டம் பார்க்கக் கூடியிருந்தோர், சுற்றுலா தலங்களைப் பார்க்க முற்பட்டோர் என அரசுடன் நேரடித் தொடர்பில்லாத அப்பாவிகள்தான் கொல்லப்பட்டுள்ளனர். எல்லோரையும் அதிர்ச்சியிலும் பீதியிலும் ஆழ்த்த வேண்டும் என்றுதான் இப்படித் தாக்கியுள்ளனர். தாக்கியவர்கள் தனிப்பட்ட ஓநாய்கள் அல்ல சிப்பாய்கள்! அவர்களைப் பெருமைப்படுத்துவதற்காக அல்ல, மனிதகுலத்துக்கு எதிராகக் கொடூரமான குற்றங்களைச் செய்யும் அவர்கள் தங்களை யாரென்று நினைத்துக் கொள்கிறார்கள் என்று சுட்டிக்காட்டவே அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி யஹாலாண்டே, அவர்கள் எதிர்பார்த்தபடியே நிதானத்தை இழந்துவிட்டார். இந்தத் தாக்குதல்களை நாட்டுக்கு எதிராக ஐ.எஸ். அமைப்பினர் நடத்தியுள்ள போர் என்று கண்டித்துள்ளார். இதை வெறும் குற்றச்செயலாகப் பார்க்கவில்லை. நாட்டில் நெருக்கடி நிலை நிலவுகின்றது என்று பிரகடனம் செய்திருக்கிறார். பிரான்ஸ் நாட்டின் எல்லைகள் மூடப்படும் என்று எச்சரித்திருக்கிறார். இதன் மூலம் பயங்கரவாதிகள் விரும்பிய திசையில் இவர்கள் பயணப்படத் தொடங்கி விட்டனர்.

இப்போது ஐரோப்பா முழுவதிலும் நாடுகள் தங்களுடைய எல்லைகளை மூடிவிட்டன. பிரான்ஸையும் பிரிட்டனையும் ஒரு வாய்க்கால்தான் பிரிக்கிறது. ஸ்லோவேனியா, ஹங்கேரி இடையிலும், சுவீடனிலும் எல்லைகளில் வேலிகள் எழுவது எவ்வளவு வலியை ஏற்படுத்தும் என்று பிரிட்டனுக்குத் தெரியாது. ஐரோப்பிய ஒன்றியம் என்பது தடைகள் இல்லாத ஒரே நிலப்பரப்பாகத்தான் இருக்க வேண்டும். இந்தத் தாக்குதலுக்கு முன்னதாகக்கூட அகதிகளின் வருகையைத் தாங்க முடியாமல் ஐரோப்பா திணறியது உண்மை.

## அகதிகளின் அவதி


அகதிகளைத் தங்கள் நாட்டுக்குள் வரவிடக் கூடாது என்று வலதுசாரிக் கட்சிகள் அலறியபோது ஐரோப்பிய கனவான்கள் அவர்களைப் புறக்கணித்தனர். அகதிகளுடன் பயங்கரவாதிகளும் சேர்ந்து வருவர் என்று அவர்கள் கூறியதைப் பிதற்றல் என்றே கூறினர். அவர்களுடைய அந்த மறுப்பு மற்றவர்களுக்குக் கோபத்தையே ஊட்டியது. மக்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு மட்டுமல்ல உயிர்ப் பாதுகாப்பும் முக்கியம். அகதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போரை நவ பாசிஸ்ட்டுகள் என்றும் நிறவெறியர்கள் என்றும் கண்டிக்கும் சுதந்திரச் சிந்தனையாளர்களுக்குக்கூட இப்போதைய சூழல் சிக்கலானதுதான்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் சர்வாதிகார அரசுகள் பதவிக்கு வராமல் இருக்கவும், பாதுகாப்புக்கான சில ஆபத்துகள் உண்மையானவை என்பதை ஒப்புக்கொண்டே தீர வேண்டும். மக்களிடம் மனோரீதியாக அச்சத்தை ஏற்படுத்த சிலர் செய்யும் சதி என்று அவற்றை நிராகரித்துவிடக் கூடாது. மக்கள் லட்சக்கணக்கில் குடியேறுவதும் மதத் தீவிரவாதம் வலுவடைவதும் ஐரோப்பாவில் நிகழ்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் சொல்வதை அரசு கேட்க வேண்டும் என்று நினைத்தால், இந்த மாற்றங்கள் நிகழ்வதை முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் ஐரோப்பா எந்த அளவுக்கு மாறும் என்பதற்கு விடையில்லை. எத்தனை முறை ஐரோப்பா தாக்குதலுக்கு உள்ளாகும், எவ்வளவு சடலங்கள் விழும் என்பதைப் பொறுத்தே அது அமையும். அமெரிக்காவில் நடந்த தாக்குதலுக்குப் பிறகு இனி இன்பமயமான உலகு என்ற கருத்தை மறந்துவிட வேண்டியதுதான் என்றனர் விமர்சகர்கள். இனி மக்கள் சோகமும் சிந்தனையும் மிக்க முகங்களோடுதான் பொது இடங்களில் அதிகம் காணப்படுவார்கள். கள்ளமற்ற சிரிப்பும் எக்காளமும் அவர்களிடம் இருந்து மறைந்துவிடும் என்றெல்லாம் அச்சுறுத்தினார்கள். அவற்றிலிருந்து மக்கள் மீண்டனர். அவர்கள் எச்சரித்தபடி அடுத்தடுத்து பயங்கரவாதச் செயல்கள் நடத்தப்படவில்லை. மீண்டும் அந்த நல்ல காலம் ஏற்படலாம். அகதிகள் பிற மக்களுடன் இரண்டறக் கலந்துவிடக் கூடும். ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்து கொடுஞ்செயல்களைச் செய்யச் சென்ற பிரிட்டிஷ், பிரெஞ்சுப் பிரஜைகள் இனி நாடு திரும்பாமலேயே போகக்கூடும். இணையம் வழியாக மற்றவர்களுக்கும் உத்வேகம் இல்லாமல் போகக்கூடும். இன்னும் 20 ஆண்டுகள் கழித்து நம்முடைய அடுத்த தலைமுறை, உலகைப் பீடிக்கவந்த பயங்கரவாதச் செயல்கள் ஓய்ந்தன, நமக்கு அதன் விளைவே தெரியாமல் வளர்ந்துவிட்டோம் என்று நிம்மதியாக அறிவிக்கும் காலமும் வரலாம். இந்தத் துயரங்கள் அனைத்தும் பழைய நினைவுகளின் சுமையாகக்கூடக் கருதப்படலாம். சுருக்கமாகச் சொன்னால், உலகம் அமைதியுடன் திகழும் அதிர்ஷ்டம் நமக்கு வாய்க்கலாம். ஆனால், பரிஸ் மாநகரில் நடந்த கொடூரத் தாக்குதல் தொடர்பான ஒளிப்படங்களைப் பார்க்கும்போது நல்லதிர்ஷ்டம் நம்மை விட்டுப் போய் விட்டதே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை. ▌

# போரில் பாதிக்கப்பட்ட மக்களை அவமானப்படுத்தியுள்ள பட்ஜெட்

நேர்காணல் -ரஜீபன்



விவரிக்கிறார் பொருளியலாளர் முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன்

வடக்கு–கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இது மிகவும் துர்ப்பாக்கியமான, வெற்று வரவு–செலவுத்திட்டம் எனச் சாடியுள்ள பொருளியலாளர் முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன், தேசிய அரசு சமர்ப்பித்துள்ள வரவு–செலவு திட்டத்தில், தான் எந்தப் புரட்சியையும் காண வில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாக நிதியமைச்சர், தான் புரட்சிகர வரவு–செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கப்போவதாகத் தெரிவித்து வந்தார், இது தானா அது? இது புரட்சிகர வரவு–செலவுத்திட்டம் அல்ல வெற்று வரவு–செலவுத்திட்டம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது–

**கேள்வி:**-தேசிய அரசு குறிப்பாக நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை, தான் சமர்ப்பித்தது புரட்சிகர வரவு–செலவுத்திட்டம் எனக் குறிப்பிடு கின்றாரே?

**பதில்:**- கடந்த வெள்ளிகிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட வரவு–செலவுத்திட்டத்தில் ஒரு புரட்சியையும் நான் காணவில்லை. எனக்குஅவ்வாறானஎதுவும்தென்படவில்லை. ஒரு புரட்சிகரமான விடயத்தையும், பரிமாணத்தையும் காணமுடியவில்லை. இது ஒருசாதாரண வரவு–செலவுத்திட்டம். மக்கள் மத்தியில் அரசின் செல்வாக்கை உறுதிசெய்வதற்காக நிவாரணங்களை வழங்கியுள்ளனர். பிரதான இரு தேர்தல்களும் முடிவடைந்துள்ள நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை மையமாக வைத்து தற்போது சலுகைகள் சில வழங்கப்பட்டுள்ளன.

வழமையாகஎந்தஅரசினதும்முதலாவது வரவு–செலவுத் திட்டம் அந்த அரசின் பொருளாதாரக் கொள்கைப் பிரகடனமாகக்காணப்படும்.ஆனால்இந்தஅரசின் வரவு–செலவுத்திட்டம்துரதிர்ஸ்டவசமாக அவ்வாறானதாக அமையவில்லை.

முன்னைய அரசுகூடமகிந்தசிந்தனையை முன்வைத்தது. அதனை அடிப்படையாக வைத்து தனதுபொருளாதாரக் கொள்கையைப் பிரகடனம் செய்தது. அதில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் அது தூரநோக்குள்ள ஒரு கொள்கைப் பிரகடனமாக விளங்கியது.

ஏன் இந்த அரசும் கூட2003 இல் ரிகெய்னிங் ஸ்ரீலங்கா என்ற தனது திட்டத்தை முன்வைத்திருந்தது. அது ஒரு தெளிவான நோக்கத்தை கொண்டிருந்தது. ஆனால் இந்த வரவு–செலவுத்திட்டம் அவ்வாறானதாகக் காணப்படவில்லை. தமது பொருளாதாரத் திட்டங்கள் எத்தனை ஆண்டுகளை அடிப்படையாகக்கொண்டது அதன் பலாபலன்கள் என்ன என்பது குறித்து எதனையும் காணமுடியவில்லை.

நவம்பர் 5ஆம் திகதி பிரதமர் ஆற்றிய உரையையும், இந்த வரவு–செலவுத் திட்டத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது திட்ட வட்டமான வேலைத் திட்டங்கள் இல்லாதது தெளிவாகின்றது. நவம்பர் 5ஆம் திகதி உரையில் பிரதமர் ஒரு மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கப்போவதாக உறுதியளித்தார். ஆனால் அந்த வேலை வாய்ப்புகள் எந்தத் துறைகளில் உருவாக்கப்படும், எவ்வாறு உருவாக்கப்படும் போன்ற விடயங்கள் தெளிவாக காணப்படவில்லை. அதற்கான நிதி எங்கிருந்து பெற்றுக்கொள்ளப்படும் போன்ற விடயங்களையும் அவர் தெரிவிக்கவில்லை.

கடந்த 20 வருடங்களாக கடன்பளு அதிகரித்து வந்துள்ளது. வரி வருமானத்தில் பிரச்சினைகள் உள்ளன. பொதுச்சேவை அதிகரித்துள்ளது,அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

பல அரசநிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் போன்றவை.

இந்த சுமைகளை மக்களே சுமக்க வேண்டியுள்ளது. அரசுகள் பெற்றுக்கொள்ளும் கடன்களின் சுமையை மக்களே சுமக்க வேண்டும். இது குறித்த தெளிவான விரிவான கொள்கைப் பிரகடனத்தை பார்க்க வேண்டும்.

இந்த அரசு நல்லாட்சித் திசையில் சில முற்போக்கான நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் பொருளாதார விடயங்களில் குழப்பமும், தெளிவற்ற தன்மையும்,திட்டவட்டமின்மையும் அரசிடம் காணப்படுகின்றது. இது வரவு–செலவுத் திட்டத்திலும் பிரதிபலிக்கின்றது.

**கேள்வி:**- அரச வரவு–செலவுத்திட்டத்தில் வடக்கு–கிழக்கு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளவை பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்:**- வடக்கு–கிழக்கு குறித்து, போரால் பாதிக்கப்பட்ட பகுதி குறித்து ஓரிரு பந்திகளையே காணமுடிந்தது.

20ஆயிரம் வீடுகளை அமைத்துத் தருவதாகத் தெரிவித்துள்ளனர். இந்தியா 50 ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலை வாய்ப்பு உருவாக்கம் குறித்து எதனையும்காணமுடியவில்லை.வாழ்வாதாரம்மேம்படுத்தப்படுதல்என்பதுமுக்கியமான விடயம்.

தலைக்கு மேல் கூரைகள் அவசியம். ஆனால்அதற்குஅப்பால்தொழில்வாய்ப்பு என்பதுஅவசியம்.

இந்த அடிப்படையில் நோக்கும்போது வடக்கு– கிழக்கு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் திருப்தியளிக்கவேயில்லை.

மக்கள் இரு தடவைகள் இந்த அரசுக்கு வாக்களித்துள்ளனர். சர்வதேசசமூகத்தை திருப்திப்படுத்துவதற்காகச் சில நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. மக்கள் சுதந்திரமாக, தயக்கமின்றி நடமாட முடிவது உண்மை. ஆனால் வாழ்வாதார ரீதியில்எந்தமுயற்சிகளும்மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கு– கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இது மிகவும் துர்ப்பாக்கியமான, வெற்று வரவு–செலவுத்திட்டம்.

**கேள்வி:**– அரசு வழங்கியுள்ள சலுகைகள் குறித்து என்ன கருதுகீறீர்கள்?

**பதில்:**- அரசு சில சலுகைகளை வழங்கியுள்ளது. விலைகளைக் குறைத்துள்ளது. தேர்தலை இலக்கு வைத்து இந்த விலைக் குறைப்புகளை செய்துள்ளது. ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது தெரியவில்லை.

1977இல் இருந்து நாங்கள் இதனைப் பார்த்து வருகின்றோம், விலைக் கட்டுப்பாடுகளை அறிவிப்பார்கள். ஆனால் மக்களுக்கு அவை நிரந்தரமானதாகக் காணப்படுவதில்லை. தொடர்ந்து பல தில்லுமுல்லுகள் இடம்பெறும். இதனால் மக்களுக்கு நீண்ட காலத்திற்கு அவற்றின் பயன்களை அனுபவிக்க முடியாது. பெருமளவு பணத்தை செலவு செய்து உற்பத்தி செய்தவர்களும், வியாபாரிகளும் இந்த விலைக் குறைப்பால் பாதிப்பை எதிர்கொள்ளக் கூடிய நிலையேற்படும். கடன்களை எதிர் நோக்குவர். விலைக்கட்டுப்பாடுகளை அவர்கள் அனுமதிப்பதில்லை. இது ஒரு சரித்திரம். இது விலை குறைப்பல்ல. ஒரு கையால் கொடுத் து மறுகையால் பறிக்கும் நடவடிக் கையாகும். மறைமுக வரிகளை அதிகரிப்பார்கள் , அதிகரித்துள்ளார்கள். விலைக்கட்டுப்பாடுவிதிக்கப்படாதவேறு பொருள்களுக்கு வரி அதிகரிக்கப்படும். உணவுப்பொருள்களுக்கு அப்பால் பல தேவைகள்உள்ளன.இது ஒருநிவாரணம் அல்ல. ஏமாற்று வேலை. சாதாரண மக்கள் இதனால் கவரப்படுகின்றார்கள். இதன் பின்னால் உள்ள தார்ப்பரியம் அவர்களுக்குப் புரிவதில்லை.

**கேள்வி:**- வரவு–செலவுதிட்டத்தில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட அல்லது உரிய கவனம் வழங்கப்படாத துறைகள் ஏதாவது உள்ளனவா?

**பதில்:**- குறிப்பாக சொல்வதானால் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள், மக்களை முற்றுமுழுதாக அவமானப்படுத்தும் விதத்திலேயே இந்த வரவு–செலவுத் திட்டம் காணப்படுகின்றது,

கல்விக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் அது மாத்திரம் கல்வித்தரத்தை உயர்த்தபோதுமானதா?நிதிகளை அதிகரிப்பதால் மாற்றங்களோ அல்லது புரட்சியோ ஏற்படப்போவதில்லை. இது மேலோட்டமான, தற்காலிகச் சலுகைகளைக் கொண்ட வரவு–செலவுத் திட்டம்.

# சறுக்குது சட்டம்பிகளின் சாணக்கியம்!

செ.உமாசுதன்

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்ற பழமொழி தந்த அர்த்தங்கள் தமிழினத்திற்கு புதியதல்ல. இருந்தும் அதன் அர்த்தங்கள் மீண்டும் மீண்டும் புதிய வடிவங்களில் இலட்சியத்தின் நேர்த்தியான பாதைகளை பதம் பார்த்துக்கொண்டே இருக்கின்றன. திட்டமிட்ட திரு(சதி)விளையாட்டால், திருகுதாளங்கள்ால் தமிழினம் சிதைந்தது; சிதைகிறது. இதை தட்டித்திருத்தவும் துப்புத் துலக்கவும் யாருளார்? நல்லைக் கந்தனே! தமிழினத்தின் காவல் தெய்வமாய் பலம் தந்து எம் வீரத்திற்கு உரம்தந்தவேலுப்பிள்ளையின்அருவுருவமே. வேல் கொண்டு மீண்டும் வரவேண்டும். தமிழினத்திற்கு நல்ல தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று வாழ்ந்த ஓர் சமூகம் ச(க)தியால் திசை மாறும் தன்மை வருந்தத்தக்கது. தன் நிலையில் உரு மாற்றம் பெறுவது தமிழினத்தின் பாதையில் இருளையும் அழிவையும் தருமோ என எண்ணத் தோன்றுகிறது. போர்க் களத்தையும் தேர்தல் களத்தையும் ஒன்றாக ஒப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு சமூக வலைச் சகதியின் சாக்கடைகள் எமக்கு சாபத்தைத் தருகின்றன.

உண்மையிலே இந்தப் போக்கு என்பது எம்மினத்தின் வீரத்தை விலைபேசும் விசும்புத்தனம். செருக்களத்திலே எம்மினத்தின் வேவாயுதங்கள் எதிரியின் விசக்கொடுப்பினுள் செய்த பணியும் அதன்படி உயிராயுதங்கள் செய்த தியாகங்களும் எண்ணிலடங்காதவை. வீரமான நெஞ்சங்கள் என்றும் நொருங்காதவை. விலை போகாதவை. எரிமலையின் குழம்புகளால் நிரம்பியவை. சமூக விடுதலைக்காக தங்களை வரித்துக் கொண்டவை.

ஆனால் தேர்தல் களம் என்பது நாங்கள் கட்சிகளில் இருந்து மக்களின் வாக்குரிமையின் அடிப்படையிலே எங்கள் உரிமை தொடர்பில் பேசுவதற்கென தெரி(கடை)ந்தெடுக்கும் பிரதிநிதிகளின் பிரசன்னமே.

இதற்குக் காசு விளப்பரத்தில் கதை பேசும். துண்டுப் பிரசுரங்களில் வாக்குறுதிகள் வார்த்தைகளாய் விளையாடும். ஆரம்பத்தில் மக்களின் கோரிக்கைகளின் பெறுமதி வலுப்பெறும். எங்கள் வீரர்களின் தியாகம் பேசி அதில் குளிர் காய்பவர்களின் பேச்சு எங்களின் தலையை இதமாய் கோதிவிடும். எல்லாம் நடந்தாகிவிட்டதா மக்களின் கோரிக்கைக்கான பெறுமதி மறைய இந்தப் பிறவிகளின் கேளிக்கைகள் மண்டையைக் குடையும். பேசுவோம் பேசுவோம் என்று சொகுசாய் இருந்து பதுங்குகிறார்கள். பல சமயம் பம்மி, பம்மாத்து விடுகிறார்கள். மக்கள் பிரச்சினை மறந்துபோக மாறி மாறி குறை கூறி வசை பாடி மல்லுக் கட்டுகிறார்கள்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று சொல்லுமளவுக்கு புலித்தோல் போர்த்திய நரிக் கூட்டமொன்று இவர்களுக்குள் நடமாடித்திரிகிறது. இவர்கள் தமிழருக்குத் தீர்வை பெற்றுத்தர உரிமை எனும் இலட்சிய மடைய களமாடிய வீரங்களுடன் ஒப்பிடக் கூடியவர்களா? தியாகங்களில் குளிர்காயவும் வாய் நிறைய ஆங்கிலத்தில் பிதற்றி தீர்வைத் தருவதற்கு தாங்கள் 'பிசி'யாக இருப்பதாகக் காட்டி வியாபாரம் செய்கின்ற தரகர்களாக மாறிவிட்டனர்.

> நாங்கள் அகிம்சை வழியில் பின்னர் ஆயுத வழியில் போராடினோம். மீண்டும் அகிம் சைக்குத் திரும்பியிருக்கையில் நீவிர்தானே இராஜ தந்திர ரீதியில் போராடி தீர்வைப் பெற முயற்சிப்போம் என்றீர்கள். அதற்குத் தானே வந்தீர்கள். வந்த வேலையை விட்டுவிட்டு, இப்போது ஏன் விண்ணாங்களின் புராணத்தில் இறங்கிவிட்டீர்கள்?



எங்கள் எல்லையிடல்களில் ஏற்பட்ட தட்டிக் கேட்கும் சொல்லித் திருத்தும் கட்டுக்கோப்பான பல விடயங்களின் இழப்பு தமிழினத்தின் தற்போதைய செயல் வடிவங்களில் கலப்படத்தை தோற்றுவித்து விட்டதான கலக்கமும் குழப்பமும் மக்கள் மத்தியில் தென்படுகிறது. எங்கு சென்றாலும் அவர்களின் புலம்பல். எங்கள் இனத்திற்கு ஏன் இந்தச் சாபக்கேடு. நாங்கள் என்ன பாவத்தை செய்தோம்? தியாகத்தைத்தவிர நாங்கள் செய்த பாவம் என்ன? சொந்த மண்ணைக்காக்க வீட்டுக்கொருவரைக் கொடுத்தோம். சோகங்கள் எங்களை புடைத்தாலும் இறுமாப்போடு இருந்தோம்... இன்று? சாட்டுக்கொரு நாடாளுமன்றம் எனும் சட்டை. அது இனவாதங்கள் கூடி கூத்தடிக்கும் குட்டை. இதிலிருந்து நல்ல நிஷ்டை பெற எங்களின் சட்டைகள் எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கேட்டுவிட்டு. "ஓம்..ஓம்..எல்லாம் வரப் போகுது" என்று சாமரம் வீசுகின்றன. அப்படி இருந்தால் ஒன்றும் ஆகாது, ஒன்றுக்கும் உதவாது என்பதை அண்மையில் கைதிகள் விடுதலையில் புரிந்துகொண்ட பின்னரும் அப்படியே இருப்பது ஆபத்தானது. குட்டையுடன் சொறிச் சேட்டைகள் விட்டு தெளிந்த நீரை (தீர்வைப்) பெற வேண்டும். அதைவிடுத்து சோம்பேறித்தனமாக இருந்து, வம்பளக்கக்கூடாது. சொல்லால், செயலால் அடித்துத் திருத்தி பக்குவமாய் பெறமுயற்சிக்க வேண்டும். பவ்வியமாய் பதுங்கி விடக்கூடாது.

வெளிநாட்டுக்குப் போனால் கோட்டும் ஒரு சூட்டுமாய், பிறகு ஊருக்குள் வந்தால் வேட்டியும் சேட்டுமாய்... பல இடங்களில் (கூட்டம்) கூட்டமாய். மக்களின் வாழ்வோ நிர்க்கதி நிலையில். தீர்வு என்பதோ கால நீட்சியின் கரங்களில் கசங்கியபடி... எப்போது மீட்சி? அது பற்றிக் கவலை எம் சட்டம்பிகளுக்குக் கிஞ்சித்தும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்களுக்குள் வார்த்தைகளால் கட்டிப் புரள்கிறார்கள். ஒருவர் வழங்கிய விளக்கத்திற்கு பதில் விளக்கத்தை மாறி மாறி கொடுத்து எங்கள் மண்டையைப் புடைக்க வைக்கிறார்கள். இத்தனை திறமையையும் ஏன் கொழும்பில் காட்டி, ஒன்றையும் – ஒன்றேயொன்றையும் கூட – இவர்களால் பறித்துத் தரத்தானும் – குறைந்தது எடுத்துத் தரத்தானும் முடியவில்லை?

வீர முழக்கங்களில் விண்ணாணம் காட்டி மக்களுக்கு தங்களின் சாணக்கியத்தைச் சாணை பிடித்துக் காட்டுகிறவர்களே, நீங்கள் ஏன் உங்கள் விண்ணாணங்களை இதுவரை எமக்குப் பயன்பெறும் வகையில் பயன்படுத்தவில்லை என்று விளக்கம் சொல்வீர்களா? இல்லை அப்படி உங்கள் விண்ணாணங்களை எங்களுக்குச் சார்பாக நீங்கள் பயன்படுத்த முடியாத வகையில் யாம் செய்த குற்றங்கள் என்னவென்றாகிலும் சொல்லுவீர்களா?

நாங்கள் அகிம்சை வழியில் பின்னர் ஆயுத வழியில் போராடினோம். மீண்டும் அகிம்சைக்குத் திரும்பியிருக்கையில் நீவிர்தானே இராஜதந்திர ரீதியில் போராடித்தீர்வைப் பெற முயற்சிப்போம் என்றீர்கள். அதற்குத் தானே வந்தீர்கள். வந்த வேலையை விட்டுவிட்டு, இப்போது ஏன் விண்ணாங்களின் புராணத்தில் இறங்கிவிட்டீர்கள்?

எங்களின் வலுவான ஓர் இராணுவக் கட்டமைப்பேயே சாய்த்துவிட சூழ்ந்திருந்த இராஜ தந்திரங்களை சரியாக எடை போட்டு படை நடத்த வேண்டிய நேரத்தில் நீவிர் ஏன் மடை திறந்த வெள்ளமாக அறிக்கைப் போர் நடத்துகிறீர்கள்? கற்றறிந்த உங்களினால் எங்களுக்கும் ஏதாகினும் பயன் கிட்டும் என்றுதானே காத்துக் கிடக்கிறோம். உங்களுக்காகிலும் வாகனம், வீடு, வாடகை வசதி எல்லாமும் கிடைத்தன. எங்களுக்கு...? என்றாகிலும் எங்கள் நிலை குறித்துச் சிந்தித்ததுண்டா? வெறும் வார்த்தைகளில் வசியம் பண்ணுவதால் எதுவும் சாத்தியப்படாது. நிச்சயம் சறுக்கும். ஆனைக்கும் அடி சறுக்கும் என்பதனை 2009இல் அனுபவப் பாடங்களாக பெற்றுக் கொண்டவர்கள் நாம். புரிந்துகொள்ளுங்கள். ஆழமான ஆத்மார்த்தமான திட்டமிடல்களும் தியாகங்களும் ஆணிவேராய் அசையாதிருந்த சங்கிலித் தொடர்கள் எப்படி அறுந்து போயின என்பதை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பாருங்கள்.

நேரம் நீண்டதல்ல. நீங்கள் உங்களுக்குள் சண்டை பிடித்துக் கொண்டிருப்பதற்கு. உங்களின் தந்திரங்களை விரைவாக பிரயோகியுங்கள்; உங்கள் சேட்டைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு. என்ன நடக்கிறது என்பதை பொறுமைக்கு இலக்கணமான மக்கள் நாங்கள் பொறுத்திருந்த பார்த்திருக்கிறோம். நீங்கள் சொல்ல வேண்டாம்.

# மர்மமாகி மறைந்த மர்மம் – WT1190Z!



கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2016ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையும் அதன் துண்டு விழும் தொகையும் பரபரப்பாக்கியிருந்தது என்றால் அதற்கு முந்தைய வெள்ளிக்கிழமையை, வான் பரப்பிலிருந்து விழுந்த துண்டொன்று பரபரப்பிற்குள்ளாக்கியிருந்தது.

குறித்த வெள்ளிக்கிழமை துரதிர்ஷ்ட இலக்கமான 13ஆம் திகதியில் வந்து ஏற்கெனவே கிலேசத்தை கிளப்பியிருந்த வேளையிலேயே WT1190Z என்று நாமமிடப்பட்ட விண்குப்பை வேறு விருந்தினராக பூமியை நோக்கி அதுவும் இலங்கையை நோக்கி வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வளிமண்டலத்துக்கூடாகத் துளைத்து வரும் இந்த வான்பொருள், இலங்கையின் தென்பிரதேச கடற்பரப்பில் பூமியின் மேற்பரப்பை முத்தமிட முயற்சிக்கலாம் என ஆரூடங்கள் கூறப்பட்டு அதனை கண்காணிப்பதற்காகவும் ஏன் கண்டுகளிப்பதற்காகவும்கூட ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த கறுப்பு வெள்ளிக்கிழமையில் வேறுசில அசம்பாவிதங்கள் சம்பவித்திருந்த நிலையிலும் இலங்கையைப் பொறுத்தவரையில் அது ஆபத்து எதனையும் விளைவித்திருக்கவில்லை.

### இது என்ன?

WT1190Z என்று பெயரிடப்பட்டிருந்த இந்த மர்மப் பொருளுக்குரிய சரியான முன்கதைச் சுருக்கம் அறியப்படாத நிலையில், ஆரம்பத்தில் இது ஒரு விண்கல் என்றே கருதப்பட்டது. பின்னர் மனிதனால் அனுப்பப்பட்ட விண்வெளி ஓடமொன்றின் பாகமாக இருக்கலாம் என்று எதிர்வு கூறப்பட்டது. குறிப்பாக 1969இல் அனுப்பப்பட்ட அப்பலோ விண்கலத்தின் பாகமொன்றாகவே கருதப்பட்டது.

2009ஆம் வருடத்திலிருந்து புவி ஒழுக்குப் பாதையிலிருந்த இந்த மர்மப்பொருள், முதன்முதலாக 2013ஆம் ஆண்டில் கற்றலினா விண் ஆய்வு மையத்தினால் இனங்காணப்பட்டது. பின்னர் அதன் நகர்வு தொடர்பில் அவதானிக்கப்பட்டபோதிலும் சில காலங்களுக்குப் பிறகு கடந்த ஐப்பசி மாதத்தில் மீண்டும் அது தென்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அந்தப் பொருள், புவியின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் நுழைவதற்கான சாத்தியக்கூறு இருப்பதனை அவதானித்த வானியலாளர்கள், கார்த்திகை மாதம் 13ஆம் திகதியளவில் வளிமண்டலத்தினுள் புகும் என எதிர்வுகூறினர்.

அபரிமிதமான வேகத்துடன் வளிமண்டலத்தினுள் பிரவேசிக்கும்போது ஏற்படும் உராய்வினால் அந்த மர்மப் பொருள் தீப்பற்றக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், விநாடிக்கு 11 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் WT1190Z, கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10.50இற்கும் 12.50இற்கும் இடைப்பட்ட நேரப்பகுதியில் இலங்கையின் தென்கடற் பிராந்தியத்தில்கரையோரத்திலிருந்து 65 கி.மீ. தொலைவில் கடலில் விழும் என்று ஆரூடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### அழிவு தவிர்ப்பு முன்னெச்சரிக்கை

வானியலாளர்களின் எதிர்வுகூறலுக்கு அமைவாக குறித்த கடற்பிரதேசம் குறிப்பிட்ட காலப் பகுதியில் சூனியப் பிரதேசமாக்கப்பட்டிருந்தது. விமானங்கள் பறப்பதற்கு அனுமதிக்கப்படாததுடன் மீன்பிடிக்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அவசரநிலை ஏற்படுமிடத்து அதனைக் கையாள்வதற்காகக் கடற்படைப் படகுகளும் அந்தப் பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இடர் முகாமைத்துவ நிலையத்தின் தகவலின்படி அவர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்ட நிலையில் நிலைமைகளை அவதானித்தபடி இருந்தனர்.

### வந்து சேர்ந்த வானியலாளர்கள்!

WT1190Z விண்குப்பையின் வரவு, நடத்தை மற்றும் மறைவு என்பவற்றை அவதானிக்கும் பொருட்டு விண்ணாய்வுமையங்களைச்சார்ந்தவிற்பன்னர்கள் பலரும் இலங்கைக்கு வருகை தந்தனர். ஐரோப்பிய விண்ணாய்வு முகவர் நிறுவனக் குழுவினர் இலங்கையின் தென்முனையில் முகாமிட்டிருந்தனர்.

ஐக்கிய அரபு இராச்சிய விண்வெளி முகவர் நிறுவனப் பிரதிநிதிகளும் ஜெட் விமானம் ஒன்றில் மேற்படி மர்மப்பொருளின் நடவடிக்கைகளை அவதானித்தபடி இருந்தனர்.

விண்வெளி ஆய்வு மற்றும் தகவல்களுடன் தொடர்புடைய இலங்கையின் உள்நாட்டு அமைப்புக்களான ஆதர் சி.கிளார்க் நிறுவனம், கொழும்பு, உருகுணை பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத் துறையினர் மற்றும் இலங்கை கோள் மண்டல தரப்பினரும் வெளிநாட்டு வானியலாளர்களுடன் இணைந்து WT1190Z பற்றிய தகவல்களை வழங்கியபடி இருந்தனர்.

### கடைசியில் WT1190Z க்கு என்ன நிகழ்ந்தது?

இலங்கையின் தென்பிராந்திய கடற்பரப்பில் தனது முடிவுரையை எழுதுவதற்காக வந்த விண்பொருள் எதிர்பார்க்கப்பட்டது போல எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில் கடலில் வந்து குதிக்க வில்லை. ஆனால் எதிர்வுகூறப்பட்டது போல வளி மண்டலத்தில் பிரவேசித்திருந்தது. வந்த வேகத்தில் வளிமண்டலத்தில் பிரவேசித்தபின் ஏறக்குறைய 100 கி.மீ. தூரத்திற்கப்பால் உராய்வு காரணமாக தீப்பிடித்து முற்றாக எரிந்து துண்டுகளாக் சிதறியிருக்கிறது.

தரையில் நிலைகொண்டிருந்த அவதானிப்பாளர்கள், கடுமையான முகிற்கூட்டம் காரணமாக இதனை அவதானிக்காதபோதும் பின்னைய தகவல்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. WT1190Z ஒளிக் கோளமாய் வளிமண்டலத்தில் பயணிப்பதை பதிவு செய்த ஒளிப்படங்களும் வெளயாகியுள்ளன.

காலி, இரத்கம ழற்றும் ஹபராதுவ பிரதேசவாசிகள் குறிப்பிட்ட நேரப் பகுதியில் கடற்பகுதியில் பெரும் சத்தத்தைத்தாம் கேட்டனர் என்று தெரிவித்துள்ள போதிலும் குறித்த சத்தம் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதுதானா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருந்த இந்த நிகழ்வு, அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நடந்து முடிந்திருந்ததுடன் அறிவியல் எதிர்வுகூறல்கள் மற்றும் விழிப்புணர்வு தொடர்பில் பெருமிதத்தையும் கொடுத்தது.

> வானியலாளர்களின் எதிர்வுகூறலுக்கு அமைவாக குறித்த கடற்பிரதேசம் குறிப்பிட்ட காலப் பகுதியில் சூனியப் பிரதேசமாக்கப்பட்டிருந்தது. விமானங்கள் பறப்பதற்கு அனுமதிக் கப்படாததுடன் மீன் பிடிக்கும் தடைவிதிக் கப்பட்டிருந்தது. அவசர நிலை ஏற்படு மிடத்து அதனைக் கையாள்வதற் காகக் கடற்படைப் படகுகளும் அந்தப் பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இடங்களின் பெயர்களை எழுதும்போது இவற்றைச் சரிபார்ப்பதற்கு ஆள்களில் லையா? அவ்வளவுக்கு ஏனோ தானோ என்ற அசமந்தப் போக்கா? அதாவது தமிழர் வாழும் பிரதேசத்தில் தமிழர்களால் நடத்தப்படும் இந்தத் தரிப்பு நிலையத்திலேயே இவ்வளவு தமிழ்க் கொலைகள் என்றால், பெருவெள்ளமாகத் தமிழ் அழிந்து வருகிறது என்பதுதானே உண்மை.

# வடக்கில் தமிழ் தேயுமா? சாகுமா?

வ.சிவராசா

**17** வருடங்களின்பின்பு தாயகத்தைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது, இந்த வருடம் ஐப்பசி மாதம். இலங்கையின் பல பாகங்களையும் சென்று சுற்றிப் பார்க்கும் ஓர் அரிய வாய்ப்பு. பிறந்த நாடும் பெற்றதாயும் என்றும் நனி சிறந்தவைதானே!

இலங்கை தற்போது பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. போர்ச்சூழல் மறைந்து மக்கள் இயல்பாக வாழும் நிலை தோன்றியிருக்கிறது. மனதுக்கு அமைதியாகவே இருந்தது. இந்த நிலை என்றும் நீடிக்க வேண்டும்.

நான் மூன்று வாரங்களில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பயணித்தேன். எப்போதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து வண்டிகளையே பயன்படுத்தினேன். யாழ். பேருந்து நிலையம் எப்போதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பிக் களைகட்டியபடி இருக்கிறது. ஆனாலும் ஒப்பீட்டளவில் போக்குவரத்து நெரிசல் குறைவுதான்.

தனியார் பேருந்துகளும் சிறிய ரக வான்களும் போட்டி போட்டுக்கொண்டு சேவைகளை வழங்குகின்றன. 6வருடங்களுக்கு முன் செல்ல முடியாத ஊர்கள், நகரங்களுக்கெல்லாம் வடக்குச் சாலையின் பேருந்துகள் யாழ்ப்பாண நிலையத்தில் இருந்து சீறுகின்றன. கண்டி, கொழும்பு, அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை என எல்லாப் பகுதிகளுக்கும் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அனேகமாக, குறிப்பிட்ட நேரத்தில் வண்டிகள் புறப்படுகின்றன. குறித்த நேரத்திற்குப் போய்ச் சேருகின்றன. இது உண்மையிலேயே நல்ல விடயம்.

யாழ். தரிப்பு நிலையம் சிறியது; ஆனால் அழகானது. ஆனால், அங்கு காணப்பட்ட தமிழைப் பார்த்தபோதுதான் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ஒவ்வொரு வண்டியும் செல்லும் இடங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்ததைக் கூர்ந்து கூர்ந்து பார்த்தேன். ஏனெனில் கண்ணில்பட்ட ஒரு பெயரில் தமிழ்க் கொலை தெரிந்தது. வடக்கில், அதிலும் யாழ்ப்பாணத்தில், தமிழர்களின் கலாசாரத் தலைநகரம் என்றெல்லாம் பெருமைப்படும் இடத்தில் இப்படியொரு தவறா என்று ஏங்கிப்போனேன். ஆச்சரியமும் கவலையும் வேதனையும் ஒருங்கே வந்தன.

எழுத்துக்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் நல்ல அழகாக எழுதப்பட்டிருந்தன. ஆனால் தமிழ்.... கொலை செய்யப்பட்டிருந்தது. என்னுடைய ஒளிப்படக் கருவிக்குள் எல்லாவற்றையும் பதுக்கிக்கொண்டேன்.

மன்னார் என்ற இடத்திற்கு - மன்னர்
கோவிலாக்கண்டி என்ற இடத்திற்கு -
கேவிலாக்கண்டி
திருநெல்வேலி என்ற இடத்திற்கு -
திநூநெல்வேலி
கனகன்புளியடி என்ற இடத்திற்கு -
கனகன்புலியடி

இப்படியாக ன-னா, கோ-கே, ரு-நூ, லி-ளி என்ற எழுத்துக்கள் மொத்தமும் குதறப்பட்டிருந்தன.

தமிழின் ஒலிப்பு வித்தியாசம் தெரியாமல் யாரோ ஒரு புண்ணியவான் இவற்றை எழுதி முடித்திருக்கிறார். ஒருவேளை ஒப்பந்தகாரர் சிங்களவராக இருந்துகூட இந்தத் தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். ஆனால் யாரும் அது பற்றி அலட்டிக்கொள்ளவில்லை என்பதுதான் கவலை தருவது. அதிகாரிகள் அவற்றைத் திருத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வேதனையளிக்கிறது. பயணிகள் நிலையோ அதைவிட மோசமாகி இருக்கிறது. தாங்கள் பயணம் முடிந்தால் போதும் என்று அவர்களும் இந்தப் பிழைகளை எல்லாம் மன்னித்து ஏற்கத் தொடங்கியிருப்பதும், ஊடகங்கள்கூட அவற்றைச் சுட்டிக்காட்டாது இருந்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இது எவ்வளவு தவறான விடயம். ஏன் இந்தத் தவறு நிகழ்ந்தது. இடங்களின் பெயர்களை எழுதும்போது இவற்றைச் சரிபார்ப்பதற்கு ஆள்களில்லையா? அவ்வளவுக்கு ஏனோ தானோ என்ற அசமந்தப் போக்கா? அதாவது தமிழர் வாழும் பிரதேசத்தில் தமிழர்களால் நடத்தப்படும் இந்தத் தரிப்பு நிலையத்திலேயே இவ்வளவு தமிழ்க் கொலைகள் என்றால், பெருவெள்ளமாகத் தமிழ் அழிந்து வருகிறது என்பதுதானே உண்மை. இந்த நிலையில் கொழும்பிலும் பிற சிங்கள மாவட்டங்களிலும் இருந்து வரும் வண்டிகளில் தமிழ்க் கொலை குறித்து நாம் -தமிழர்கள் எப்படிக் குற்றஞ் சாட்ட முடியும்? நம்மவர்களே நம் தாய்மொழியை அழித்துக்கொண்டு பிற இனத்தவர் தமிழை அழிக்கிறார்கள் என்று கூக்குரல் போடுவது எந்தவிதத்தில் நியாயம்? நாளைய தமிழ்ச் சந்ததியின் நிலை என்ன?

இந்த விடயங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகங்களோ, சமூக ஆர்வலர்களோ, அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ ஏன் கண்டுகொள்வதில்லை? இன்றைய தமிழ்ச் சமூகம் பொதுநலம், மனிதநேயத்தை இழந்து வருகிறதா? யாரைப் பார்த்தாலும் பணம்... பணம்... என அலையும் மனிதர்களாகவே மாற்றமடைந்திருக்கிறார்கள். பணத்தை தேடி ஓடும் வேகத்தில் இனம், மொழி எல்லாம் காணாமல்போய்விட்டது. இது வேதனைக்குரியது. எங்கள் மொழியும் எங்கள் இனமும் உலகத்தில் மூத்த இனம், மொழி என நாம் வாய்கிழியக் கத்துகிறோம். ஆனால் செயற்படுகிறோமா?

எங்கள் மொழியின் அழிவுக்கு இங்கு சுட்டிக்காட்டிய இது போன்ற சம்பவங்களும் காரணம்தான். இது ஒரு துளி மட்டும்தான். அதுபோல பல பல இருக்கின்றன. இவை தமிழின் அழிவை எதிர்காலத்தில் சாத்தியமாக்கிவிடும். எனவே தமிழைக் கொலை செய்வதை தமிழர் பகுதிகளிலாவது கைக்கொள்ளாமல் இருப்பதற்கு உறுதிபூணுவோம். வடக்குச் சாலைகளின் அதிகாரிகள் கவனமெடுத்து விட்டபிழைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். தமிழை வாழவைக்க வேண்டும்.

நமது தமிழை நாம்தான் பேணிப் பாதுகாக்க வேண்டும். உரியவர்கள் இவைபோன்ற விடயங்களில் கவனம் செலுத்தித் தமிழை வாழ வைத்தால் அதுவே தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாக அமையும். தமிழ் இனி மெல்லச் சாகுமா? என்ற கேள்வியே எழாத வகையில் சிந்திப்போம் செயற்படுவோம்!

*(கட்டுரையாளர் ஜேர்மனியில் வசிப்பவர், அங்கும் தொடர்ந்து செயற்பட்டு வரும் தமிழ்ப் பத்திரிகையாளர்).*



# படிப்பினையை மறக்கக்கூடாது இந்த அரசு!

மதுமிதன்

நல்லாட்சிக்கான அரசு என்று சொல்லி தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து பல மாதங்கள் கடந்து விட்டன. எனினும் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய பல வாக்குறுதிகள் புதிய அரசின் நிலுவைப் பட்டியலில்தான் இன்னும் இருக்கின்றன. நல்லாட்சியிடமிருந்து கிடைக்கும் என்ற மக்களின் காத்திருப்புக்கள் பல பகல் கனவுகளாக நிறைவேற்றப்படாமலே இருக்கின்றன.

ஆட்சி மாற்றத்துக்குத் தமிழ் மக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர். ஜனாதிபதித் தேர்தலின்போதும் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் ஐயமோ தடுமாற்றமோ இன்றி ஆட்சி மாற்றத்தைத் தமிழ் மக்கள் ஆதரித்தனர். அதனால் சிறுபான்மையின மக்களின் வாக்குகளுக்கூடாகவே மைத்திரியும் தற்போதைய அரச தலைமையினரும் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதனை தற்போதைய அரசும் ஏற்றுக்கொண்டிருந்தது. அதனால்தான் ஆட்சி அமைத்த சில நாள்களில் தமிழ் மக்களுக்குத் தான் நன்றிக்கடன் பட்டுள்ளதாகக் கூறியிருந்தது. ஆனால் அந்தக் கூற்று உதட்டளவில் மாத்திரமே நின்று போனதுதான் தமிழர்களின் கவலை.

மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயங்களின் நீக்கம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு என்ற அனைத்து விடயங்களிலும் அரசு தமிழ் மக்கள் எதிர்பார்த்த பயனைத் தரத் தவறியுள்ளது.

அதிலும் அண்மைக் காலங்களில் அதிகம் பேசப்படும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அரசு தனது இரட்டை வேடத்தை நீக்கி ஒரு நிலையான முடிவைத் தர வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, வடக்கு – கிழக்கு முழுவதும் முழு அடைப்பை நடத்தி தமது ஆதரவைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வெளிப்படுத்தியிருந்தனர். மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் தமது ஒட்டு மொத்த ஆதரவை வழங்கியிருந்தனர். ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் இந்த வெளிப்பாட்டைத் தனக்கு விடுக்கப்பட்ட முதற்கட்ட சிவப்பு எச்சரிக்கையாகவே அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த 13ஆம் திகதி அழைப்பு விடுக்கப்பட்டிருந்த முழு அடைப்புப் போராட்டம் எதிர்பார்த்திருந்ததைப் பார்க்கிலும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. வடக்கு – கிழக்கு உட்பட்ட தமிழர் தாயகத்தில் வெளி அழுத்தங்கள் ஏதுமின்றி – அமைதியாக – முழு அளவில் நடந்தேறியது. தமிழ் மக்கள் கட்சி பேதமின்றி தமது ஒருமித்த கருத்தை இந்த முழு அடைப்புப் போராட்டத்தின் ஊடாக வெளிக்காட்டியிருந்தனர். அரச இயந்திரம் இந்த முழு அடைப்புப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கு மென்முறையான சில உத்திகளைக் கையாண்டிருந்தாலும், தமிழ் மக்கள் அவற்றுக்கு மசியாது தமது ஒட்டுமொத்த ஆதரவையும் வழங்கியிருந்தனர். சில அத்தியாவசிய சேவைகள் தவிர ஏனைய அனைத்து சேவைகளும் முடக்கம் கண்டன. பாடசாலைகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வரவின்மையால் மூடப்பட்டிருந்தன. சில்லறைக் கடைகள், பெரிய வர்த்தக நிறுவனங்கள், சந்தைகள் என்பன இயங்கவில்லை. அன்றைய தினம் கந்தசஷ்டி விரதத்தின் ஆரம்ப நாளாக இருந்த போதிலும், கோயில்களில்கூட காலையில் மிக எளிமையான முறையில் மட்டுமே வழிபாடு இடம்பெற்றது. தனியார் போக்குவரத்து மற்றும் அரச போக்குவரத்து சேவைகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தன. முழு அளவில் என்றுகூடச் சொல்லிக்கொள்ளலாம்.

அன்றைய தினம் சில தேசிய மட்டப் பரீட்சைகள் காரணமாகவும் தவிர்க்க முடியாத அத்தியாவசிய தேவைகளுக்காகவும் வெளியே சென்றவர்கள் தவிர, ஏனையோர் அனைவரும் வீட்டில் முடங்கியிருந்து தமது எதிர்ப்பை அரசுக்கு வெளிப்படுத்தினர். புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் காட்டிய அணி திரள்வுக்குச் சமமானதாக இந்த எதிர்ப்பலையும் அமைந்திருந்தது.

அரசு இந்த எதிர்ப்பலையை வெறும் பத்தொடு பதினொன்றாகப் பார்க்கக்கூடாது. தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசி விட்டு, ஆட்சிக்கு வந்ததும் அவை அனைத்தையும் மறந்துவிட்டு ஆறு ஆண்டுகளை எப்படியும் ஓட்டி விடலாம் எனப் புதிய அரசு எண்ணுமானால் அந்தச் சிந்தனை புதிய அரசின் சரிவுக்கு அடிக்கப்படும் முதலாவது சாவுமணி என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இடிப்பாரை இல்லாத ஏமார மன்னனாக கெடுப்பாரின்றி கெட்ட, முன்னைய மகிந்த அரசுக்கு நடந்த கதியை தற்போதைய அரசும் நினைவில் வைத்திருக்க வேண்டும். தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் மதிப்பளிக்காததாலேயே மகிந்த அரசை தூக்கி எறிவதில் தமிழ் மக்கள் கடும் ஆர்வத்துடன் செயற்பட்டார்கள். கடந்தகாலத் தேர்தல் வரலாறு சொல்லும் இந்தப் படிப்பினையைத் தற்போதைய அரசும் மனதில் கொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகத் தீர்க்கமான ஒரு முடிவை எடுப்பதன் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தற்போதைய அரசு தன்னுடைய அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். வெறும் பகட்டான வெளிவேடப் பேச்சுக்களையும் போலி வாக்குறுதிகளையும் விடுத்து ஆக்கபூர்வமான முடிவொன்றை எடுக்க வேண்டும்.

நீண்டகாலமாக எந்தவித விசாரணையுமின்றி சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு நிபந்தனைகள் எதுவுமின்றியே அவர்களை விடுவிக்க முடியும். இறுதிப்போரின் பின்பு விடுதலைப் புலிகளின் முக்கியமான உறுப்பினர்கள் பலர் சரணடைந்து புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டும், உட்படுத்தப்படாமலும் விடுவிக்கப்பட்டுள்ள போது வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கும் இவர்களை விடுவிப்பதன் மூலம் அரசு மிகப் பெரிய அச்சுறுத்தல் எதனையும் எதிர்கொள்ளப் போவதில்லை.

அதேபோல தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதனால் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவை இழந்து விடுவோம் என அரசு அச்சம் கொள்ளவும் தேவையில்லை. இனவாத சிந்தனையுள்ள ஒரு சில சிங்களவர்களைத் தவிர, பெரும்பான்மையான சிங்கள மக்கள் இவை எதனையும் கருத்தில் எடுக்கக் கூடவில்லை என்பதே வெளிப்படையான நிதர்சனமாகும்.

தமிழ்க் கைதிகளை பிணையில் விடுவிப்பதற்குக்கூட சட்ட மா அதிபரின் அனுமதியையும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளையும் காரணம் காட்டி அரசு இழுத்தடிப்பதும் ஏற்புடையதல்ல. கடந்த காலங்களில் அரசியல் நோக்கங்களுக்காகவும், பிராந்திய நலன்களுக்காகவும் ஓர் இரவுக்குள்கூட கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனைகளும், நெறிப்படுத்தல்களும் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன என்பதை தற்போதைய அரசு மீளவும் நினைத்துப் பார்க்க வேண்டும். மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கும் தமிழ் கைதிகளின் போராட்டத்துக்கு

> தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகத் தீர்க்கமான ஒரு முடிவை எடுப்பதன் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தற்போதைய அரசு தன்னுடைய அரசியல் எதிர் காலத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும். வெறும் பகட்டான வெளிவேடப் பேச்சுக்களையும் போலி வாக்குறுதிகளையும் விடுத்து ஆக்கபூர்வமான முடிவொன்றை எடுக்க வேண்டும்.



தமிழ் அரசியல் தலைமைகளும் தமக்கு இடையே உள்ள அதிகார, சுய இலாப பனிப் போர்களை மறந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

ஊடகங்களில் வெறுமனே அறிக்கைகளை விட்டுக்கொண்டு வெறும் வாயை மெல்லுவது போல இல்லாமல் ஆக்கபூர்வமான ஆதரவை வழங்க வேண்டும். தமிழ் மக்கள் தமது அதியுன்னத வாக்குரிமை மூலம் தமிழ்த் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளமையானது சொகுசு வாழ்க்கைக்கும் சுக போகங்களுக்காகவும் அல்ல; தமது உரிமைப் போராட்டத்தை முன்கொண்டு செல்லவே!

நலிந்துபோய் வாழ்விழந்து நிற்கும் எம்முடைய தமிழ் சமூகத்தின் விடிவுக்காக உழைப்பதற்கும் அவர்களைச் சரியான வழியில் தலைமையேற்று நடத்துவதற்கும் தமிழ்த் தலைவர்கள் உரத்துடன் செயற்படவேண்டும். அரசுக்குச் சரியான அழுத்தத்தை வழங்குவதன் மூலம் தற்போது எழுந்துள்ள அவசியத் தேவைக்குப் பங்களிப்புச் செய்யவும் அவர்கள் முன்வரவேண்டும்.

இவையெல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து தற்போதைய மைத்திரி அரசும் தன்னுடைய முடிவின் மூலம் தமிழ் மக்களுடைய மனத்தை வெல்வதற்கு வழிதேட வேண்டும். இல்லையேல் இந்த அரசுக்கு எதிராகவும் மாற்று அரசு ஒன்றைத் தேடுவதைத் தவிர வேறு வழி தமிழர்களுக்கு இல்லாமல் போகும்.



# ஆபத்தை உணர்வோம்!


# விழிப்போடு இருப்போம்!

கு. கணேசன்

வழக்கம் போலவே இந்த முறையும் பருவ மழை ஒரு மிரட்டு மிரட்டிவிட்டுச் சென்றிருக்கிறது. பொதுவாகவே வடகிழக்குப் பருவ மழையை 'முரட்டுப் பிள்ளை' என்றுதான் வானியலாளர்கள் சொல்வார்கள். அது எப்போதும் சீரானதாக நட்பானதாக இருப்பதில்லை. திடீரென நினைத்துப் பார்க்க முடியாத வகையில் வேகத்துடன் நகர்ந்து தாக்குவது அதற்குப் பிடித்தமானது. மூன்று நான்கு நாள்கள் தொடர்ந்து பிடித்துக் கொண்டு மனிதர்களை அல்லாட வைப்பதில் அதற்கு அலாதியான விருப்பம் உண்டு. இந்த முறையும் அப்படித்தான். விடாமல் தொடர்ந்து கொட்டி பல பகுதிகளையும் வெள்ளத்தில் மிதக்க விட்டுவிட்டது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து விட்டது. இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றவர்கள் போக ஏனையவர்கள் வீட்டுக்குள்ளேயே உயரமான இடத்தில் ஏறி அமர்ந்து கொண்டனர். அல்லது வீடுகளுக்குள்ளேயே நீந்தித் திரிந்தனர்.
கடந்த ஒரு சில நாள்களாக வெயில் எறிப்பதைத் தொடர்ந்து நிம்மதிப் பெருமூச்சு எல்லோரிடமும் காணப்படுகிறது. ஆனால், வெள்ளம் வற்றி தண்ணீர் வடிந்ததுடன் எல்லாப் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்துவிட்டன என்று பொருள்கொள்ளக் கூடாது. வெள்ளத்தால் ஏற்படக்கூடிய நோய்கள் இனிமேல்தான் வேகமாகப் பரவும். அது குறித்து எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

### வைரஸ் காய்ச்சல்

ஃபுளு எனப்படும் வைரஸ் காய்ச்சல்தான் மழைக் காலத்தில் ஏற்படுகிற பிரதான நோய். காய்ச்சல், தலைவலி, உடல்வலி, கைகால்வலி கடுமையாக இருக்கும். தும்மல், மூக்கு ஒழுகுதல், சளி, இருமல் தொல்லை கொடுக்கும். இந்த வைரஸ் காய்ச்சலுக்கு எந்த ஒரு சிறப்புச் சிகிச்சையும் இல்லை. காய்ச்சலைக் குறைக்க 'பாரசிட்டமால்' மாத்திரை உத வும் (ஆனால் மருத்துவரின் ஆலோசனை இன்றி அதனைப் பயன்படுத்தவேண்டாம்). உடலில் நோய் எதிர்ப் புச் சக்தி சரியாக இருந்தால், ஒரு வாரத்தில் இது தானாகவே சரியாகிவிடும். அடுத்தவர்களுக்கு இது பரவாமலிருக்கச் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
குழந்தைகளுக்கு வைரஸ் காய்ச்சல் வந்தால், நல்ல காற்றோட்டமான அறையில் படுக்க வைக்க வேண்டும். பள்ளிக்கு அனுப்பாமல் தேவையான அளவுக்கு ஓய்வு எடுக்கச் சொல்ல வேண்டும். திரவ உணவுகளை அடிக்கடி கொடுக்கவேண்டும். காய்ச்சல் அதிகமாக இருந்தால் சாதாரணத் தண்ணீரில் சுத்தமான துண்டை நனைத்துப் பிழிந்து குழந்தையின் உடல் முழுவதும் விரிக்க வேண்டும்.



### வாந்திபேதி

பாக்டீரியா/வைரஸ் கிருமிகள் மாச டைந்த குடிதண்ணீர் மற்றும் உணவு மூலம் நமக்குப் பரவுவதால் வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்படுகின்றன. ஈக்களும் எறும்புகளும் இக்கிருமிகளைப் பரப்புகின்றன. வழக்கத்தில் இந்த நோயாளிகள் அதிகளவில் நீரிழப்பு ஏற்பட்டு மயக்கம், இறப்பு என ஆபத்தை நெருங்குவார்கள். எனவே, இவர்கள் சுத்தமான குடிதண்ணீர்/ உப்புக் கரைசல் நீர் அடிக்கடி குடிக்க வேண்டும் அல்லது சேலைன் ஏற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நீரிழப்பு சரியாகும்.
இந்த நோய்களைத் தடுக்க, கைகளை சோப்பு போட்டு நன்றாகக் கழுவ வேண்டும். தண்ணீரைக் குறைந்தது பத்து நிமிடம் கொதிக்க வைத்து, ஆற வைத்துக் குடிப்பது நல்லது. குடிதண்ணீர்ப் பாத்திரங் களையும், சமைத்த உணவுகளையும் ஈக்கள் மொய்க்கா மல் மூடிப் பாதுகாக்கவேண்டும். வெளியிடங்களிலும் சாலையோர தள்ளு வண்டில்களிலும் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படுகிற ரோட்டா வைரஸ் வயிற்றுப்போக்கைத் தடுக்கத் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். தேங்கிக் கிடக்கும் நீரில் குழந்தைகளை விளையாடவிட வேண்டாம்.

### சீதபேதி

அமீபா, சிகெல்லா, ஜியார்டியா போன்ற கிருமிகள் சீதபேதிக்குக் காரணம். தெருக்கள், குளக்கரை மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் மலம் கழிக்கும்போது, மலத்தில் வெளியாகும் இக்கிருமிகளின் முட்டைகள், மழைக் காலத்தில் சாக்கடைநீர் மற்றும் குடிதண் ணீரில் கலந்து நம்மைத் தொற்றிவிடும்.
இவை நம் குடலை அடைந்ததும் கிருமியாக வள ரும். அப்போது சீதபேதி ஏற்படும். காய்ச்சல், அடிவ யிற்றுவலி, மலத்தில் சீதமும் குருதியும் கலந்துபோவது போன்ற அறிகுறிகள் உண்டாகும். சீதபேதியைத் தடுக்க சுயத் தூய்மை, சுற்றுப்புறத்தூய்மை, குடிநீர்த்தூய்மை, உணவுத் தூய்மை ஆகியவை மிக அவசியம். முக்கியமாக, தெருக்களில் மலம் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

### கண்நோய்

'அடினோ வைரஸ்' கிருமிகளின் தாக்குதலால் இது வருகிறது. அடுத்தவர்களுக்கு மிக எளிதாகப் பரவக் கூடியது. கண் சிவந்து கண்ணீர்வடிதல், எரிச்சல், வலி, வீக்கம் இதன் அறிகுறிகள். இதற்குச் சொட்டு மருந்துகள் உள்ளன. மருத்துவர் யோசனைப்படி சொட்டு மருந்தைத் தேர்வு செய்வது நல்லது; சுய மருத்துவம் வேண்டாம். இந்த நோய் வராமல் தவிர்க்க, கண்நோய் வந்தவர் கண்ணைக் கசக்கக்கூடாது. கைகளை அடிக்கடி சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். நோயுள்ளவர் பயன்படுத்திய கைக்குட்டை, துண்டு, சோப்பு, தலையணை, பற்பசை போன்றவற்றை மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது.

### நெருப்புக் காய்ச்சல்

'சால்மோனெல்லா' எனும் பாக்டீரியாக்களால் இந்த நோய் வருகிறது. இந்தக் கிருமிகளும் மாசடைந்த குடிதண்ணீர் மற்றும் உணவு மூலம்தான் மற்றவர்களுக்குப் பரவுகின்றன. யாழ். நகரத்தில் நிலத்தடித் தண்ணீரில் அதிகமாகக் காணப்படுவதாகக் கண்டறியப்பட்ட ஈகோலி முதலிய கிருமியும் இதற்குக் காரணம்.
முதலில் காய்ச்சல், தலைவலி, உடல்வலி கால் வலியுடன் நோய் தொடங்கும். ஒவ்வொரு நாளும் காய்ச்சல் படிப்படியாக அதிகரிக்கும். பசி குறையும். குமட்டல், வாந்தி, வயிற்றுவலி தொல்லை தரும். உடல் சோர்வடையும். இந்தக் காய்ச்சலைக் குணப்படுத்த நவீன மருந்துகள் பல உள்ளன. நோயின் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெற்றுக்கொண்டால் நோய் விரைவில் குணமாகும். இந்த நோய்க்கும் தடுப்பூசி உள்ளது. ஒருமுறை இதைப் போட்டுக்கொண்டால் மூன்று வருடங்களுக்கு நெருப்புக் காய்ச்சல் வராது.

### எலிக் காய்ச்சல்

மழைக் காலத்தில் தெருக்களில் தண்ணீர் தேங்கும் போது, வீட்டில்வளரும்எலி, பெருச்சாளிபோன்றவையும் அந்தத் தண்ணீர் வழியாகச் சென்றுவரும். அப்போது அவற்றின் சிறுநீர்க் கழிவும் அதில் கலக்கும். அந்தக் கழிவுகளில் 'லெப்டோஸ்பைரா' எனும் கிருமிகள் இருந்தால் எலிக் காய்ச்சல் எனப்படும் 'லெப்டோபைரோசிஸ்' நோய் வரும்.
கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தசைவலி, உடல்வலி, மஞ்சள் காமாலை, கண்களில் குருதிக் கசிவு, சிறுநீரிலும் மலத்திலும் குருதி போவது போன்றவை இதன் முக்கிய அறிகுறிகள். தெருக்களில் நடக்கும்போது கணுக்கால் மூடும்படி கால்களில் செருப்பு அணிந்துகொள்வதும் வீட்டுக்கு வந்ததும் சுடுநீரில் கால்களைக் கழுவுவதும் இந்த நோயைத் தவிர்க்க உதவும். இதைவிட முக்கியம், குளத்துநீரில் குளிப்பதைத் தவிர்ப்பது.
தெருக்களில் மழைநீர் தேங்காமலிருக்க உள்ளூராட்சி அமைப்புகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஆனால் அப்படி எதுவும் இங்கு நடப்பதில்லை. அவை பணிசெய்யாது இருப்பதற்கான காரணங்களை வேண்டுமானால் உள்ளூராட்சி அமைப்புகள் போர்க்கால அடிப்படையில் அறிக்கையாக வெளியிடும்.
டெங்கு மற்றொரு முக்கிய நோய். அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், அதன் ஆபத்துக் குறையவில்லை. எனவே மழை நீர் தேங்கி நிற்கக்கூடிய சிறு சிறு இடங்களைக் கண்டு அவற்றை அழிப்பது ஒவ்வொருவரினதும் கடமை.
பொதுமக்களுக்கு வழங்கும் குடிநீரில் குளோரினைக் கலந்து சுத்தமான தண்ணீருக்கு உத்தரவாதம் தர வேண்டும். தெருக்களில் பிளீச்சிங் பவுடரைப் போட வேண்டியதும் நுளம்புமருந்து அடிக்க வேண்டியதும் இன்றைய அவசரத் தேவைகள். எல்லா ஊர்களிலும் மருத்துவ முகாம்களை நடத்தி, தடுப்பு மருந்துகளைக் கொடுத்து, மழைக் கால நோய்களைக் கட்டுப்படுத்துவது பல உயிர்களைக் காப்பாற்றும்!

*(கட்டுரையாளர் பொதுநல மருத்துவர்)*



# நெருப்பை விழுங்கியவள்! 11

தொடர்கதை

கண. மகேஸ்வரன்

"அம்மா,

இந்தத் திருமணத்தில் எனக்கு அடியோடு சம்மத மில்லை எண்டு ஒரே சொல்லாய் மாமாவுக்குச் சொல்லிவிடு... அடித்துச் சொல்லு, தயக்கம் வேண்டாம்" என்றாள், அனித்தா அழுத்தம் திருத்தமாக.

அம்மாவுக்கு வியப்பாயிருந்தது.

"அப்பிடியெண்டால், முறிந்த உறவு திரும்பவும் ஒட் டும்மா..." என்றாள் கண் கலங்க.

"ஒட்ட வேண்டாம். அதுதான் எங்களுக்கு நல்லது."

வாயடைத்துப் போனாள் அம்மா.

"நான் என்ன காரணம் சொல்லவடி, பிள்ளை?"

"அம்மா! சில விசயங்களுக்கு காரணமே அவசிய மில்லை. சொன்னால் விளங்கும். புரிந்தாலும் புரியாவிட் டாலும் உறவு முறியும், அவ்வளவுதானே! வேண்டாத ஓர் உறவு இருப்பதும் ஒன்றுதான், இல்லாதிருக்கிறதும் ஒன்றுதான்..."

"நேரை உன்ர மாமாவே வந்து உன்னை நேரடியாய்க் கேட்டால்...?"

"பதில் ஒன்றுதான்!"

ஒரு நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தி, தன் மன உளைச்சலை மகளுக்கு உணர்த்தியதோடு அம்மா விடைபெற்றாள்.

இரவு சுகமான தூக்கம் வந்தது.

அப்படியே கண்ணயர்ந்து போனாள்.

மறுநாள் ஸ்கூல் முடிந்து வரும்போது வழியில் இடை மறித்தான் கேசவன்.

"உன்னோடு நான் கொஞ்சம் தனியாய்க் கதைக்க வேணும்!"

"....ஓ, தாராளமாய். ஆனால் இதிலை வேண்டாம். வீட்டுக்கே வாருங்கோ!"

அனித்தா வழிகேட்டு விலகினாள்.

"தனியாக எண்டு சொன்னன்..."

தனியாக என்ற பதத்துக்கு அழுத்தம் கொடுத்தபடி ஏறிட்டான்.

"அம்மாவுக்கு இங்கிதம் தெரியும்!"

அவள் சட்டென்று விலகிப்போனாள்.

செய்வதறியாது மலைத்து நின்றான் கேசவன்.

கேசவன் வரும்பொழுது இரவு ஏழு மணியாகிவிட்டது.

அனித்தா முன்கூட்டியே தெரிவித்திருந்ததால், அம்மா அவனை வரவேற்றதோடு, ஹோலில் அப்பாவுடனேயே அமர்ந்து கொண்டாள்.

அவர்கள் பாதுகாப்பு அரண் போலிருப்பதால், துணிந்து [illegible] அறையிலேயே அவனை எதிர்கொண்டாள்.

"வாருங்கோ!" என்றாள் அனித்தா, புன்சிரிப்புடன்

"உள்ளே வந்தால் உனக்குப் பயமில்லையே?"

"ஏன் அப்படிக் கேட்கிறியள்?"

"இல்லை... என்னைப் பற்றி நீ நிறையவே அறிஞ் சிருப்பாயில்லையா?"

"...ம்..."

வாதப் பிரதிவாதங்களுடன் சந்திப்பு நீண்ட நேரம்வரை தொடர்ந்தது.

சுவர்மணிக்கூட்டைப் பார்ப்பதும், கணவரின் முகத்தைப் பார்ப்பதுமாக, என்ன ஏதென்றறியாத குழப்பத்துடன் செல்லம்மா துடித்துக் கொண்டிருந்தாள்.

கிழவரிடம் எந்தப் பிரதிபலிப்புமில்லை.

அவன் இறுதி அஸ்திரத்தையும் பிரயோகித்துப் பார்த்து, தோல்வியை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழி யில்லை என்ற முடிவுக்கு வரத் தயாராகவேயிருந்தான்.

"அனித்தா, உன்னால் என்ர வாழ்வு சிறக்குமெண்டு கனவு கண்டன்."

"நீ புரிஞ்சு கொள்ளமாட்டன் என்கிறியே..?"

"[illegible]ங்கள் என்னை மெய்யாகவே காதலிக்கிறீங் கள்தானே...?"

"பின்னைப் பொய்யாகவா...?"

"அப்பிடியானால் எனக்கொரு சத்தியம் தரவேணும்!"

"சத்தியம்தானே?"

"ஏன், அது செய்யச் சுகமானதோ?"

"............"

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் கேசவன்.

"ஏன் பதிலில்லை?"

"சத்தியத்தைக்கூடவா நீ நம்புகிறாய்?"

"நீங்க ஏன்... நிதானமாய்த்தானே இருக்கிறீங்க?"

"ஏன், குடிச்சிருக்கிறேனா?"

"குடிகாரன் சத்தியம்தான் நிலையாதென்று தெரியுமே. நீங்க குடிச்சிருந்தால் நான் சத்தியம் கேட்கமாட்டன். நிதானமாய் வரச்சொல்லி திருப்பி அனுப்பியிருப்பன்."

அவன் இமை வெட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளுக்குக் கூச்சமாய் இருந்தது. பொறுத்துக்கொண்டு கேட்டாள்.

"மெய்யான ஒரு காதலிக்கு ஒரு வாக்குறுதி கூடவா தரக் கூடாது?"

அவன் பலவீனத்தை தனக்கு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, அவனை அடக்குவதற்காக அப்படி ஒரு போடு போட்டாள்.

"இப்போதாவது நீ மெய்யாகவே என்னைக் காதலிக்கிறாய் என்பதை ஒப்புக்கொள்கிறாயா..?"

"உங்கள நான் சாதாரண காதலுக்குமப்பால் ஒரு தெய்வமாக வரிக்கலாமோ என்று பார்க்கிறன்...."

உதட்டில் புன்னகை நெளிய அவள் அவனைப் பார்த்த பார்வை புரியாமல் அவன் நெளிந்தான்.

"இலக்கியங்களிலும் சரி, நிஜவாழ்க்கையிலும் சரி, ஒரு பெண் கணவனைத்தானே தன் கண்கண்ட தெய்வமாய்..."

அவள் இடைமறித்தாள்

"நோ.... நான் அதை அங்கீகரிக்கமாட்டன். முதல் தெய்வம், தாய் தந்தை.... அடுத்தது ஆசான். அதற் கப்புறம்..."

"..... அதற்கப்புறம்?"

அவன் அவசரப்பட டான்.

".... ஒரு



உண்மைக் காதலிக்காக, கேவலம் ஒரு வாக்குறுதிகூட தரமுடியாத உங்களைத் தெய்வமாக்கி நான் என்ன வரமா கேட்க முடியும்? அப்படியே நான் கேட்டு, நீங்கள் கொடுத்து தசரதன் போலவா காப்பாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்க முடியும்?"

சரியான நேரம் பார்த்து, அவன் தலையில் குண்டொன் றைத் தூக்கிப்போட்டாள் அனித்தா.

அவனுக்கு அது ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. தன்மானத் துக்கே கிடைத்த ஒரு நெற்றியடிபோல் துணுக்குற்றான்.

"தசரதனைப்போல முட்டாள்தனமாக வரம் கொடுக்கக் கூடாது. கைகேயியைப்போல காலம் தாழ்த்திப் பெற்றுக் கொள்ளவும் எனக்குப் பொறுமையில்லை. கேள், தலையிலடித்துச் சத்தியம் செய்கிறேன்." அவன் எழுந்து நெருங்கினான்.

"கொஞ்சம் பொறுங்க. உணர்ச்சிவசப்பட்ட பேச்சுக்கள் சத்தியமாகாது. அவை கர்ப்பூரம்போல காற்றில் கரைஞ்சிடும்."

"அனித்தா, நீ இன்னும் என்னோடு விளையாடுறியா?"

"சத்தியமா இல்ல, சீரியசாகத்தான் கேட்கிறன்... என்னை நீங்கள் காதலிப்பது உண்மைதானே?"

"சத்தியமா.....! அதிலென்ன சந்தேகம்?"

"அப்பாடா!"

அவள் நீண்டதொரு மூச்சை உள்ளிழுத்து மிக நிதானமாக வெளிவிட்டாள்.

"அத்தான்.... காதல் இருக்கிறதே... தூர இருக்கிறவரைதான் அதற்கு மதிப்பு... நெருங்கினால் சிலருக்கு நெருங்கும்; சிலருக்கு வெறுக்கும்; சிலரை விட்டு விலகத் தொடங்கும். உங்களுக்கு என் மீது இருக்கிற காதலும் நம்பிக்கையும் எனக்கு உங்கள் மீது வரமாட்டேன் என்கிறதே. அதுக்கென்ன சொல்ல?"

"அனித்தா! இதைச் சொல்லத்தான் இவ்வளவு நேரம் என்னை மினைக்கடுத்தினியா?"

ஆத்திரம் பாதி, ஆற்றா மை பாதியாக அவன் அவளை ஏறிட்டான்.

"இல்ல..... உங்களை விட்டுத் தூர இருக்கிற என் மீது உங்களுக்கே இவ்வளவு காதலென் றால், உங்கள் இன்ப துன்பங்களில் நாலு வரு சமாய் பங்கெடுத்து, ஒரு குழந்தைக்காக ஏங்கித் தவிக்கிற உங்களைக் காதலித்த ரேகாவுக்கு எப்படியிருக்கும்?"

அவன் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தபடி அவள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பாளென்று எதிர்பாராத கேசவன் குழம்பிப் போனான்.

இவளுக்கு எப்படி இது தெரிய வந்தது?

"அ...அனித்...தா...நீ...." அவனுக்கு நா குழறியது.

திகைப்பிலிருந்து விடுபடமுடியாமல் திணறினான்.

"இப்ப கேட்கிறன் ..... உங்களுக்கு உண்மையில் என் உடல் மேல் காதலா? அதின் ஸ்பரிசத்தில் காதலா? முழுவதுமே என்னில் மட்டும்தானா? உள்ளத்தில் காதலா? ரேகாவை நீங்கள் காதலிக்கவே இல்லையா? அவள் மீது கேவலம், வெறுமனே..."

வார்த்தையை முடிக்காமல் அவளை ஏறிட்டாள்.

வெட்கித்துப் போனான் கேசவன். சூடு பறக்கும் அவள் வார்த்தைக்கு சூடாகவே பதிலிறுக்கக்கூட அவனால் முடியவில்லை.

"உங்களை நம்பி வந்த பெண்ணைக் கைவிட்டு என்னோட வாழ ஆசைப்படாதையுங்கோ. பிளீஸ்... ரேகாவைக் கண் கலங்காமல் பார்த்து அவளோடு கடைசிவரை வாழவேண்டும் என்பது என் ஆசை. என் மீதுநீங்கள் கொண்ட காதல் உண்மையென்றால், இப்பவே என் தலையிலடித்துச் சத்தியம் செய்யுங்கோ..."

அவன் நிலைகுலைந்து நின்றான்.

அதுவரை தான் செய்த கொடுமைகளை எல்லாம் எண்ணி மனம் வருந்தினாற்போலும் சில நொடிகள் அவதியில் உழன்றான். "என்னை நம்பு அனித்தா... நான் உன்னை உண்மையாகவே காதலித்தேன். அந்தக் காதலின் மேல் ஆணையாய் உறுதி தாறன். ரேகாதான் இனி எனக்கு எல்லாமே....!"

அவள் தலையில் தொட்டு சத்தியம் செய்தான்.

அனித்தாவுக்கு உடம்பு சிலிர்த்தது.

தாயின் வாஞ்சையோடு அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

அவன் பதிலுக்குத் காத்திராமல், கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்தாள்.

குட்நைற் சொல்லி விடைகொடுத்தாள்.

அவனும் பதிலுக்கு குட்நைற் சொன்னபடியே இயந்திரம்போல் இயங்கியவனாய் ஹோலுக்கு வந்து சொற்பவேளை தரித்து நின்றான்.

"மாமா, மாமி! நான் போயிட்டு வாறன்."

புன்னகையோடு விடைபெற்ற மருமகனைக் கண்ட பூரிப்பில் அவர்கள் மகளிடம் ஓடோடியும் வந்தபோது, அனித்தா கதவைச் சாத்தி தாழிட்டிருந்தாள்.

(நெருப்பு உமிழும்)



# கோபக்கார முனிவர்!

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு காட்டில் சுதீவர் என்ற முனிவர் கடுந்தவம் செய்து வந்தார். அந்தப் பக்கம் வந்த இரு காட்டுவாசிகளில் ஒருவன், திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த மற்றொருவன், தவத்திலிருந்த முனி வரை எழுப்பி உதவி கேட்டான். தனது தவம் கலைந்த கோபத்தால்; முனிவர் காட்டுவாசியை சாம்பலாகப் போகும்படி சபித்தார். அந்தக் கணமே அந்தக் காட்டுவாசி எரிந்து சாம்பலாக, மயக்கம் தெளிந்து எழுந்த மற்றொருவன் தனது சகாவின் நிலையைக் கண்டு கதறி அழுதான். இதற்குள் கோபம் தணிந்த முனிவரிடம், மற்றொரு ஆள் சாபத்தை நீக்குமாறு வேண்ட, "எனக்கு சாபம் கொடுக்கத் தெரியுமே தவிர, சாபத்திலிருந்து மீட்கத் தெரியாது. நான் எனது குரு சுசாந்தரிடம் அதைக் கற்று வருகிறேன். நீ அதுவரை உனது நண்பனின் சாம்பலை பத்திரமாகப் பாதுகாத்து வா!" என்று சொல்லிவிட்டு தனது குருவைத் தேடிச் சென்றார் சுதீவர். தனது குருவிடம் சென்று நடந்தவற்றை விளக்கிப் பரிகாரம் கேட்டார். அதற்கு குரு சுசாந்த முனிவர்; "மனிதனின் முதல் விரோதி அவனது கோபம் தான். நீ கொடுக்கும் சாபத்தினால் உனது தவவலிமை குறைந்து விடும். உனது தவவலிமை முழுவதையும் தியாகம் செய்தால் உனது சாபத்தைத் திரும்பப் பெறலாம்!" என்றார். சுதீவர் அதற்கு இணங்காமல் வேறு யோசனை சொல்லும்படிக் கேட்டார். "சுதீவா! விஷ்ணுபுரத்தில் மாதவன் என்ற புண்ணியாத்மா இருக்கிறான். அவன் இல்லறத்தில் இருப்பவன். அவனிடம் சென்று அவன் புண்ணியத்தில் ஒரு பகுதியைத் தானமாகப் பெற்றுக்கொள். அதைக் கொண்டு அந்தக் காட்டுவாசியை உயிர்ப்பிக்கலாம்!" என்றார். சுதீவர் அந்த மாதவனைத் தேடிச் சென்றார். செல்லும் வழியில் மிக அழகான ஒரு இளம் பெண் தென்பட்டாள். அவள் அழகிலே கிறங்கிப் போய் அவளையே உற்றுப் பார்க்க, அதனால் கோபமடைந்த அந்தப் பெண், "முனிவரான நீ என் போன்ற பெண்ணை இப்படி உற்றுப் பார்க்கலாமா? உனக்கு வெட்கமாக இல்லையா?"என்று கேட்டதும், சுதீவருக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. "அடி பெண்ணே! உனது அழகினால் தானே உனக்கு இவ்வளவு கர்வம்? நீ அழகற்ற அவலட்சணமான பெண்ணாக மாறுவாய்!" என்று சபிக்க அந்தப் பெண்ணும் அவ்வாறே மாறிவிட்டாள். பிறகு சுதீவர் விஷ்ணுபுரத்தை அடைந்தார். வழியில் ஒரு இளைஞனிடம் மாதவனது வீட்டுக்கு வழி கேட்டார். ஆனால் அவன், "மாதவனுடைய பெண் மிக அழகானவள். அதனால்தான் அவன் வீட்டுக்கு வழி கேட்கிறாயா? உன்னைப் போன்ற முனிவருக்கு இது தேவையா?" என்று திமிராகக் கேட்டான். அவனை ஊமையாக வேண்டும் என்று சுதீவர் சபித்துவிட்டு, ஒருவாறு மாதவனின் வீட்டைக் கண்டு பிடித்தார். சுதீவரை மாதவன் வரவேற்று அமரச் செய்தார். "எனது குருவான சுசாந்தர் தங்களை ஒரு புண்ணியவான் என்றார். நீங்கள் அப்படி என்ன தவம் செய்து, எனது குருவே புகழும்படி புண்ணியம் சம்பாதித்தீர்கள்?" என்று கேட்டார். "காலையில் எழுந்து எனது நித்திய கடன்களை முடித்து விட்டு, வீட்டு வேலைகளிலும் வெளி வேலைகளிலும் பங்கேற்கிறேன். எல்லாருக்கும் என்னாலான உதவிகளைச் செய்கிறேன். கோபம், பொறாமை, ஆசை இவற்றைவிட்டொழித்து மனதினாலும், வாக்கினாலும், உடலினாலும் பலருக்கும் நன்மை புரிகிறேன்!" என்றார் மாதவன். பூசை, புனஸ்காரம், தவம் இவை எதுவுமே செய்யாமல் இவனுக்கு எப்படி புண்ணியம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் சுதீவர், "நீங்கள் கடவுளை தியானம் செய்வது கிடையாதா?" என்றார். "கடவுள் என்னிலும் இருக்கிறார். மற்றவர்களிடமும் இருக்கிறார். சகல உயிர்களிலும் உறைகிறார். அவரைத் தனியாக பூசையோ, தியானமோ ஏன் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு உதவி செய்தாலே, அது கடவுளுக்காகச் செய்யப்படும் பூசை, தியானம், தவம் அனைத்தும் ஆகும்!" என்றார் மாதவன். சுதீவருக்கு மாதவன் தன்னை ஏளனம் செய்கிறார் எனத் தோன்றியது.

"நீர் நான் செய்யும் தவமெல்லாம் வீண் வேலை என்று பொருட்படக் கூறுகிறீரா?" என்று கோபத்துடன் சுதீவர் கேட்டார். "சுவாமி! நான் உங்களைப் பற்றியோ, உங்கள் தவத்தைப் பற்றியோ குறை கூறவில்லை. நான் என்னுடைய கருத்தைக் கூறுகிறேன்!" என்றார் மாதவன் பணிவுடன். கோபத்துடன் குதித்து எழுந்தார் சுதீவர். "உன்னைப் போன்ற நாஸ்திகனை மன்னிக்கவே கூடாது. இந்த நிமிடத்திலிருந்து நீ கண் பார்வை இழந்து நடக்க முடியாமல் படுக்கையில் வீழ்வாய்!" என்று சாபமிட்டார். ஆனால், மாதவனுக்கு ஒன்றுமே ஆகவில்லை. மீண்டும் மாதவன் பணிவுடன், "சுவாமி! சாந்தம் அடையுங்கள். உங்களைப் போன்ற மகான் கோபம் அடையும்படி நான் பேசியது தவறுதான்!" என்று மன்னிப்புக் கேட்டார். "மாதவா! எனது சாபம் உனக்குப் பலிக்கவில்லை. நீ என்ன மகாத்மாவா?''என்றார் சுதீவர். சுவாமி! அப்படியில்லை. காட்டுவாசி, அழகான இளம்பெண், வழியில் கண்ட இளைஞன் ஆகியோருக்கு சாபம் கொடுத்து தங்கள் தவவலியை நட்டமாகி விட்டது. நான் மட்டுமில்லை இனி நீங்கள் யாருக்கு சாபம் கொடுத்தாலும் அது பலிக்காது. போகட்டும் நீங்கள் என்னிடம் பெற வந்த புண்ணியத்தின் ஒரு பகுதியை உங்களுக்கு இப்போது நான் அளிக்கிறேன்.

"அந்தப் புண்ணியத்தினால் நீங்கள் சாபமிட்டவர்கள் எல்லாருக்கும் இந்தக் கணத்திலிருந்து சாபம் நீங்கிவிடும். உங்கள் தவவலிமையை இந்த வினாடியிலிருந்து நீங்கள் மீண்டும் பெற்று விட்டீர்கள். நீங்கள் விரும்பினால் இப்போது எனக்கு சாபம் கொடுக்கலாம். அது பலிக்கும்!" – என்றார். தனது செய்கைகளினால் அவமானம் அடைந்த சுதீவர் மாதவனுக்கு நன்றி கூறிவிட்டு மௌனமாக தனது குருவைத் தேடிச் சென்றார். வரும் வழியில், தான் சாபமிட்டவர்கள் மறுபடியும் தனது நிலைக்கு மாறி இருப்பதை அவர் கண்டார். தனது குரு சுசாந்தரிடம் நடந்தவற்றைக் கூறி அதற்கு விளக்கம் கேட்டார்.

"தவத்தினால் பல சக்திகளை அடையலாம். ஆனால், தனது கடமையைச் சிறப்பாக செய்பவனும், பிறருக்கு உதவிசெய்வதையே இலட்சியமாகக் கொண்டவனுமான ஒரு மனிதன் ஒரு தவயோகியை விட அதிகப் புண்ணியம் செய்தவன் ஆகிறான்!" என்றார். "குருவே! இப்போது மாதவன் தான் செய்த புண்ணியத்தைத் தானம் செய்து விட்டான். ஆகையால் அவனுடைய சக்தியும் குறைந்து விடும் அல்லவா?" என்று சுதீவர் சந்தேகம் கேட்டார். "மற்றவர்களுக்காகத் தனது புண்ணியத்தையே தானம் செய்தால் அதுவே பெரிய புண்ணியம். மாதவனின் சக்தி குறையவில்லை. முன்னைவிட இப்போது அதிகமாகி விட்டது!" என்றார் சுசாந்த முனிவர். "குருவே! முன்னைவிட எனது தவவலிமையை அதிகமாக்குவேன். நான் மீண்டும் காட்டுக்குத் தவம் புரியச் செல்கிறேன்!" என்று கூறி விடை பெற்றார் சுதீவர்.



## எங்கள் தாத்தா

தாத்தா தாத்தா வந்தாரு
தடியைக் கீழே வச்சாரு
கட்டி முத்தம் தந்தாரு
தலையைக் கோதி விட்டாரு
பரிசு ஒன்றைத் தந்தாரு
கண்ணே உனக்கு என்றாரு
புதுசா சட்டை தந்தாரு
போட்டுப் பார்த்து மகிழ்ந்தேனே!

## குடும்பம்

அம்மா என்னை அணைத்தால்
அன்பு முத்தம் கொடுப்பாள்
அப்பா என்னை அழைத்து
அங்கும் இங்கும் அலைவார்
அண்ணன் என்னைத் தூக்கி
அழுகை நிறுத்தச் சொல்வான்
அக்கா என்னைக் கொஞ்சி
அழகாய் சிரிப்பாள் அன்பாய்!






ச.அருணா,
அராலி சரஸ்வதி ம.வி.



சிவகுகன் பிருத்வி,
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்



செ.தீர்க்கஜன்,
தரம் 8 சி,
யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்.



ந.யோகப்பிரியா,
5சி,
யா/சென். பெனடிற் றோ.க.த.வித்தியாலய

# இந்த வாரம்

## 22.11.2015 முதல் 28.11.2015 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, செவ்வாய், ராகு, புதனால் அதிக நன்மை ஏற்படும். புதிய உத்தி மூலம் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். சுப விடயத்தில் எதிர்பார்ப்பு நிறைவேறும். வாகனப் பயணத்தின் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர், உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்று செயல்படுவர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல்பாட்டால் குளறுபடி உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் சிறப்பிடம் பெறுவர். சாஸ்தா வழிபாடு, சங்கடம் போக்கும்.

### இடபம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நற்பலன் உண்டாகும். எதிர்பார்த்த நன்மை கிடைக்க தாமதமாகலாம். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். புத்திரர்களின் பிடிவாதம் கண்டு கோபப்பட வாய்ப்புண்டு. பணம் விடயத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. மனைவி பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி தவிர்த்த பிற விடயத்தில் ஈடுபட வேண்டாம். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். பெண்கள், மாணவர்கள், படிப் பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.ஆஞ்சநேயர் வழிபாடு, நன்மை தரும்.

### மிதுனம்

சுக்கிரன், சனீஸ்வரர், சூரியன், புதன் அதிகளவு நன்மை தருவர். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகன வகையில் நன்மை ஏற்படும். நற்பெயரும், புகழும் உங்களைத் தேடி வரும். மனைவி அன்பைக் கண்டு மனம் மகிழ்வீர் கள். தொழில், வியாபாரத் தில் விற்பனை சிறந்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், தாராள பணச் செலவில் குடும்பத் தேவையை நிறைவேற்றுவர். மாணவர்கள், விரும்பிய பொருளை பெற்றோரிடம் கேட்டுவாங் குவர். சனீஸ்வரர் வழிபாடு, சந் தோஷம் அளிக்கும்.

### கடகம்

குரு, சுக்கிரன், ராகு, செவ்வாய் அனுகூல அமர்வில் உள்ளனர். செயல்களில் மனிதநேயமும், நேர்மையும் நிறைந்திருக்கும். உடன் பிறந்தவருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் அதிகரிக்கும். வருமான உயர் வால் கடன் அடைபடும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு நீங்கி வருமானம் உயரும். பணியாளர் களுக்கு அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி யில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள், அக் கறையுடன் படித்து, அதிக மதிப்பெண் பெறுவர். லட்சுமி நரசிம்மரை வழிபடுவது நல்லது.

### சிங்கம்

சுக்கிரன், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். புதிய முயற்சிகளில் உழைப்புக்கேற்ப பலன் கிடைக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கத் தாமதமாகலாம். சமூக நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் பங்கேற்பீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேறு வர். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். பணியாளர்களுக்கு புதிய வேலைவாய்ப்பும், உபரி வருமானமும் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் சாகச விளை யாட்டுகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும். விநாயகர் வழிபாடு வினை தீர்க்கும்.

### கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரனால் நன்மை மேலோங்கும். பேச்சு, செயலில் நிதானம் வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் தேவையறிந்து நிறை வேற்றுவீர்கள். வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. புத்திரர்களின் செயல்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். உடல்நலனில் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியா ளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு கொள்வர் மாணவர்கள் புதிய நண்பர்களிடம் விழிப்பாக இருக்கவும்.பெருமாள் வழிபாடு செல்வ வளம் தரும்.

### துலாம்

குரு, சுக்கிரன், கேது நன்மை தருவர். மனச்சோர்வை தவிர்ப்பதால் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற தாராள பண வசதி இருக்கும். பொது இடங்களில் எவரிடமும் நிதானித்துப் பேசவும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். உடல்நிலை நன்றாக இருக்கும். பயணங்களைக் கூடுமானவரை தவிர்க்கவும். மனைவி வழி உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். சாஸ்தா வழிபாடு, இடர் நீக்கும்.

### விருச்சிகம்

ராகு, செவ்வாய், சுக்கிரனால் நன்மை உண்டாகும். சுக்கிர மங்கள யோகம் அதிர்ஷ்டகரமாக செல்வ வளம் தரும். தாமதித்த பணிகளை ஆள்பலம், பணபலத்துடன் நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பகைவர் உங்களின் வளர்ச்சி கண்டு வியப்பில் மூழ்குவர். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டு. தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி யால் ஆதாயம் அடைவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் சிறந்த தேர்ச்சி கிடைக்கும். சனீஸ்வரர் வழிபாடு, வெற்றியளிக்கும்.

### தனுசு

குரு, சந்திரனால் நன்மை கிடைக்கும். நிதானமுடன் செயல்பட்டால் சிரமம் வராமல் தவிர்க்கலாம். குடும்பத்துக்கான செலவு அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் நம்பகக் குறைவானவருக்கு இடம் தர வேண்டாம். புத்திரரின் பிடிவாத செயல்களைக் கண்டிக்க நேரிடும். பணம் கொடுக்கல், வாங்கலில் விழிப்புடன் இருக்கவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் விவாதம் பேச வேண்டாம். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்பது கூடாது. மாணவர்கள் நன்றாகப் படித்து, பாராட்டுப் பெறுவர். முருகன் வழிபாடு நலம் சேர்க்கும்.

### மகரம்

பெரும்பாலான கிரகங்கள் சாதகமாக உள்ளன. கருணை மனதில் நிறைந்திருக்கும். நண்பர், உறவினர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந் திருக்கும். வாகனப் பயணம் இனிய அனுபவம் தரும். மணைவிஉங்கள் எண்ணத்துக்கு ஏற்ப நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து வருமாணம் உயரும். பணியாளர்கள், புதிய தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்கள், குடும்ப நலனை கருத்தில் கொண்டு செயற்படுவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேறுவர். அம்பிகை வழிபாடு மகிழ்ச்சி தரும்.

### கும்பம்

குரு, சுக்கிரன், சூரியன், புதனால் நன்மை உண்டாகும். உடல் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பேச்சில் ஆன்மிக சிந்தனை மிகுந்திருக்கும். உறவினர்களுடன் சந்திப்பால் சந்தோம் காண்பீர்கள். புத்திரர் அறிவார்ந்த செயலால் பெருமை தேடித் தருவர். கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பணியாளர், எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்ப உறுப்பினர் களின் அன்புக்குரியவராவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு சுபயோகம் தரும்.

### மீனம்

சந்திரனால் நன்மை உண்டாகும். அன்புக்கு உரியவரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் நிதானத்தை பின்பற்றவும். சத்தான உணவும், சீரான ஓய்வும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. மனைவியின் குறையைப் பெரிதுபடுத்தி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்த வேண் டாம். பணியாளர்கள் பணிச் சுமையால் அவதிப்பட நேரிடும். பெண்கள் வீட்டுப் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்தவும். மாணவர்கள் நண்பர் கள் மூலம் உதவி பெற வாய்ப்புண்டு. துர்க்கை வழிபாட்டால் தைரியம் கூடும்.

# முகத்துக்கு அழகூட்டும் பேஸ் பேக்

முகம் அழகானால், மேனி முழுவதும் அழகானது போல் ஒரு தோற்றம் உருவாகிவிடும். முகத்துக்கு அழகூட்டும் சில பேஸ் பேக் பற்றிப் பார்க்கலாம்.

**முக அலங்காரம்:**
ஆடையகற்றிய பால், சிறிய துண்டு பப்பாளிப்பழம், ஓட்ஸை மாவாக்கிய ஓட்ஸ் பௌடர் ஆகிய மூன்றையும் குழைத்து முகத்தில் பூசி ஒரு மணிநேரம் கழித்துப் பார்க்க இந்தக் கலவை முகத்தில் படிந்து ஒரு இறுக்கத்தைக் கொடுக்கும் அதன் பின்னால், முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். ஒரு தேக் கரண்டி தயிருடன் அரை தேக்கரண்டி எலுமிச்சை சாறும் கலந்து முகத்தில் பூசி அது காய்ந்ததும் கழுவி விடலாம். உளுந்தை நன்றாக அரைத்து அத்துடன் சம அளவு பால் மற்றும் தேன் கலந்து பசை போலாக்கி முகத்தில் தடவுவதும், சிறந்த பேஸ்பேக் முறையே.

**கண்ணைச் சுற்றியுள்ள கருவளையம் நீங்க:**
குளிர்ந்த பாலில் பஞ்சை நனைத்து கண்ணிமைக்கு மேலாக வைத்து அரை மணி நேரம் ஓய்வெடுக்கவும். பின்பு தேங்காய்ப் பாலினைத் தொட்டு உங்கள் மோதிர விரலால், கண்ணைச் சுற்றி மசாஜ் செய்யவும்.

**முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்க:**
எட்டு பாதாம் பருப்புகளை வெதுவெதுப்பான நீரில், இரவு ஊற வைத்து, மறுநாள் காலை அதை அரைத்து, ஒரு தேக்கரண்டி பாலுடன் கலந்து முகத்தில் பூசினால், கரும்புள்ளிகள் மறையும். மிகவும் வறண்ட சருமம் உடையவர்களுக்கு பாதாம் மாஸ்க் நல்லது.




# அவல், முந்திரி பர்பி

**தேவையான பொருள்கள்:**

கெட்டி அவல்- ஒரு கப்
சர்க்கரை- ஒன்றரை கப்
முந்திரிப்பருப்பு-தேவையான அளவு
ஏலக்காய்-1
நெய்- கால் கப்

**செய்முறை:**
வெறும் சட்டியில் அவலைச் சிவக்க வறுத்து ஆறியதும் கரகரப்பாகப் பொடித்துக் கொள்ளவும். அடுத்து அதே சட்டியில் சிறிது நெய் விட்டு முந்திரியை சிவக்க வறுத்துக்கொள்ளவும். இவை ஆறியதும் முதலில் மிக்ஸியில் அவலைப் போட்டு கரகரப்பாகப் பொடித்துக் கொள்ளவும். அடுத்து அதனுடன் முந்திரி,ஏலக்காய் சேர்த்து மீண்டும் வைத்து ஒரு சுற்றுச் சுற்றி எடுக்கவும். இப்போது சர்க்கரை எடுத்துக்கொண்டு அதில் ஒன்றரை கப் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து சூடுபடுத்தவும். சர்க்கரை கரைந்து இளம் கம்பிப்பதம் வரும் போது அவல் கலவையைக் கொட்டி ஒரு தோசைத் திருப்பியால் விடாமல் கிளறவும். அவல் சீக்கிரமே வெந்து விடும். கிளறும் போதே நெய்யையும் விட்டுக் கிளறவும். சிறிது நேரத்தில் கலவை சட்டியில் ஒட்டாமல் வரும். அப்போது ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி சமப்படுத்தி லேசாக ஆறியதும் கத்தியால் கீறித் துண்டுகள் போடவும்.

# உங்கள் புருவங்களை அழகாக்க...



புருவங்கள் பொலிஷ் செய்யப்பட்டது போல் தோற்றம் அளிக்க வேண்டுமெனில் பின்வரும் குறிப்புக்களைப் பின்பற்றவும்.....
புருவங்கள் அதிகமாக கருமையாக்குவதைத் தவிருங்கள். கான்ட்ராஸ்ட் கண் மேக்கப்புக்கு சரிப்பட்டு வராது. லைட் பிரவுண் நிறத்தைப் பயன்படுத்தி புருவத்தின் நீளத்தை அதிகரிக்கலாம்.எப்போதும் மெல்லிய புருவங்களை விட, அடர்த்தியான புருவங்கள்தான் அழகாக இருக்கும். எனவே புருவங்களை சரி செய்யும் போது அடர்த்தியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.புருவங்களை வாருவதற்கு என்று பிரஷ்களைப் பயன்படுத்தலாம். புதிதாக வாங்கி அதற்கென வைத்துக் கொள்ளுங்கள். புருவங்களை மிகவும் கருப்பாக மாற்ற வேண்டாம்.
உடல் உஷ்ணம் ஏற்பட்டால் நல்லெண்ணையை எடுத்து புருவங்களின் மீது தடவி விடுங்கள். இதனால் கண்களுக்குக் குளிர்ச்சி கிட்டும்.

# பள பளக்கும் பப்பாளி!

முகம் பள பளக்க பழுத்த பப்பாளி விழுது, நான்கு கரண்டி தேன், சிறிது கிளிசரின் சேர்த்து, கண்ணைச் சுற்றிய பகுதி தவிர மீதி இடங்களுக்கு பாக் மாதிரி போட்டு பதினைந்து நிமிடம் ஊறிய பின்னர் கழுவிப் பாருங்கள். முகம் தங்கம் போல ஜொலிக்கும் உடம்புத் தோல் பள பள்க்கவும் பப்பாளிப்பழம் நல்லது. ஒரு கப் பப்பாளித் துண்டுகளுடன் சிறிது எலுமிச்சைச் சாறு, சிறிது சீனி (தேவையானால்) சேர்த்து காலை உணவாகச் சாப்பிட்டுப் பாருங்கள். முப்பதே நாளில் தோலில் மாற்றம் தெரியும். மலச்சிக்கல் தீரும். புத்துணர்ச்சி தரும் குருதி சுத்தியாகும். பப்பாளிக் காயின் பால், பாதப் பித்த வெடிப்புக்கு நல்லது. உடல் நிறை குறையப் பப்பாளிக்காயைக் கூட்டாகச் செய்து சாப்பிடலாம். பழங்களினால் சாலட் செய்யும் போதும், ஜாம் செய்யும் போதும் பப்பாளிப் பழத்தை நிறையச் சேர்க்கலாம். இந்தப் பழம் போலவே அத்திப் பழமும் உடல் அழகுக்கு உதவும். இதயம் வலுப்பெறும்.




# இரண்டே நாள்களில் கருமை நீங்க

**பேக்கிங் சோடா பேஸ்ட்**
பேக்கிங் சோடாவை நீர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் ஊற வைத்ததைக் கழுவ வேண்டும். இப்படி வெளியே சென்று வீட்டுக்கு வந்ததும் செய்து வந்தால், முகத்தில் நல்ல மாற்றம் தெரியும்.

**வாழைப்பழம் மற்றும் பால்**
வாழைப்பழத்தை மசித்து, அதில் பால் சேர்த்து கலந்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி தினமும் 2 முறை செய்து வந்தால், இரண்டே நாள்களில் முகத்தின் பொலிவு கூடியிருப்பதை நன்கு காணலாம்.

**ரோஸ் வாட்டர்**
ரோஸ் வாட்டரில் சிறிது பால் சேர்த்துக் கலந்து, தினமும் இரவில் படுக்கும் முன் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படிச் செய்து வந்தால், முகத்தில் உள்ள கருமை நீங்கி, முகம் வெள்ளையாக பளிச்சென்று காணப்படும்.

# வலைப்பக்கம்



**Reshzan Thayaparan** @Reshzankan · Nov 15
யாரிடமும் எம்மைப் புரிய வைக்க முயலக் கூடாது.

**Sudharshan** @_SSudha · 3h
வேப்பமரக் காற்றில் உறங்குபவர்களுக்குத்தான் மதியநேரச் சிறுதூக்கத்தின் அருமை தெரியும்.

**மௌவல்** @mullai10 · Nov 13
உரையாடல்களில் வார்த்தைகளுக்கு கடிவாளம் இட்டுக்கொள்வதும், மிகப்பிடித்த விடயங்களுக்கு எல்லைகள் வகுத்துக் கொள்வதும் அவசியம்.

**♥St.Vishnu ♥விஷ்ணு** @Vishnu06Jaffna · 11h
இருபது வருடமாக பார்த்து வளர்த்த பெற்றோரை ஏமாற்றி செய்வதற்கு பெயர் காதலென்றால்

அந்த காதலில் காதலனோ காதலியோ ஏமாற்றுவது எப்படி துரோகமாகும்

**கரிகாலன்** @DiNationS_ · Nov 15
ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு நியாயம்.. அநியாயம் அடுத்தவர் பார்வையில்!

**Gobinath** @Gobinath_SP · Nov 16
சாடையாய் மழைத்துளிகள் யன்னல் ஆடிகளை தட்டித் தாளமிட, நீண்ட நாட்களின் பின்னர் நூலோடு ஓர் இரவு... — reading A Game of Thrones

**Shammas Ghouse** @ShammasGhouse · 20h
எதுவும் தேவை என்று சொல்லவில்லை.

ஏதாவது இருந்தால் நல்லா இருக்கும் என்று சொல்கிறேன்.

**Naveen Kumar** @navi_n · Nov 15
ஸ்ருதிஹாசனுக்கு நல்ல டப்பிங் கலைஞர் கிடைத்தால் சகித்துக்கொள்ள முடியும். இல்லையெனில் கலைஞரே டப்பிங் கொடுத்தால் கூட பரவாயில்லை.

**Venice (Italy)**




**Velachery (Tamil Nadu)**





இது எல்லாம் பெரிய மழையா.... எங்களுக்கு சீரியல் தான் முக்கியம்



திருடன்: திருடுவியா..திருடுவியான்னு போலீஸ் அடி பின்னிட்டாங்கபா.
நண்பன்: அப்புறம்
திருடன்: திருடுறேன்னு உறுதியா சொன்னப்புறம்தான் விட்டாங்க

இந்த தந்தையின் ஐடியா சூப்பரா இருந்தால் லைக் பன்னுங்க.






ஒரு பெரிய ஹாலில் செமினார் நடந்து கொண்டிருந்தது. அப்போது பேச்சாளர் எல்லார் கையிலும் ஒரு பலூனை கொடுத்து தங்கள் பெயரை எழுத சொன்னார்.

எல்லோரும் தங்கள் பெயரை பலூனில் எழுதி முடித்தவுடன், அதை இன்னொரு அறையில் நிரப்ப சொன்னார். இப்பொழுது அந்த பேச்சாளர், உங்கள் பெயர் எழுதிய பலூனை அந்த அறைக்குள் இருந்து எடுத்து வாருங்கள் என்று அறிவித்தார்.

உடனடியாக அனைவரும் விழுந்து அடித்து அந்த அறைக்குள் ஓடிச் சென்று ஒவ்வொரு பலூனாக எடுத்து தேடினர் . ஒருவருக்கொருவர் நெருக்கி தள்ளிக் கொண்டு கீழே விழுந்து தங்கள் பெயருக்குரிய பலூன் கிடைக்கிறதா என்று பரபரப்பாக தேடினர். 5 நிமிடம் கடந்த போதிலும் ஒருவராலும் தங்களுக்குரிய பலூனை தேடி கண்டு பிடிக்க முடியவில்லை.

இப்பொழுது அந்த பேச்சாளர் சொன்னார், "ஒவ்வொருவரும் ஒரு பலூன் மட்டும் எடுங்கள், அந்த பலூனில் யார் பெயர் இருக்கிறதோ அதை அந்த பெயர் உடைய நபரிடம் கொடுங்கள்" என்றார்.

அடுத்த ஒரே நிமிடத்தில் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூன் எல்லோருக்கும் கிடைத்து விட்டது.



நான் இப்ப இலங்கைல இருக்கேன், இங்கு உயிர் பிழைத்து வாழ்றது ரொம்ப கஷ்டமான ஒன்னு.....

இப்பொழுது அந்த பேச்சாளர் சொன்னார், "இது தா[illegible] வாழ்க்கை. எல்லோரும் மகிழ்ச்சியை தேடுகிறோம். ஆ[illegible] அது எங்கே எப்படி, எதில் கிடைக்கும் என்று நினை[illegible] இல்லை".

"நம்ம சந்தோசம் அடுத்தவர்களுக்கு உதவுவதில் தா[illegible] இருக்கிறது. அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுங்க[illegible] உங்கள் மகிழ்ச்சி உங்களை தேடி வரும்".

இந்த நாள் அனைவருக்கும் சந்தோசமாய் மலரட்டும்...



சிறுகதை

# வலி

அல்வாய் வடக்கூர்
தங்கநிலா



பிறந்த ஊருக்குப் போகும் ஆசையில் மனம் ஊஞ்சல் ஆடுகிறது. மழை முகில்களைக் கிழித்தது காலைச் சூரியனின் பார்வை. வெயில் சற்று உக்கி ரம ாக எரித்தது. வியர்வைத் துளிகள் ஊற் றெடுத்து உடலெங்கும் வழிந்தன. நெஞ்சப் படபடப்பும் சற்று அதி கரித்தது.

ஸ்வெற்றரைக் கழற்ற மனமில்லாத அந்த பனிக் காலைவேளை கிணற்றடியில் பல்துலக்கி வாய்கொப்பளித்தேன். முன்பு என்றால் சூடாக ஒரு கப் ரீயைக் குடித்துவிட்டு, ஸ்வெற்றரைக் கழற்றி மேல் கழுவமுடியும். ஆனால் இப்போ ரீ குடிப்பது முடியாத ஒன்றாகி விட்டது.

மருத்துவ பரிசோதனையில் எனக்கு அந்த வருத்தம் இருப்பதாக உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. அதனால் ரீ குடிப்பதை முற்றாக நிறுத்திவிட்டேன். இனியென்ன முதுமையை எட்ட எட்ட எல்லா வருத்தங்களையும் டாக்குத்தர்மார் சொல்லத்தானே செய்வினம். என்றாலும் எனது இயலாமையை நானே உணரத் தொடங்கிவிட்டேன்.

கிணற்றடிக்கு வருவதற்குள் இரண்டு வாய்க் கால்களைக் கடக்க வேண்டும். ஒன்று பூங்கன்றுகளுக்கு நீர்போகும் வாய்க்கால்; மற்றையது மிளகாய்க் கன்றுகளுக்கு நீர் போகும் வாய்க்கால். முந்தியெல்லாம் சாதாரணமாக எட்டிக் கடந்து போன வாய்க் கால்கள்தான். ஆனால் இப்ப அதக் கடக் கிறத நினைச்சாலே ஏதோ ஏழு கடல் தாண் டிறது மாதிரி இருக்கிறது. அதுவும் மழை பெய்து ஈரம் பொசிகின்றபோது, தற்செயலாக குதிக்கால் சறுக்கிவிட்டால் அதுவேறு தொல்லையாகிவிடும்.

"அப்பா ரெலிபோன்..." மகன் ரமணன் அழைத்தான். கழுவி முடிந்தால் வாங்கோ இல்லாவிட்டால் நான் கொண்டு வருகிறேன் என்பதுவாய் அவனது கையசைப்பும் சைகையும் இருந்தன. என்னவோ, ஏதோ என்று மனதுக்குள் வினாக்கள் எழும்ப, கொண்டு வா என கையைக் காட்டினேன். தொலைபேசியின் கிணுகிணுப்பு அடங்குவதற்குள் எனது கையில் அது அடங் கியது.

"சீதா அம்மா செத்துப் போனா. பின்னேரம் 4 மணிக்கு எடுக்குறதாம். கெதியா வெளிக்கிட்டு வாங்கோ." நான் பிறந்த ஊரிலிருந்து தம்பி சுந்தரம் அறிவித்தான். அவசரமாகப் போகவேண்டும். என்ன செய்வது, மழை வரும் போல கிடக்கு மகனோட மோட்டார் சைக்கிள்ள போகலாம் எண்டால், மழையுக்க நனைஞ்சா அதுவேற வருத்தம். பஸ்ஸில போவம். அவசர அவசரமாகச் சாப்பிட்டு மருந்துக் குளிசைகளை விழுங்கி, "இந்தாங்கோ பாக், உடுப்புக்கள் மருந்துகள் எல்லாம் வச்சுக்கிடக்கு, கவனம், போகவேண்டாம் எண்டு சொன்னாலும் கேக்க மாட்டியள், செத்தவ கிழவிதானே, அங்க உங்கட தம்பி, தங் கச்சி பிள்ளையள் எல்லாம் போவினம் தானே, ஏலாத நேரம் போக வேணுமா....." என்ற மனுசியின் நச்சரிப்புக்களைத் தாண்டிக்கொண்டு புறப்பட்டாயிற்று.

கண்டிப்பும், தான் என்னோடு படும் சிரமத்தின் பிரதிபலிப்பும் விளங்கக் கூடியது மான மனைவியின் புறுபுறுப்பு அது. காதில் வாங்கியதும் வாங்காததுமாக பாக்கை வாங்கியவாறு பஸ் ஏறும் பிரதான வீதிக்கு வருகிறேன். பிறந்த ஊருக்குப் போகும் ஆசையில் மனம் ஊஞ்சல் ஆடுகிறது. மழை முகில்களைக் கிழித்தது காலைச் சூரியனின் பார்வை. வெயில் சற்று உக்கிரமாக எரித்தது. வியர்வைத் துளிகள் ஊற்றெடுத்து உடலெங்கும் வழிந்தன. நெஞ்சப் படபடப்பும் சற்று அதிகரித்தது.

இன்னும் பஸ்ஸைக் காணவில்லை. குடை பரப்பிய ஆல மர நிழல் இதமாக இருந்தது. பிள்ளையாரே! இருப்பதற்கு சீற் ஒன்று கிடைத்துவிட வேண்டும், இவ்வளவு தூரம் நின்று போகேலாது. ஓரமாக அமர்ந்திருந்த பிள்ளையாருக்கும் ஒரு கும்பிடு போட்டுக் கொண்டேன்.

பஸ் ஒன்று வருகுது. கிழக்குத் திசை சூரியன் கண்களைக் கூசச் செய்யுது. பஸ் எங்க போகுதோ பெயர்ப் பலகையை விட இருக்கை உள்ளதா என்பது தானே முக்கியம்.

ஏறும் வாசல் முழுவதுமாக பயணிகள். வேண்டாம் அடுத்த பஸ்ஸில போவம். தலை குனிந்தபடி கரை ஒதுங்கினேன். பத்து நிமிடங்கள் கழித்து இன்னுமொரு பஸ்.

"ஐயா, ஏறுங்கோ சீற் தரலாம்." நடத்துநர் கூவியழைக்கிறார் என்னை. ஆனாலும் ஏறும் வாசல் முழுவதும் பயணிகள். இறங்கும் முன்பக்கப் பாதையால் இரண்டு பேர் இறங்குகின்றனர். நான் ஏறவில்லை. பஸ் முக்கி முனகியபடி புறப் படுகிறது. ம்...... ஒன்பது மணியாகிறது. என்ன செய்வது. என்ன மாதிரி ஓடி ஆடித் திரிஞ்ச நான் இப்ப பஸ்ஸில நிண்டு போக ஏலாத அளவுக்கு ஆகிப் போச்சு.

கோண் ஒலி எழுப்பியவாறு பஸ் ஒன்று வருகிறது. கடவுளே, பிள்ளையாரே சீற் ஒன்று கிடைச்சிட வேண்டும். மீண்டும் பிள்ளையாருக்கு ஒரு கும்பிடு. பஸ் அருகே வந்து நிற்கிறது. நடத்துநர் இறங்கி வழிவிடுகிறார். ஏறுவதற்கு வசதியாக அமைக்கப்பட்ட கைப்பிடியைப் பிடித்து ஏறுகிறேன். கையிலிருந்த பாக்கை வாங்கி நான் சுலபமாக ஏறுவதற்கு வழி செய்கிறார் நடத்துநர். இருக்கைகளின் மேற்கம்பியைப் பிடித்து...... நடந்து....... இறங்குவதற்கு வசதியாக இருக்கை ஒன்றைத் தேர்வு செய்து அமர்ந்துகொள்கிறேன்.

நடத்துநர் வந்து ரிக்கெட்டைத் தந்து 140 ரூபாவைப் பெற்றுக் கொள்கிறார். பஸ்ஸில் பாடல்கள் மாறி மாறி ஒலிக்கின்றன. பாடல்களில் என் மனம் லயிக்கவில்லை. எல்லாமே புதிய பாடல்கள். இளைஞர் யுவதிகளைக் கவர்வதற்காக அந்தப் பாடல்கள் இசைக்க விடப்பட்டன. எங்களுக்கான அந்தக் காலப்பாடல்களை யார் இசைக்க விடுவார்கள்? சாரதியின் பார்க்கும் கண்ணாடியைப் பார்க்கிறேன். சாரதி ஓர் இளை ஞன். அவருக்கும் இந்தப் பாடல்கள்தானே பிடிக்கும். கால்கள் மெல்ல மெல்ல வலியயடுத்தன. அடுத்தடுத்த தரிப்புக்களில் பயணிகளை ஏற்றி ஏற்றி, முன்னுக்குப் போங்கோ, முன்னுக்குப் போங்கோ கத்தல் பாடல் ஒலியை மீறிக் கேட்கிறது. இப்போ பஸ் பயணிகளால் நிரம்பி வழிகிறது. கைக்குழந்தை ஒன்று அழும் ஒலி. என்னருகில் இளந்தாய் ஒருவர் தோளில் குழந்தையுடன், மற்றத் தோளில் குடை மற்றும் சாமான்கள் அடங்கிய பை ஒன்றைச் சுமந்தபடி நிற்கிறார். முன்னுக்குப் போங்கோ, முன்னுக்குப் போங்கோ நடத்துநரின் ஒலி பலமாகவே கேட்கிறது. பஸ் இரைச்சலோடு பயணிக் கிறது.

எனக்கோ சங்கடமாகிவிட்டது. அந்த இளம் தாய் நின்றபடி பயணிக்கிறார். அதைப் பார்த்தும், பார்க்காதது போல் இருக்க முடியவில்லை. என்ன செய்வது கால் வலியோ தாங்க முடியவில்லை. குழந்தை வேறு அழுகிறது. அதற்குக் காய்ச்சலாய் இருக்கும் போல. குழந்தையும், தாயும் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறார்கள் போல, யன்னல் ஊடே பார்க்கிறேன். இன்னும் இரண்டு மூன்று ஊர் கள் கடக்க ஆஸ்பத்திரி வந்துவிடும் இந்த இளம் தாய்க்கு எனது இருக்கையைக் கொடுத் துவிட்டு, ஆஸ்பத்திரியில் அவர்கள் இறங்கிய பின் இருக்கலாம். ம்...... அதுதான் சரி.......

"பிள்ளை இதில இரம்மா......"

நான் எழும்பி, இருக்கையின் முன்பக்கமாக நடைபாதையில் விலத்த, அந்தத் தாயும் பிள்ளையும் அமர்ந்து கொள்கிறார்கள். பஸ் பேரிரைச்சலோடு போய்க் கொண்டு இருக்கிறது.

"முன்னுக்குப் போங்கோ, முன் னுக்குப் போங்கோ, ஆரும் ரிக்கெட் எடுக்காத ஆக்கள் ரிக்கெட் எடுத்திட்டுப் போங்கோ." நான் இப்போ அந்த இளம் தாய் இருக்கும் எனது இருக்கையில் இருந்து இரண்டு ஆள்கள் முந்தி நிற்கிறேன். முன்னுக் குப் போங்கோ கத்தல் என்னை இங்கே கொண்டு வந்துவிட்டிருந்தது. மருத்துவமனை வருவதற்குள் இன்னும் ஐந்து ஆள்கள் தூரம் கடந்து வந்துவிடுவேனோ ...... நெற்றியைச் சொறிந்து கொண் டேன்.

"ஆஸ்பத்திரி இறக்கம்..."

பின்பக்கம் திரும்பிப் பார்க்கிறேன். அந்த இளம் தாய் குழந்தையைத் தூக்கியபடி ஒவ்வொருவராக விலத்தி விலத்தி சிரமப்பட்டு முன்னே வந்து இறங்கிவிட்டார். அந்த இளம் தாய் இருந்த எனது இருக்கை யைப் பார்க்கிறேன். கிணற்றுக்குள் நீருள்ள அவ்விடம் உடனே நிரம்புவது போல சனத்திரளில் ஒருவர் அமர்ந்து கொண்டார். திருவிழாவில் தாயைத் தவற விட்ட குழந்தையாக அந்த இருக்கையைத் தவறவிட்ட என் நிலை. விழுந்துவிடாமல் நிற்பதற்காக நான் பிடித்திருந்த வலது கை வலி எடுத்தது. கால்கள் உளைவு எடுத்தன. அந்த இருக்கைக்கு நான் எப்படி உரிமை கோருவது. நான்தான் அந்த இளம் தாய்க்கும் குழந்தைக்கும் அந்த இருக்கையைக் கொடுத்தேன் என்று வாதிட முடியுமா.....!

"முன்னுக்குப் போங்கோ, முன்னுக்குப் போங்கோ" பஸ் தரிப்பிடம் ஒன்றில் நிக்க வெளியே வந்த நடத்துநர் யன்னல்கள் வழியே பார்த்துப் பார்த்துப் ஒவ்வொருத்தரையும் முன்னோக்கி நகர்த்திக்கொண்டு....

பஸ் பேரிரைச்சலோடு வேகமாகப் போகிறது. நான் இப்போது நிற்கும் பயணிகளில் முன்னுக்கு இருந்து இரண்டாவதாக நிற்கிறேன். பாடி முடிந்த இசைத் தட்டை மாற்றி வேறொரு இசைத் தட்டைக் கொழுவி விடுகிறார் சாரதி. பழைய பாடல்கள் ஒலிக் கின்றன. ஆனாலும் அவற்றைச் சுவைக்கும் நிலையில் நான் இல்லை. கால்வலி அதிகமாகி, கூடவே மனதின் வலியும் அதிகமாகி இருந்தது. கடல்வெளி, வயல்வெளி, தென்னந் தோப்புக்கள், குடியிருப்புக்கள் எனக் கடந்து பஸ் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ம்.... நான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது.

"தம்பி அடுத்த கோல்ட் இறக்கம்."

பஸ் அடுத்த தரிப்பில் நிற்க இறங்குகிறேன். "ஐயா மெதுவாக இறங்குங்கோ..." இறங்குகிறேன். செருப்புகள் காலில் இருப்பதே தெரியவில்லை. "இந்த ஐயா கனநேரமா நிண்டபடியே வந்தவர்." யாரோ சொல்வது என் காதுகளில் கேட்டது. சீதா அம்மாவின் இறப்பு எப்படி நிகழ்ந்திருக்கும்? மனது அங்கலாய்க்கிறது.

# பெண் விடயத்தில் மாற்றமடையாத சமூகம்



இணையவள்

இன்று பெண்கள் என்னதான் கல்வித் தரத்தில் உயர்ந்த நிலையை அடைந்த போதிலும், பெரும் பதவிகள் வகித்த போதிலும் பெண் என்பவள் அடக்கப்பட்டவளாகவும், அடிமையாகவும் நடத்தப்பட்டு வருகின்றாள். வீடுகளிலும், பொது இடங்களிலும் பெரியவர்களும் சரி, இளையவர்களும் சரி பெண்கள் முதன்மை வகித்து வழிநடத்தி எதனையாவது செய்தால் அதில் குறை கண்டு கொள்வர். சமூகத்தில் பெண்களும் ஆண்களுக்குக் குறைந்தவர்கள் அல்ல. 'பெட்டைக் கோழி கூவி விடிஞ்ச மாதிரித் தான்' என அவர்களைக் கிண்டல் செய்வதும், குறை காண்பதும் ஆண்களுக்கு கை வந்த கலையாகவே இருக்கும். பெண்கள் என்றாலும் பொறுப்புடன் செய்து கொள்கிறாளே என்று மெச்சியோ அல்லது பாராட்டியோ ஒரு வார்த்தை கூடக் கூற மாட்டார்கள். தாம் தான் எல்லாம் தெரிந்தவர்கள் என்றும் தமக்கு மட்டுமே முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் ஆண்கள் எதிர்பார்க்கும் நிலை மாற வேண்டும். இன்று தொழில்நுட்பம் வளர்ச்சி கண்ட போதிலும் பெண்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையறை மாற்றப்படவில்லை. ஆண்கள் என்ன செய்தாலும் அவன் ஆண்பிள்ளை என்றும் அதேவேளை பெண்கள் செய் யும் சிறு தவறுகளை சுட்டிக் காட்டியும் கடும் சொற்களால் பழித்தும் நிற்பது எந்த விதத்தில் நியாயம்? ஆண்களும் பெண்களும் சமமானவர்கள், அவர்களுக்கும் சம உரிமை உண்டு என்றெல்லாம் மேடைகளில் முழங்குகிறார்கள். ஆனால் நடை முறை வாழ்க்கையில் பெண் என்பவள் கைப்பொம்மைகளாக இருக்க வேண்டும் என்றே பலரும் விரும்புகின்றனர். இதனாலே தான் எத்தனையோ கொடுமைகளை அனுபவிக்க வேண்டும் என்று விரக்தியடைந்த நிலையில் சில பெண்கள் தமது வாழ்க்கையையே மாய்த்துக் கொள்கின்றனர். பெண்கள் என்றால் ஆண்கள் சொல் வதை மட்டுமே கேட்க வேண்டும் என்பது சட்டமா? அல்லது விதிமுறையா? ஆண்களைப் போலவே தான் பெண்களும் என்று ஏன் நினைக்க தோன்றவில்லை. அவர்களும் உணர்வுள்ளவர்கள் தானே. அவர்களுக்கெனவும் ஆசா பாசங்கள் விருப்பு, வெறுப்புகள் இருக்கவே செய்யும் என்பதை ஏன் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. பெண்கள் மட்டும் தான் விட்டுக் கொடுத்து வாழவேண்டும் என்று சொல்கி றார் கள். இந்த நிலை மாற்றமடைய வேண்டும். இருவருக்கிடையிலும் புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் இருந்தால் பிளவுகளையும் பேதங் களையும் தவிர்த்து சுமுகமான உறவைப் பேணலாம்.




பெண்கள் என்றாலும் பொறுப்புடன் செய்து கொள்கிறாளே என்று மெச்சியோ அல்லது பாராட்டியோ ஒரு வார்த்தை கூட கூறமாட்டார்கள். தாம் தான் எல்லாம் தெரிந்தவர்கள் என்றும் தமக்கு மட்டுமே முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் ஆண்கள் எதிர் பார்க்கும் நிலை மாற வேண்டும்.

## பெண்ணில்லாமல் ஆணில்லை

காலம் செய்யாததை
கவி மூலம் செய்த
மகாகவி பாரதிக்கு நன்றி
அடிமை பெண்ணிலிருந்து
புதுமை பெண்ணாய் மாற்றியதற்கு.
கொலு பொம்மையாய் இருந்தவளை
கோபுரத்தில் ஏற்றியதற்கு .
சமையலறையில் தவமாய் இருந்தவளை
சாதனைகள் பல செய்பவளாய் மாற்றியதற்கு.
வீட்டு கூண்டில் அடைபட்டு கிடந்தவளை
இரண்டு இறக்கை கட்டி பறக்கச் செய்ததற்கு.
பிரசவ ஆஸ்பத்திரியை குத்தகை எடுத்தவளை
பிறவி பயன் பெற்றவளாய் மாற்றியதற்கு.
பல துறையில் அவளின்
முன்னேற்றத்தின் காட்சி
பாடசாலைத் தேர்ச்சி விகிதமே சாட்சி.
பூப்பெய்தும் வரை தான் கல்வி என்பதை மாற்றி
பூமியை தாண்டி விண்ணுக்கு பயணித்ததற்கு.
அன்பால் உலகை திரும்பி
பார்க்கச்செய்த பெண்
அதரவற்றோருக்கு அடைக்கலம் தந்த பெண்
அனைத்து விமர்சனங்களையும் தாண்டி
ஆசைகளை தியாகம் செய்த பெண்
ஆண்டவனாய் அனுப்பிய தெய்வப் பெண்
அன்னை தெரசா என்ற நோபல் விருது பெண்
ஆணுக்கு அடிமையாய் கிடந்த பெண்
அவனுக்கு நிகராய் வளரும் பெண்
அலங்கார பதுமையாய் இருந்த பெண்
ஐ.ஏ.எஸ் படித்து ஆளும் பெண்
பெண்ணுக்குள் உறங்கிக் கிடந்த
பல புதுமைகளை கொடுக்கும் பெண்
திறமைகளை வளர்த்து
தரணியை ஆளும் பெண்
பெண்ணில்லாமல் ஆணில்லை
இருவர் இல்லையேல் உலகில்லை
பெண்ணுக்கு உரிமை பல கொடுப்போம்
பெண் குலத்தை போற்றுவோம் .
வாழ்க பாரதி !
வளர்க புதுமை பெண்!

ஏழாலையூர் நிலா



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 9

# யாழ்ப்பாணத்தில் ஒரு நாளேடு

■ ரம்யன்

பத்திரிகைகளில் குறிப்பாக ஆசிரியர் பகுதியில்பணிபுரியும்மூத்தபத்திரிகையாளர்களை ஆசிரியர்கள் என்றே அழைக்கிறோம். ஒரு காலத்தில் பத்திரிகை ஆசிரியர்களை தமிழில் பத்திராதிபர்கள் என்று அழைத்தார்கள். காலப்போக்கில் அது பத்திரிகை ஆசிரியர் என்று ஆயிற்று.

ஆங்கிலத்தில் எடிட்டர் (Editor) என்பார்கள். இதன் நேரடி மொழிபெயர்ப்பு பதிப்பிப்பதற்காக விடயங்களைத் தயார் செய்பவர் என்றிருக்கிறது. பாடசாலை ஆசிரியர்களையே நாம் பெரும்பாலும் ஆசிரியர் என்கிறோம். பத்திரிகையின் பிரதம பதிப்பாளர் அல்லது பத்திரிகையின் வெளியீட்டுக்கான சகல அம்சங்களுக்கும் பொறுப்பாளராக இருப்பவரை பத்திரிகை ஆசிரியர் என்கின்றோம். நூல் எழுதுபவரை நூலாசிரியர் என்பதுபோல் பத்திரிகைக்குப் பொறுப்பானவரை பத்திரிகை ஆசிரியர் என்கின்றோம்.

அன்றாடம் கிடைக்கின்ற புதிய தகவல்களை அவைகளின் தரம் நோக்கி உரியவித முக்கியத்துவம் கொடுத்து வெளியிடச் செய்வதற்கு மேலாக, வாசகர்கள் விரும்பி வாசிக்கும் அல்லது அவர்களுக்கு அன்றாடம் தேவையான விடயங்களையும் பத்திரிகைகள் வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக தினப்பலன், சந்தைவிலை வாசிகள், நீதிமன்றங்களில் அன்றைய தினம் விசாரணைக்கு வரும் முக்கிய வழக்குகள் இவை போன்றவை இன்னும் உண்டு. அவை அவைகளுக்குப் பொறுப்பானவர்கள் அவைகளைக் கவனிப்பார்கள். கேலிச்சித்திரம் வரைபவர்கள், கட்டுரை மற்றும் செய்திக்குரிய படங்களைப் பதிவிறக்கம் செய்பவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இதைவிடப் பத்திரிகையின் பக்கங்களை வடிவமைப்பவர்களும் (பக்கம் போடுபவர்) முக்கியமானவர்களே.

### செய்தி ஆசிரியர்

இவர்களைத் தவிர, செய்திப் பிரிவில் முக்கிய பொறுப்புக்களில் உள்ளவர்களில் செய்தியாசிரியர் என்பவர் மிகமுக்கியமானவர். செய்திகள் அனைத்துக்கும் இவரே பொறுப்பாக இருப்பார். செய்திப் பிரிவின் நிர்வாகம் இவராலேயே மேற்கொள்ளப்படும். எந்தெந்தச் செய்தியாளர் எங்கெங்கே சென்று என்ன மாதிரியான செய்திகளை அவர்கள் எடுக்க வேண்டும் என்பதையெல்லாம் தீர்மானிப்பவர் இவரே.

எந்தச் செய்தியை என்ன விதத்தில் எந்தப் பக்கத்தில், எந்தப் பதிப்பில் என்பதெல்லாம் அவருக்கு அத்துப்படியாக இருக்கும். காலையில் பணிகள் ஆரம்பிக்கும்போதே அன்று எந்தச் செய்தியாளர் என்ன செய்தியுடன் வருவார் என்பதை அவர் முன்கூட்டியே அறிந்திருப்பார். மேலும், செய்தியாளர்களும் செய்திகளின் முக் கியத்து வம் கருதி அவ்வப்போது செய்தி ஆசிரியருடன் தொடர்பு கொண்டு அறிவிப்பதில் அக்கறை கொண்டிருப்பார்கள். எனவே வரப் போகும் செய்திகளில் எதெது எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்பது குறித்து பெரும்பாலும் அவர் தீர்மானித்திருப்பார். சில சமயம் மனதளவில் பக்கங்களின் வடிவமைப்புக் குறித்தும் அவர் வரைபடம் ஒன்றைப்போட்டு வைத்திருப்பதும் சாத்தியமே.




### தலைமைச் செய்தி உதவி ஆசிரியர்

தலைமை உதவி ஆசிரியர் (Chief Sub Editor) என்பவர் தலைமை ஆசிரியர், ஆசிரியர் மற்றும் செய்தி ஆசிரியர் ஆகியவர்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுவார். இவரே செய்தி ஆசிரியருக்கான கடமைகளையும் அவசியமான போது மேற்கொள்பவர். உதவி ஆசிரியர்களின் பணிகளைப் பகிர்ந்தளிப்பது மேற்பார்வை செய்வது போன்ற கடமைகளையும் செய்வார்.

சிறிய பத்திரிகைகளில் இந்தப் பதவிக்குரிய கடமைகளை மட்டுமன்றி செய்தி ஆசிரியரின் கடமைகளையும் ஆசிரியரே மேற்கொள்ளும் நிலைமையும் இருக்கின்றது.

### உதவி ஆசிரியர்கள்

உதவி ஆசிரியர்கள் (Sub Editor) பத்திரிகையின் முதுகெலும்புபோல் செயற்படுபவர்கள் இவர்களே. ஒரு செய்தியாளர் நல்லதொரு செய்தியை வழங்கியிருக்கும் நிலையில் அது முறையாக எழுதப்படாமல் இருப்பின், அதன் தரமும் மதிப்பும் குறைந்துபோய்விடும். அவ்வாறு நிகழாமல் செய்பவர் உதவி ஆசிரியரே. கிடைத்த செய்திக்கு மெருகூட்டியும் வசன அமைப்பைச் சரிசெய்தும் திருத்துவது மட்டுமல்ல, செய்தியின் முக்கிய அம்சம் எதுவோ அதற்கு முக்கியத்துவம் கொடுத்தும் அதற்கான தலைப்பை அமைத்தும் வெளியிடுவதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாய் இருப்பர். பொதுவில் உதவி ஆசிரியர்கள் காரியாலயத்துக்குள்ளேயே இருந்து பணி புரிவதால் அவர்களின் சிறப்பு வெளியில் தெரிவதில்லை. அதனால் செய்திகளுக்கு மெருகூட்டிக்கவர்ச்சி கொடுத்து தலைப்பிட்டு சிறந்த முறையில் வெளியிடும் அவர்களுக் குரிய மதிப்பும் மரியாதையும் செய்தி கொண்டு வருபவருக்கே கிடைத்து விடுவதுண்டு.

இவர்கள் சில சமயம் நல்ல மொழிபெயர்ப்பாளர் களாகவும் இருந்து ஆங்கிலம், சிங்களம் முதலிய பத்திரிகைகளில் வரும் செய்திகளின் முக்கியத்துவம் கருதி, தமிழில் மொழிபெயர்த்து எழுதும் ஆற்றலுடையவர்களாய் இருப்பர். சிறிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியர்களின் பணியையும்கூட செய்தி ஆசிரியர் அல்லது ஆசிரியரே கையாளும் நிலைமையும் உண்டு.



### யாழ்ப்பாணத்தில் ஒரு தினசரி

யாழ்ப்பாணத்தில் ஒரு செய்திப் பத்திரிகையை அதுவும் ஒரு நாளேட்டை வெளியிட்டு விநியோகிப்பதும் மக்களை வாங்கிப் படிக்கும்படி செய்வதும் எவ்வளவு சிரமமும் சிக்கலுமிக்கதாக இருந்தது என்பதை இந்தத் துறையில் ஈடுபட்டு அனுபவம் பெற்ற மூத்த தலைமுறையினரைக் கேட்டால் தெரிந்துகொள்ள முடியும்.

ஈழகேசரி ஒரு செய்திப் பத்திரிகையாகவே கருதப்பட்டபோதிலும், அது தினசரியாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. அதில் வெளிவந்த செய்திகளின் வழங்கு முறைபற்றி ஆய்வாளர்களின்கருத்துகளில்முரண்பாடுகள் உண்டு. அந்தப் பத்திரிகையின் ஆசிரியரும் உரிமையாளருமானவர் காலமானதற்குப் பிறகு, அந்தப் பத்திரிகையும் நின்று போனதாகத் தெரிகின்றது.

1950ஆம் ஆண்டின் பிற்பகுதியில்தான் ஒரு செய்திப் பத்திரிகையை ஒழுங்கு முறையாக வெளியிடுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறையென்று சொல்லும்போது சகல மதத்தினரும், இன மற்றும் அரசியல் சாராத அனைவரும் செய்திகளை வாசிக்கும்படி ஒரு பத்திரிகை, இன்னும் சொல்வதானால் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்கின்ற அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கும் பொதுவான ஒரு பத்திரிகை என்ற நிலைப்பாட்டில் ஒரு பத்திரிகை வெளிவந்தது.

சமய மற்றும் சமூக அக்கறையுள்ள பத்திரிகைகள் அதற்கு முன்பிருந்தே தினசரிகளாக இல்லாது போனாலும், வாராந்த அல்லது மாத சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. ஆனால், சகல அரசியல் சமய சமூகத்தவர்களுக்குரியது என்று கூறும் அளவுக்கு எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாகச் சொல்வதானால் தென்னிலங்கையில் மக்கள் கருத்துக்களையும் மக்களுக்குத் தேவையான அரசியல் சமூக மற்றும் சமயக் கருத்துக்களையும் செய்திகளையும் தாங்கி வெளிவந்து கொண்டிருந்த சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளைப் போன்ற பத்திரிகை எதுவும் இங்கு அதுவரை வெளிவந்ததில்லை என்பதாகும். அந்தக் குறைபாடு வெகுவாக உணரப்பட்டிருந்தாலும், அதற்கான காலமும் சூழ்நிலையும் 1950களிலேயே உணரப்படலாயிற்று.

தமிழ்ப் பாரம்பரிய பிரதேசங்களில் நடக்கும் சம்பவங்கள் மற்றும் சமூக அரசியல், சமய நிகழ்வுகள் கொழும்புப் பத்திரிகைகளில் காலம் தாழ்த்தி வெளிவந்தமை ஒருபுறமிருக்க, அவை உரிய பகுதிகளுக்குச் சென்றடையும்போது அவைக்குரிய தாக்கம் நீர்த்துப்போவதும் பலராலும் உணரப்படலாயிற்று. இதனால் தமிழ்ப் பகுதிகளில் இருந்தே குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு செய்திப் பத்திரிகை வெளிவருவதன் அவசியமும் உணரப்பட்டிருந்தது.

அரசியல், கலை, கலாசாரம் தொழிற்றுறைகள் போன்ற விடயங்களில் தமிழ் மக்களின் சிந்தனைகள் கருத்துக்களின் வெளிப்பாட்டுக்குத் தேவையான களம் ஏற்கனவே தலைநகரில் இருந்து வெளியான பத்திரிகைகளில் இடம் பெறாமல் இருக்கவில்லை. இருந்தாலும் அவை சில கட்டுப்பாடுகள் நிர்ப்பந்தங்களுக்குள் இருந்தே செயற்பட நேர்ந்தது.

இன ரீதியான சிந்தனைகள் அந்தக் காலத்தில் வலுப்பெற்றும் விரிவடைந்தும் வந்தமையால் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் போராட்டங்கள் பற்றிய செய்திகளை ஒரு வரையறைக்குள்ளேயே கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகள் வெளியிட்டன. இவைகள் தவிர விளம்பரதாரர்களான பெருந்தனவந்தர்கள் அரசு, அதிகார வர்க்கத்தினரின் நிர்ப்பந்தங்களுக்கும் அவை உள்ளாகியிருந்தன.

சிங்களப் பத்திரிகைகள் செய்திகளை திரிபுபடுத்தியும் பேரின மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்திலும் வெளியிடலாயின. ஒரு கோயில் திருவிழாவுக்கான நிர்வாகிகள் கூட்டம் நடந்தால்கூட நாம் தமிழர் கூடித் திட்டம் தீட்டுகிறார்கள் என்ற வகையில் செய்திகளை வெளியிட்டன. ஆங்கிலப் பத்திரிகைகளோ தமிழர் தரப்புச் செய்திகளை இருட்டடிப்புச் செய்தன.

இந்த நிலை 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் மோசமடைந்தமை குறிப்பிடத்தக்கது. கொழும்பில் தமிழர்களால் நடத்தப்பட்ட வீரகேசரி பத்திரிகை இனவாதிகளால் தாக்குதலுக்குள்ளானது.

இந்தக் காலப் பகுதியில் தமிழ்ப் பிரதேசங்களில் அரசியல் செயற்பாடுகளும் போராட்டங்களும் விரிவடைந்தமையாலும் தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் தீவிரமடைந்தமையாலும் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்ப்பத்திரிகையொன்று விரைவாகவும், அவசரமாகவும் வெளியிடப்படுவது அவசியமாயிற்று. எனவே, தமிழ் மக்களின் அபிலாசைகளை ஆணித்தரமாக வெளியிடுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்தே ஒரு பத்திரிகையை வெளியிடுவதன் அவசியத்தைப் பலரும் ஆதரித்து நின்றார்கள்.

இதில் யாழ்ப்பாண கலை, கலாசாரத்தைப் பேணுவதில் தீவிர கவனம் செலுத்தி வந்த அமைப்பான கலாலயத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டனர் என்று அறியமுடிகின்றது. இதில் கலைப் புலவர் நவரட்ணமும் அவருடன் இணைந்து செயற்பட்ட பிரமுகர்களும் குறிப்பிடக்கூடியவர்கள்.



# எட்டப்பட முடியாத நல்லிணக்கம்

சந்திரசேகர ஆசாத்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றபோது, அதன் அனுசரணையாளராகச் செயற்பட்டவர் நோர்வேப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம். அந்தக் கால கட்டத்தில், தான் முகம் கொண்ட அனுபவங்களை ஒரு நூலாக அண்மையில் லண்டன் நகரில் வெளியிட்டிருந்தார்.
அவர் அந்த வெளியீட்டின்போது உரையாற்றுகையில் இலங்கையில் ஆட்சியாளர்களிடமிருந்து தமிழ் மக்கள் எதையும் இலகுவில் பெற்றுவிட முடியாது எனவும் உரிமைகளையும் போராடித்தான் பெறவேண்டும் எனவும் தெரிவித்தார்.
சர்வதேச சமாதான முயற்சிகளில் அனுபவம் பெற்றவரும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நீண்டதும் ஆழமானதுமான தொடர்புகளைக் கொண்டிருந்தவரும் என்ற வகையில் அவரது கருத்துக்கள் மிகவும் கவனத்தைப் பெறக்கூடியவையாகும்.
இது, தமிழ் மக்கள் ஏற்கனவே நீண்டகால அனுபவங்கள் மூலம் புரிந்து கொண்ட ஓர் ஆணித்தரமான உண்மைதான். தந்தை செல்வா காலம் தொட்டு, தலைவர் பிரபாகரன் காலம் வரை இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் போராட்டங்கள் வலுவடையும்போது படியிறங்கி வந்து பேச்சுக்களை நடத்துவதும், ஒப்பந்தங்கள் செய்வதும், வாக்குறுதிகள் வழங்குவதும் பின்பு அவற்றைக்கைவிட்டு ஏமாற்றுவதுமே காலம் காலமாக வரலாறாக இருந்து வந்துள்ளது.
பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், திம்புப் பேச்சு, விடுதலைப் புலிகளுடனான சந்திரிகா, பிரேமதாச, ரணில் ஆகியோரின் பேச்சுக்கள் என அனைத்துமே போராட்டங்கள் வலுவடையும்போது மேற்கொள்ளப்படுவதும் பின்பு கைவிடப்படுவதுமாகவே நிலைமை இருந்து வந்துள்ளது.

### கைதிகளுக்கும் போராட்டம்

இன்று அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விவகாரத்திலும் அதே வழிமுறை எவ்வித மாற்றமுமின்றிப் பின்பற்றப்பட்டு வருகிறது. இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம், நல்லாட்சி என்பவற்றை ஏற்படுத்துவது என்ற வாக்குறுதியுடன் தமிழ் மக்களின் பேராதரவைப்பெற்று ஆட்சிபீடமேறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நல்லிணக்கத்தை விட்டு வெகு வேகமாகவே விலகிப் போய்க் கொண்டிருக்கின்றனர். பழைய ஏமாற்று அரசியலைக் கையிலெடுத்ததன் மூலம் அதே பாதையில் செல்வதை உறுதிப்படுத்தியுள்ளனர்.
ஏந்த வித மனிதாபிமான விதிகளுக்கும் உட்படாத வகையில் நீண்டகாலமாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையைக் கோரிப் பல போராட்டங்களை நடத்தினர். அதில் பலர் உயிரிழக்கும் நிலையும் ஏற்பட்டது. ஆனால் கடந்த அரசு, அவர்களின் விடுதலை தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்காதது மட்டுமன்றி அவர்களின் தொகையைக் கூட்டுவதிலும் தீவிர அக்கறை காட்டியது.
ஆட்சி மாற்றத்தின் பின்பு தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையைக் கோரி உறுதியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். பலரின் நிலை கவலைக்கிடமாகிப் போன நிலையிலும் அவர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை, இறுதியில் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் இந்த மாதம் 7ஆம் திகதிக்கு முன்பு கைதிகள் விடுதலை தொடர்பாக ஒரு திட்டவட்டமான முடிவைத் தெரிவிப்பதாகக் கூறியதன் அடிப்படையில் கைதிகள் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டனர்.
அடுத்து, முதற்கட்டமாக 32 பேரும் தொடர்ந்து 30 பேரும் பிணையில் விடுவிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டது. அதில்கூட ஒரு பெரும் ஏமாற்று. விடுவிக்கப்பட்ட 32 பேரில் 6 பேர் குற்றவியல் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட சிங்களக் கைதிகள். தமிழ் அரசியல் கைதிகளின் பேரில் சட்டவிரோதக் கும்பல்களைச் சேர்ந்த சிங்களக் கைதிகளையும் விடுவிக்கும் வெட்கம்கெட்ட கயமைத்தனம் மேற்கொள்ளப்பட்டது. அடுத்து விடுவிக்கப்படவிருந்த 30 பேரில் 10 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டனர்.
அதாவது ஜனாதிபதியின் வாக்குறுதியையே சட்டமா அதிபர் திணைக்களம் நீர்த்துப்போகச் செய்துள்ளதென்றால் அதிகார முறைகேடு எவ்வளவு தூரம் கொடி கட்டிப் பறக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

### பரந்துபட்ட ஆதரவு

இப்படித் தொடர்ந்தும் ஏமாற்றுக்கள் கோலோச்சிய நிலையில் கைதிகள் மீண்டும் 8ஆம் நாள் போராட்டத்தை ஆரம்பித்தனர். பல கைதிகள் கவலைக்கிடமான நிலையை அடைந்தபோதும், 30 கைதிகளின் சிறுநீரகங்கள் செயலிழக்கும் நிலை ஏற்பட்டபோதும் போராட்டம் உறுதியாக முன்னெடுக்கப்பட்டது.
ஏற்கனவே இடம்பெற்ற கைதிகளின் போராட்டங்களைவிட இது பரந்த அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. வடக்குக் கிழக்கில் கைதிகளின் விடுதலைகோரி நடத்தப்பட்ட முழு அடைப்பு இரு மாகாணங்களையுமே முடக்க நிலைக்குத் தள்ளியது. இதில் தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தினர். சில பிரதேசங்களில் முஸ்லிம்கள் கலந்து கொள்ளாதபோதிலும்கூட தங்களுக்கு உரியநேரத்தில் தெரிவிக்கப்படவில்லையென்றும், கைதிகளுக்குத் தங்கள் ஆதரவு உண்டு எனவும் தெரிவித்திருந்தனர்.
இன்னொருபுறம் பெரும் இனவாத அமைப்பாகப் பார்க்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைவகுப்பாளரான அத்துரலிய ரத்தினதேரர், கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என வலியுறுத்தியிருந்தார். தமிழ் மக்களுக்கு எதிரான போரில் தளபதியாக அதன் வெற்றிக்குப் பெரும் இராணுவப் பங்களிப்பு வழங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் கைதிகள் விடுவிப்பை ஆதரித்துக் குரல் கொடுத்தார்.
மனித உரிமை அமைப்புக்கள், மலையகத் தலைமைகள், பல்வேறு சமூக, சிவில் அமைப்புக்கள், அரசிலுள்ள அர்ஜுனரணதுங்க உட்படச் சில அமைச்சர்கள் என இன, மத பேதமன்றிப் பல்வேறு தரப்பிரும் கைதிகள் விடுதலை தொடர்பாக அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்தனர். ஆனால் அரசியலில் தொடர்ந்து பல தோல்விகளைச் சந்தித்து இனவாதத்தை மட்டும் மூலதனமாகக் கொண்டு அரசியல் வியாபாரம் செய்யும் மகிந்த ராஜபக்ச குழுவினர் மட்டும், கைதிகளை விடுவிப்பது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறி வருகின்றனர். அவர்கள் பன்னிரண்டாயிரம் ஆயுதமேந்திய போராளிகளை விடுவிக்கும்போது வராத ஆபத்து எப்படி 200 பேரை விடுவிக்கும்போது வரும் என அவர்கள் தெளிவுபடுத்தவில்லை.

### மாறாத அரச இயந்திரம்

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் கைதிகள் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்தித்துப் பேசினார். அதற்கு அவர், தான் கைதிகளை விடுவிக்க விரும்புகிறார் எனவும், தென்னிலங்கை அரசியல் அதற்கு எதிராக இருப்பதாகவும் தெரிவித்தார்.
அப்படியானால் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியால்கூட, ஒரு நியாயமான விடயத்தைச் செய்ய முடியாதளவுக்கு தெற்கில் இனவாதக்கோட்டை இறுக்கமாக உள்ளது என்றுதானே அர்த்தம்? அப்படியானால் இனப்பிரச்சினைத் தீர்வு போன்ற விவகாரங்களில் எப்படி இந்த அரசால் நியாயபூர்வமான முடிவை எடுக்க முடியும்?
இன்னும் சொல்லப்போனால், அதிகாரம் பறிபோன பின்பும் ஆட்சியின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தி மகிந்த ஆதரவுக் கூட்டத்திடமே கையளிக்கப்பட்டுள்ளது என்று கூற முடியுமா?
அரசு மாறியது உண்மை. ஆனால் இன்னமும் அரச இயந்திரத்தின் கட்டமைப்பு முன்னைய சக்தியுடனேயே செயற்பட்டு வருகிறது. பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் என்பன ஏற்கனவே இயங்கி வந்த அதே வழிமுறையிலேயே இயங்கி வருகின்றன. இனவாதம் மட்டுமன்றி அதிகார முறைகேடு, பாரபட்சம் போன்ற சகல ஜனநாயக விரோதப் போக்குகளும் அப்படியே நிலை பெற்றுள்ளன.
இந்த நிலையில் கைதிகள் விடுதலை தொடர்பாக முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் என்பவற்றின் கைகளில் உள்ளன. இதுவே கைதிகள் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமற் போனமைக் கும், வடமாகாண முதலமைச்சருக்கு எந்த ஒரு திட்டவட்டமான பதிலையும் வழங்க முடியாமற் போனமைக்குமான காரணங்களாகும்.
அதாவது அரசை அரசு இயந்திரமே வழி நடத்தும் நிலமை இன்னும் தேசிய பாதுகாப்பு என்ற பேரில் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் இலங்கை அரசோ மஹிந்த ஆட்சியின் சர்வாதிகார நடைமுறைக்காக வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும்.
தமிழ் அரசியல் கைதிகளால் மீண்டும் கடந்த 9ஆம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் சில வாக்குறுதிகளின் பேரில் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதிகளில் எதுவும் ஒரு திட்டவட்டமானது இல்லை என்பதுதான் முக்கியமானதாகும். இதன் அடிப்படையில் ஏமாற்றத்தைத்தான் தமிழர்கள் தொடரமுடியும்.

### சாத்தியமற்ற நல்லிணக்கம்

எதிர்வரும் 10 நாள்களில் கைதிகளில் ஒரு பகுதியினர் புனர்வாழ்வுக்கு விடப்படுவர் எனவும், மிகுதிப்பேர் படிப்படியாகப் பிணையில் விடுவிக்கப்படுவார்கள் அல்லது புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவர் எனவும் கூறப்பட்டது.
இந்தப்பத்துநாள்களில் விடுவிக்கப்படுபவர்கள் எத்தனை பேர் என்றோ இந்தப் படிப்படியான விடுவிப்பு எத்தனை காலம் தொடரும் என்றோ தெரிவிக்கப்படவில்லை. எனவே, இங்கு ஓர் இழுத்தடிப்புக்கான அத்திபாரம் போடப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும்.
இப்படியான நிலையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் உருவாகும் வாய்ப்பு எப்படி உருவாக முடியும்?
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது ஆதரவை வழங்கித் தமது நல்லிணக்க அவாவை வெளிப்படுத்தினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தனது நல்லிணக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதற்குப் பதிலாக அரசு தமிழ் மக்களை ஏமாற்றுவதிலேயே கூடிய அக்கறை காட்டும் நிலையில் நல்லிணக்கம் எட்டிப்போவது தவிர்க்க முடியாததாகும்.
நோர்வேப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் கூறியதைப் போல் தமிழ் மக்கள் போராடாமல் எதையுமே பெறமுடியாது என்பதுதான் உண்மை.

# பாரிஸ் தாக்குதல்

## முக்கிய சூத்திரதாரியின் மர்ம வாழ்க்கையும் இறப்பும்



பாரிஸின் புறநகர் பகுதியான செயின் டெனிசில் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் கொல்லப்பட்டு விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ள பாரிஸ் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரி அப்டெல் ஹமீட் அபாவுத் குறித்து வெளியாகும் தகவல்கள் ஐரோப்பாவின் பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரி களை அச்சமடையச் செய்யக்கூடியவையாக இருக்கின்றன.

தீவிர மத ஆர்வமற்ற பெற்றோர்களினால் வளர்க்கப்பட்ட அப்டெல்ஹமீட், இளவயதிலேயே சிறிய குற்றங்களில் ஈடுபட்டார் எனவும்,அதன் பின்னர் திடீர் என மத அடிப் படைவாதத்தினால் ஈர்க்கப்பட்டு (சுனி இஸ்லாம்) பயங்கரவாதத்தின் பாதையில் சென்றார் எனவும் இதன் மூலம் ஐரோப்பாவில் பலரின் இறப்பிற்குக் காரணமாக விளங்கினார் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான ஒரு பின்னணியைக் கொண்ட நபர் குறித்தே ஐரோப்பிய பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர் அதிகம் அச்சப்படுகின்றனர்.


அபாவுத்தின் தந்தை மொராக்கோவில் பிறந்தவர். 1975இல் அவர் பெல்ஜியத்திற்குக் குடிபெயர்ந்தார். அங்கு மொலென்பீக் என்ற பகுதியில் ஆடைகள் வியாபாரத்தில் ஓரளவு வெற்றிபெற்றார்,

மொலென்பீக் பெல்ஜியத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதி. பாரிஸ் தாக்குதல்களுக்குப் பின்னர் அதிகளவுக்கு சர்வதேச புலனாய்வு அமைப்புகளின் கவனத்தை இந்த பகுதி ஈர்த்துள்ளது. இந்தப் பகுதியிலிருந்தே அதிகளவு ஜிகாத்வாதிகள் உருவாகியுள்ளனர் என்ற கருத்து ஐரோப்பிய அதிகாரிகள் மத்தியில் காணப்படுகின்றது.

அபாவுத்தின் தாய் குறித்து பெருமளவுக்குத் தகவல்கள் இல்லை. 1987இல் பிறந்த அபாவுத், குடியேற்றவாசிகளுக்குக் கிடைத்த சலுகைகளை அனுபவித்தார். முற்றுமுழுதாக கிறிஸ்தவர்களுக்காக – கத்தோலிக்க மத பிரிவினருக்காக நடத்தப்படும் பாடசாலையில் கல்விகற்றார். ஐரோப்பாவில் முஸ்லிம்கள் பாராபட்சங்களை எதிர்நோக்கிய போதிலும் அபாவுத் அவற்றை அனுபவிக்கவில்லை. பதிலாக, சலுகைகளை அனுபவித்தார் என நியுயோர்க் டைம்ஸ் தெரிவிக்கின்றது.

பாடசாலையிலிருந்து அபாவுத் இடைநிறுத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இதற்கானகாரணம் தெரியவில்லை, இதன் பின்னர் அபாவுத்தின் வாழ்க்கை ஜிகாத்திகளாக மாறிய ஏனையவர்களின் வாழ்க்கையைப் போலவே காணப்படுகின்றது.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய அபாவுத்,இப்ராஹிம் அப்தெல்சலாமுடன் (பாரிஸ் தாக்குதலை மேற்கொண்ட மற்றொருவர் – இவரது சகோதரர் இன்னமும் தேடப்படுகின்றார்) நண்பன் ஆனார் எனவும், பின்னர் இருவரும் இணைந்து குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் எனவும், போதைப்பொருள் வியாபாரிகளுடனான தொடர்புகளுக்காக சிறிது காலம் அபாவுத் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் எனவும் பாரிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.




அபாவுத்தின் மத–ஈடுபாடு திடீர் என தோற்றம்பெற்ற ஒன்று. இதன் பின்னர் அபாவுத் 2014இல் சிரியா சென்றுள்ளார். இந்தப் பயணம் அபாவுத்தின் குடும்பத்தினருக்குக் கடும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவின் அலெப்பேயில் தயாரிக்கப்பட்ட வீடியோவொன்றில் தோன்றிய அபாவுத் தெரிவித்த கருத்துக்கள் அச்சமூட்டு பவையாகக் காணப்படுகின்றன. "நான் என் வாழ்நாள் முழுவதும் முஸ்லிம்களின் குருதி பெருக்கெடுத்தோடுவதைப் பார்த்துள்ளேன். தன்னை எதிர்ப்பவர்களின் முதுகை இறைவன் முறிக்கவேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன்" என அந்த வீடியோவில் அபாவுத் குறிப்பிட்டிருந்தார்.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பு அபாவுத்திற்கு எமிர் ஒவ்வோர் என்ற பட்டத்தை வழங்கியது. ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு ஜிகாத்திக்கு இந்த பட்டம் வழங்கப்பட்டமை ஆச்சரியமான விடயம் என்கிறது வோல் ஸ்ரீட் ஜேர்னல். சிரியாவில் அபாவுத் புதிய உறுப்பினர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினார்.

பாரிஸின் ஊடகங்களுக்குக் கிடைத்த வீடியோ ஒன்றில் அபாவுத் சிரியாவில் பிணங்களை வாகனமொன்றில் ஏற்றுவதைக் காணமுடிகின்றது.(பார்ப்பதற்கு மிகவும் அச்சமூட்டுவதாக அது காணப்படுவதை சொல்லத்தேவையில்லை) 2014இல் அபாவுத் தனது 13 வயது இளைய சகோதரர் யூனெசினை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைத்துக் கொண்டுள்ளார். யூனெஸ் அதிகாரிகளுக்குச் சந்தேகம் வராதவிதத்தில் சிரியாவுக்குச் சென்றுள்ளார். ஐ.எஸ். அமைப்பில் உள்ள வயது குறைந்த ஜிகாதி யூனெஸ் என அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர், இதனால் அபாவுத்தின் தந்தை கடும் அதிர்ச் சிக்குள்ளாகியுள்ளார். "என்னால் இதற்கு மேல் தாங்க முடியாது" எனக் குறிப்பிட்டுள்ள அவர், தனது மகனுக்கு எதிரான அரச வழக்கொன்றில் தன்னையும் இணைத்துக்கொண்டுள்ளார். "அவன் எங்கள் குடும்பத்தை அழித்தான். நான் அவனை மீண்டும் பார்க்கவிரும்பவில்லை" எனத் தெரிவித்துவிட்டு அவர் மீண்டும் மொராக்கோ சென்றுவிட்டார்.

அபாவுத் இதன் பின்னர் பெல்ஜியத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளார். இது குறித்து அபாவுத் தெரிவித்த கருத்துக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆங்கில சஞ்சிகையான தாபீக்கில் காணமுடிகின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டதில் ஈடுபட்டுள்ளவர்களை அச்சுறுத்துவதற்காக ஆண்டவர் தன்னைத் தெரிவு செய்துள்ளார் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். ஈராக்கிலும், சாமிலும் முஸ்லிம் களைத் தாக்கும் கூட்டணியில் பெல்ஜியமும் இடம்பெற்றுள்ளது எனவும் அபாவுத் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம் அதிகாரிகளுக்கு அவர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பை சேர்ந்தவர் என்பது தெரிந்திருந்தபோதிலும் அவரால் தப்ப முடிந்த சம்பவத்தை அவரே விவரித்துள்ளார். ஓர் அதிகாரி தன்னைச் சந்தேகத்துடன் பார்த்த போதிலும் தன்னைக் கண்டுபிடிக்கவில்லைஎன அவர் தாபீக் இதழுக்குத் தெரிவித்துள்ளார்.

"மோதல் ஒன்றிற்கு முன்னர் சகோதரர் ஒருவர் எங்களைப் படமெடுத்திருந்தார். ஆனால் அவரது புகைப்படக்கருவி தொலைந்துவிட்டது. பின்னர் துரோகி ஒருவன் அதனை மேற்குலக பத்திரிகையாளன் ஒருவனுக்கு விற்றுவிட்டான். நான் திடீர் என எனது படத்தை ஊடகங்கள் முழுவதிலும் பார்த்தேன். பெல்ஜியத்தில் என்னைத் தடுத்து நிறுத்திய அதிகாரி அந்தப் படத்துடன் என்னை ஒப்பிட்டுப் பார்த்தார். ஆனால் ஒற்றுமையைக் கண்டறிய முடியாததால் என்னை விட்டுவிட்டார். இது அல்லாவின் கிருபை" என அவர் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியத்தில் அவர் மிகவேகமாக தாக்குதல்களுக்கான திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்துள்ளார். பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் இடம்பெற்ற சிறுசிறு முயற்சிகளில் தொடர்புபட்டவர்களுக்கும் அபாவுத்திற்கும் இடையில் தொடர்பிருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (பிரான்ஸை நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிவேக ரயில் நிலையத்தின் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியை அமெரிக்க இளைஞர்கள் முறியடித்திருந்தனர்).

கடந்த ஜனவரியில் பெல்ஜியம் அதிகாரிகள் அபாவுத் உருவாக்கியிருந்த மறைவிடம் ஒன்றினைச் சோதனை செய்தனர். இதன் போது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பெல்ஜியத்தில் இடம்பெற்ற கடும் துப்பாக்கி மோதல் வெடித்தது என சிஎன்என் குறிப்பிட்டுள்ளது. அபாவுத்துடன் சிரியாவிலிருந்து வந்த இருவர் இந்த மோதலில் கொல்லப்பட்டனர். ஆனால் அபாவுத் தப்பினார்.

பெல்ஜியம் அதிகாரிகள் தாங்கள் பெரும் தாக்குதலை முறியடித்ததனர் என்று குறிப்பிட்டனர். ஆனால், அபாவுத் அங்கிருந்து தப்பினார். மீண்டும் சிரியாவிற்கே வந்தார். இது குறித்து அவர் தாபீக் இதழிற்கு மீண்டும் செவ்வி வழங்கினார். ஐரோப்பிய அரசுகளின் புலனாய்வுப் பிரிவினர் மிகவும் திறமைசாலிகள் எனத் தெரிவிக்கப்படும் அளவுக்கதிகமான கூற்றை நம்பவேண்டியதில்லை என்பதை தனது அனுபவம் வெளிப்படுத்துகின்றது என அவர் தெரிவித்தார் (இந்த இதழ் இணையத்தில் காணப்படுகின்றது. அதில் அச்சமூட்டக்கூடிய படங்களும் காணப்படுகின்றன.)

பயங்கரவாத சதித்திட்டத்தை தீட்டியதற்காக அபாவுத் இல்லாத நிலையிலும் இந்தக் கோடை காலத்தில் அவருக்கு நீண்டகால சிறைத்தண்டனையை வழங்கியது பெல்ஜியம் நீதிமன்றம்.

ஒக்டோபர் மாதம் அபாவுத்தை இலக்குவைத்து ரக்காவில் உள்ள பயிற்சி முகாம் மீது பிரான்ஸ் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல் வெற்றியளித்துள்ளதாக முதலில் நம்பப்பட்டது. அபாவுத்தின் குடும்பத்தினருக்கும் அவர் கொல்லப்பட்டுவிட்டார் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது. "அவன் உண்மையிலேயே கொல்லப்பட்டிருக்கவேண்டும் என நாங்கள் பிரார்த்திக்கின்றோம்" என அபாவுத்தின் சகோதரி யஸ்மினா தெரிவித்தார், எனினும் அபாவுத் மீண்டும் பெல்ஜியத்துக்குத் திரும்புவதற்கு ஏற்ற வகையிலேயே அவர் கொல்லப்பட்டு விட்டார் என்ற தகவல் பரப்பபட்டதாக அதிகாரிகள் இப்போது நம்புகின்றனர். ஆனால் அவர் எப்போது எப்படி திரும்பி வந்தார் என்ற விவரங்கள் அதிகாரிகளுக்குத் தெரியாது. எனினும் பாரிஸ் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி அவர்தான் எனக் கருதுகின்றனர்.

புதன்கிழமை அதிகாலைக்கு முன்னர் பாரிஸின் புறநகர் பகுதியான செயின்ட் டெனிஸ் பகுதியிலுள்ள தொடர்மாடியை அதிகாரிகள் சுற்றிவளைத்தனர். மோதல் வெடித்தது. அதில், தன்னை வெடிக்கவைத்துக்கொண்ட தற்கொலைக் குண்டுதாரி உட்பட இருவர் அப்போது கொல்லப்பட்டனர். குண்டு துளைக்கப்பட்ட காயங்களுடன் காணப்பட்ட உடல் அபாவுத்தினுடையது என கைவிரல் அடையாளம் மூலம் இனம் காணப்பட்டதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

**டேவிட் கிரஹாம் அட்லான்டிக்**

**தமிழில்: ரஜீபன்**

சுகி பாலா,
இணுவில்



# ஆரோக்கியம்

ஆரோக்கியம் – இந்த வார்த்தையை நம்மில் பெரும்பாலானோர் அந்நியமாகவே உணர்கிறோம். மருத்துவமனைகளிலும், மருந்துக்கடைகளிலும் காசுகொடுத்து வாங்கப்படும் பொருளாகவே இதை நாம் கருதுகிறோம். ஆரோக்கியம் என்பது எமது உணவு – உடல் பழக்கவழக்கங்களிலேயே தங்கியுள்ளது.

அதிக ஆண்டுகள் வாழவேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள நியாயமான இயல்பான ஆசையே. எல்லோரும் ஆசைப் படுகின்றனரே தவிர அதைச் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளைத்தான் எவரும் தெரிந்துவைத்திருக்கவில்லை – தெரிந்து வைத்திருந்தாலும் அதனை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதில்லை.

நம் உடல் ஆரோக்கியத்தில் உணவும் – உடற்பயிற்சியும்சரிசமபங்களிப்புவழங்குகின்றன. நோயில் இருந்து தற்காத்துக் கொள்வது, நோய் தாக்கினாலும் அது குணமடைய உதவுவது என இரு வழிகளில் இந்த உணவு மருந்துகள் செயற்படுகின்றன. நம் உடல் ஆரோக்கியத்தில் பழங்கள் – காய்கறிகள் – தானியங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இது யாவரும் அறிந்ததே.

சில சமயங்களில் நோய்களுக்கு சில சில உணவுகளைத்தவிர்க்கவேண்டும்.சிலவற்றை எண்ணெய்காரமின்றிச் சேர்த்தல் வேண்டும். இப்படி சிலதைத் தவிர்க்கவும் சிலவற்றைச் சேர்க்கவும் வேண்டும் என வைத்தியர்கள் கூறுவது உணவே மருந்தாக இருப்பதனாலேயே ஆகும்.

இன்றைய தலைமுறையைவிட எமது அப்பா அம்மா தலைமுறையை இல்லை – இல்லை அவர்களை எடுத்துக் கொள்ள முடியாது – அதைவிட எமது தாத்தா பாட்டி தலைமுறை மிக ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் உடல் உழைப்பு, தீய பழக்கங்கள் இல்லாதது, ஆரோக்கியமான உணவுகள் என்பவையே.

இயற்கைக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பை எம் முந்தைய தலைமுறையினர் நன்கு அறிந்து வைத்திருந்தனர். ஆனால் இன்றைய காலத்தில் உணவே விசம். ஏனெனில் பணம்... பணம்... என அதை மட்டுமே குறி வைத்துக் காய்கறிகளுக்கு அளவற்ற கிருமிநாசினிகளைத் தெளிக்கின்றனர். முன்பெல்லாம் மருந்து அடித்தால் அந்தக் காய்கறிகளை மூன்று அல்லது நான்கு நாள்களுக்குப் பிறகுதான் சந்தைக்குக் கொண்டு செல்வார்கள். ஆனால் இப்போதெல்லாம் விடிய மருந்து அடித்து மாலையில் அவற்றைப் பிடுங்கி மறுநாளே சந்தைக்குக்கொண்டுசெல்கிறார்கள். இதனை முற்றாகத் தடுக்க முடியாவிட்டாலும் முடிந்தளவு வீட்டுத் தோட்டங்களைச் செய்து நல்லகாய்கறிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ம்..... இதையெல்லாம் யார் செய்யப் போகிறார்கள்? எம்மவர்கள்தான் நல்லனவற்றை எல்லாம் செய்யவே மாட்டார்களே. இறப்பைத் தேடியல்லவா ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இதை என்னவென்று யாருக்குச் சொல்ல?

நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் அவற்றின் சத்து – பயன் அறிந்து உண்ண வேண்டும். சாப்பிடுகிறவர்களில் இரண்டு வகையுண்டு. ஒன்று பசிக்காக உண்பவர்கள், மற்றையோர் ருசிக்காக உண்பவர்கள். உண்மையில்உங்களின்ஆரோக்கியத்துக்காக மட்டும் உண்ணுங்கள்.

நாம்உட்கொள்ளும்உணவில்சத்துப்பொருள்கள் எனும் கதாநாயகனோடு பல வில்லன்களும் சேர்கிறார்கள். இங்கே கதாநாயகன் என்பது பக்கவிளைவற்ற சத்தான உணவே. வில்லன்கள்என்பதுதேவையற்றஎண்ணெய், நொறுக்குத் தீனிகள், செயற்கையான நிறமூட்டப்பட்ட குளிர்பானங்கள், பக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட குடிபானங்கள்.

நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் வீட்டில் ஒரு கப் பயறை உணவாக எடுத்துக் கொள்ள நேரமில்லாமல் அவசரமாக வேலைக்குச் செல்பவர்கள். அங்கு கடைகளில் எண்ணெயில் பொரித்த உணவுகளையும் தேநீரையும் அருந்துகின்றனர். இதில் என்ன வேடிக்கை என்றால் உடலுக்குத் தேவையான சத்தானபயறைஉண்ணநேரமில்லாதவர்கள் கடையில் போய் உடம்புக்குத் தேவையில்லாத எண்ணெய் சேர்த்த சிற்றுண்டிகளையும்உண்ணுகின்றனர். ஆக மொத்தத்தில் உடம்புக்கு தேவையில்லாத ஒன்றை உட்கொண்டு தம் ஆரோக்கியத்தை தாமே கெடுத்துக்கொள்கிறார்கள்.

> ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடற்பயிற்சியும் அவசியம். உடலை வருத்தி, உடற்பயிற்சி செய்வதற்கான உந்துதல் எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. உடற்பயிற்சி செய்யச் சொன்னால் பலரும் செய்யமாட்டார்கள் என்பதாலேயே நம் முன்னோர்கள் மறைமுகமாக சமயத்தோடு விஞ்ஞானத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் இணைத்து விட்டார்கள்.

பெரும்பாலும் பலர் மரக்கறிகளைத் தம் வசதிக்கேற்ப பெரிய பெரிய கடைகளிலே வாங்குகிறார்கள். இது ஒரு வகையில் போலிக் கௌரவத்துக்காகத் தம்மை உயர்வசதி படைத்தவர்கள் என்றுகாட்டுவதற்கும்ஆகும். பெரிய பெரிய கடைகளில் குளிரூட்டிகளிலேயே காய்கறிகள் பல நாள்கள் வைக்கப்படுகின்றன. பழுதடையப் பழுதடைய மேலும் மேலும் மருந்துகள் தெளித்து, பார்த்ததும் கண்ணைக் கவரும் விதத்தில் அடுக்கப்பட்டுக்காட்சியளிக்கின்றன. ஆனால் சிறிய சிறிய அன்றாடக் கடைகளில் உடனுக்குடனேயே காய்கறிகள் சிறிதளவில் கொள்வனவு செய்யப்பட்டு உடனுக்குடன் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் உடனுக்குடன் காய்கறிகள் வரும் கடைகளில் எமக்குத் தேவையான காய்கறிகளை வாங்கிக் கொள்ளலாம். இதனால் எமது ஆரோக்கியம் கொஞ்சமேனும் பர்து காக்கப்படும்.

உண்மைகள் கசக்கும் – ஆடம்பரமில்லாதது என்று சொல்வார்கள். இவை கதைகளுக்கு மட்டுமல்லஉணவுப்பழக்கவழக்கங்களுக்கும் பொருந்தும். நல்ல உணவுப் பொருள்களை விடுத்து, பார்க்கக் கவர்ச்சியாக இருக்கும்அலங்காரவேலைப்பாடுகள் நிறைந்த அழகு எனும் மாயை போர்த்தப்பட்ட சத்தற்ற சுகாதாரமற்ற உணவுகளையே உண்கிறோம். அதனையே நாகரிகமாகவும் மாற்றி விட்டார்கள் எம்மவர்கள்.

உயிர் போனாலும் நாகரிகத்தைக் கைவிடாதவர்கள் எம்மவர்கள். அதனால்தான் இன்னும் வீட்டுச் சாப்பாடுகளைவிட கோட்டல் சாப்பாடுகளை நோக்கிப் படையெடுக்கிறார்கள். அதிலும் மழைகாலங்களில் கடைகளில் சமைக்கப்படும் உணவுகளை யோசித்துப் பாருங்கள். தெருவெல்லாம் ஓடும் வெள்ள நீர் வாய்க்காலில் தேங்கி நிற்கும்போது அதைக் கடந்து கடைக்குச் சென்று சாப்பாடு வேண்டிச் சாப்பிடும்போது உங்கள் ஆரோக்கியம், சுகாதாரம் பற்றி ஒரு கணமேனும் சிந்தித்ததுண்டா?

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடற்பயிற்சியும் அவசியம். உடலை வருத்தி, உடற்பயிற்சி செய்வதற்கான உந்துதல் எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. உடற்பயிற்சி செய்யச் சொன்னால் பலரும் செய்ய மாட்டார்கள் என்பதாலேயேநம்முன்னோர்கள் மறைமுகமாக சமயத்தோடு விஞ்ஞானத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் இணைத்து விட்டார்கள்.

நாம்தினமும்காலையில் எழுந்து சுத்தமாகி, கோயிலைசுற்றிவருதல், இருந்து எழும்பி தோப்புக்கரணம் போடுதல், விழுந்து கும்பிடுதல்; சூரிய நமஸ்காரம் இப்படியான செயல்முறைகள் மூலம் உடற்பயிற்சியை மறைமுகமாக செய்வித்தார்கள். ஆனால் இன்று எத்தனைபேர் கோயிலுக்கு செல்கிறார்கள்?

மகாகவிபாரதிகூட மாலைமுழுவதும்விளையாட்டு என்று பாடிவைத்தார். ஆனால் இன்று எத்தனைபேர் ஓடியாடி விளையாடுகிறார்கள்? விளையாடுகிறார்கள்தான், மைதானத்தில் இல்லை – கணினியில் விளையாட்டு. இது எங்கே ஆரோக்கியம்?

முன்பெல்லாம் ஊரில் பலரும் மிதி வண்டிதான் வைத்திருப்பார்கள். தமது அன்றாடக் கருமங்களை மிதிவண்டியிலேயே சென்று செய்து முடிப்பார்கள். இது உடலுக்கும் பயிற்சி. ஆனால் பணவசதி அதிகரிக்க அதிகரிக்க சைக்கிள் காணாமற்போய் மோட்டார் சைக்கிளும் கார்களும் இதர வாகனங்களும்தான் இன்று பாவனையில் அதிகம். இதனால்உடல்ஆரோக்கியம்கெட்டதேதவிர வேறொன்றும் இல்லை.

மோட்டார் சைக்கிள் ஓட்டியவன் முழங்கால் பிடிப்பு என்கிறான். ஓடுகின்ற சைக்கிளை ஓட்டாமல் கார் ஓட்டியவன் தொப்பை வந்துவிட்டதாம் என்று ஓடாத சைக்கிளை பயிற்சிக் கூடத்தில் ஓடுகிறான்..... இதனை நினைத்து சிரிப்பதா? சிந்திப்பதா?

வசதி வாய்ப்புக்கள் நவநாகரிகங்கள் தேவைதான், ஆனால் அவை அனைத்தும் நம் ஆரோக்கியத்தோடு இணைந்ததாக இருக்க வேண்டும்.





# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

கலாபூசணம் மு.மாசிலாமணி

ஹீரோ என்ற ஆங்கிலச் சொல் எமது மொழியில் கலந்து தமிழ்ச் சொல் எனப் பலர் நினைக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஹீரோ என்றால் சூரன், வீரன், தலைவன், கதாநாயகன் என்று அர்த்தம்.

ஓர் இளம் குடும்பத்தில், தகப்பன்தான் ஹீரோ என அவர் களது பிள்ளைகள் நினைப்பதுண்டு. தகப்பனை அந்தக் காலத்தில் பிள்ளைகள், ஐயா என்றுதான் அழைப்பார்கள். இந்த ஐயா இப்பொழுது யாழ்ப் பாணத்தில் அப்பாவாக மாறிவிட்டது.

அண்மையில் எனது நண்பர் வீட்டுக்குச் சென் றிருந்தேன். அவர் வீட்டில் இல்லை என்பதால் அவர் வரும்வரை காத்திருந்தேன். அவர் வீட்டில் இரு பிள்ளைகள் (ஒருவர் அடுத்த வீட்டுப் பிள்ளை) தமது ஹீரோவைப் பற்றி புளுகி விளையாடிக் கொண்டிருந் தனர். ஒருவர் எங்கடை அப்பா வேட்டைக்கு வெளிக் கிட்டால் முதலிலை மானைச் சுடுவார் பிறகு மரையைச் சுட்டு விழுத்துவார் எனச் சொல்ல, நண்பரின் மகன் எங்கடை அப்பா முதலிலை சிங்கத்தைத்தான் சுட்டு விழுத்துவார் பிறகுதான் புலி, யானைகளைச் சுட்டு விழுத்துவார் என்றார்.

மற்றவரோ எங்கடை அப்பா இரட்டைக்குழல் துப்பாக்கி வைத்திருக்கிறார் என்று புளுக நண்பரின் மகன் எங்கடை அப்பா மூண்டு குழல் துப்பாக்கி வைத்திருக்கிறார் எண்டார்.

இப்பிடியே இருவரும் மாறிமாறி புளுகிக் கொண்டிருக்க எனது நண்பரின் மகன் தனது நண்பனை வீழ்த்த ஒரு புதுக்கதையை அவிட்டு விட்டான். எங்கடை அப்பா வேட் டையாடி முடிய ஒரு பேய் வந்தது, அந்தப் பேயையும் சுட்டு விழுத்தி விட்டார் என ஒரு பேய்க் கதையை விட்டார். அந்தப் பேய்க் கதை யைக் கேட்ட அவனதுநண்பன்பேய்அறைஞ் சதுபோல அடங்கி விட்டான்.



இந்தக் கதை கேட்ட எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. வெளிநாடு ஒன்றில் காட்டுக்குள் வேட்டையாடச் சென்ற ஒருவர் வழி தவறி வெகுதூரம் சென்று திரும்ப முடியாது தவித்துக் கொண் டிருந்தார். பசியும் பட்டினியுமாக அலைந்து திரிந்த அவர் மூன்று நாள் களுக்குப் பிறகு ஒரு வன இலாகா அதி காரியைக்கண்டதும்மிகவும்மகிழ்ச்சியில் ஐயாஉங்களைக்கண்டது எனக்கு மகிழ்ச் சியாக இருக்கின்றது, மூன்று நாள் களாக இந்த அடர்ந்த காட்டில் திக்குத் தெரியாது அலைகின்றேன், என்னைக் காப்பாற்றுங்கள் எனக்கூற அதிகாரி சொன்னார் நானும் உன்னைப்போல ஒரு வாரமாக இந்தக் காட்டில் திக்குத் தெரியாதுதான் அலைகிறேன்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 396

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:.................................................

பூரணமான தபால் விலாசம்: ..........................................

.................................................................

கையொப்பம்:.........................................................

= = = = = = = = = = = = = = = = = = = = =

### இடமிருந்து வலம்

1. சம்மதம் தெரிவித்தல்
4. கயிறு திரிக்க உதவும்
6. பெரியோன்
7. சமுத்திரம்
9. ஒரு கீரை வகை
11. மத்திய இடம்
12. ஒரு சமயலறை உபகரணம்
13. தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது
14. ஈரலிப்பான இடத்தில் வளரும்
16. அன்பு வைத்திருப்பவன்
18. கடுமையானது என்பதைக் குறிப்பது
19. பழுத்தல்
21. சூறாவளி
22. காப்பியம்

### மேலிருந்து கீழ்

1. பயமற்ற தன்மை
2. ஓர் இராசி
3. நாள்
4. கஷ்டம், சிரமத்தால் அடையும் உணர்வு
5. வதந்தி
8. கீழான செயல் செய்பவன்
10. உணவுக் குழாயில் நடக்கும் தொழிற்பாடு
12. பன்னிரண்டு அங்குலம் கொண்டது இது
13. தலை
15. சிங்கம்
16. எய்தவன் இருக்க இதை நோவதா?
17. சூரிய வெளிச்சம் உள்ள வேளை
18. அறிவு தருவது
20. பொருத்தமற்றது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 394 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)பிரதமர் (4)பாதி (6)கதி (7)அலரி (08)மாதர் (10)வரம்பு (11)தரித்திரம் (13) தரகு (15)கல்வி (16)அதிதி (18)கரி (19) யமன் (20) பயணம் (21)புயம்

### மேலிருந்து கீழ்

(1)பிரமாதம் (2)தகர்த்தல் (3)மதி (4)பாலம் (5)திரிபுரா(7)அரம் (9)தரி (10)வரகு (12)திரவியம் (14)ஆதி (15) கரிய (16) அன்பு (17)திடம் (18)கப

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 394 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப் பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

சிவகுருநாதன் சுபந்தன்
'அருளகம்'
பிரதான வீதி, இளவாலை.

**2 ஆம் பரிசு**

அ.அன்ரனி இனோச்
பெரிய முறிப்பு, பெரிய குஞ்சுக்குளம்,
மடு வீதி, மன்னார்.

**3 ஆம் பரிசு**

கு.யோசப்,
கொத்திகுளம் கிழக்கு ஒழுங்கை,
ஊர்காவற்றுறை.

**4 ஆம் பரிசு**

க.லொ.நிதர்சன்
இல. 61, மார்ட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

த.தனுசன்,
கைத்தொழிற்பேட்டை,
அச்சுவேலி.

**பாராட்டுப் பெறுவோர்**

கஸ்தூரி சற்குணராசா,
இல.87, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

எஸ்.சரவணபவன்,
இல. 269/10, கல்ரெக்ஸ் லேன்,
கண்டிவீதி, சாவகச்சேரி.

சி.பராந்தகன்,
இல. 51, கோவில் வீதி, குருமன்காடு,
வவுனியா.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.396 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (02.12.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.396 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.12.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி 394 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# ஐ.எஸ். தீவிரவாதத்துக்கு எதிராக அமெ. - ரஷ்ய கூட்டு செயற்பாடு

# கலிபா தலைநகர் மீது பிரான்ஸ் குண்டுமாரி



உலக நடப்பு

ரெங்கன்

**ஐ.** எஸ். தீவிரவாதிகளின் திடீர் தாக்குதல்களும் பல நாடுகளில் நிலப்பரப்புக்களை ஆக்கிரமித்திருப்பதும் உலகத் தலைவர்களைச் திக்குமுக்காடச் செய்துள்ளது. இதில் ஆச்சரியத்தை மேலும் அதிகரித்திருக்கும் விடயம் என்னவென்றால் உலக விவகாரங்களில் இரு துருவங்களாக இருந்து வரும் அமெரிக்க ரஷ்ய வல்லரசு நாடுகளையும்கூட அவர்கள் வைத்துப் பார்க்காமல் சீண்டியிருக்கிறார்கள்.

மத்திய கிழக்கில் ஏற்கனவே சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் தீவிரவாதிகளுக்கு எதிராக உள்ளூர் படைகளுக்கு ஆயுதம், ஆலோசனைகளை வழங்குவதுடன் வான் தாக்குதல்களை அமெரிக்கா நடத்திவரும் நிலையில் சிரியாவில் ரஷ்யாவும் அங்குள்ள அரசுக்கு ஆதரவாகவும் அங்குள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகளின் நிலைகள் மீதும் வான் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதத்துக்கு எதிராக பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகள் இப்போது தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றன. ஆனாலும் இவைகள் எல்லாவற்றுக்கும் 'பெப்பே' காட்டிக் கொண்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் ஊடுருவல்களையும் தாக்குதல்களையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள்.

இதன் உச்சமாக கடந்த வாரம் இறுதிவாக்கில் பிரான்ஸின் தலைநகர் பாரிஸிற்குள் ஊடுருவி 130 பேர் வரையிலானோரை அவர்கள் சுட் டுக்கொன்றிருப்பது உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. உலக மக்களின் வெறுப்பை அதிகரிக்கவும் செய்துள்ளது. இது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான உலக நாடுகளின் ஒருங்கிணைந்த செயற்பாடு ஒன்றுக்கு பிரான்ஸ் அழைப்பு விடும் நிலையை ஏற் படுத்தியுள்ளது.

நிலைமைகள் விரிவடைந்துபோகும் போக்கை பார்க்கையில் வல்லரசு நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசியாவில் உள்ள முக்கிய நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து பொதுத்திட்டம் வகுத்துச் செயற்பட்டால் மாத்திரமே ஐ.எஸ். தீவிரவாதம் மேலும் விரிவடையாமல் செய்யவும் கட்டுப்படுத்தவும் வழியேற்படும்.

உலக நாடுகள் குறிப்பாக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாடுகள் ஒன்றுபட்டு திட்டம் வகுத்துச் செயற்பட்டால் அல்லாமல் ஐ.எஸ். தீவிரவாதம் விரிவடைவதை நிறுத்துவது சுலபமன்று. பிரான்ஸ் தலைநகர் தாக்குதலை அடுத்து அமெரிக்காவைக் குறிவைக்கப் போவதாகவும் அந்த அமைப்பு அச்சுறுத்தியுள்ளது. உலகத் தலைவர்கள் பலரின் உயிர்களுக்கு அவர்கள் குறிவைத்துள்ளனர்.

**பிரான்ஸ் அதிபரின் அழைப்பு**

இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகளைத் தகர்த்தெறிவதற்கு உலக அளவிலான முயற்சிகள் வேண்டும் என்பதாக பிரான்ஸ் அதிபர் பிராங்கொய்ஸ் ஹொலான்டே அழைப்பு விடுத்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகருக்குச் சிறிது அப்பாலுள்ள வார்செயில்ஸ் நகரில் நடைபெற்ற பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் இணைப்புக் கூட்டத்தில் அதிபர் பேசும்போது, ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகளைத் தகர்த்தெறிய உலக நாடுகளின் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகின்றது, உலகம் இதுவரை கண்டிராத பயங்கரவாதிகளின் தொழிற்சாலையாக ஐ.எஸ். இருந்து வருகின்றது– என்றார்.

பரிஸ் நகரில் நடந்த தாக்குதலானது, சிரியாவில் திட்டமிடப்பட்டு, பெல்ஜியத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு பிரான்ஸில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார் பிரான்ஸ் அதிபர்.

பிரான்ஸ் அதிபரின் அறிவுறுத்தல்களை அடுத்து, சிரியாவிலுள்ள ரக்கா நகரில் காணப்படும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் அடையாளம் காணப்பட்ட முக்கிய நிலைகள் மீது பிரான்ஸ் விமானங்கள் கடும் குண்டுவீச்சுக்களை ஆரம்பித்திருந்த நிலையில் பிரான்ஸ் முழுவதும் பொலிஸார் அதிகாலை வேளையில் ஆரம்பித்த கடும் தேடுதலில் 23 பேர் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.



நாட்டின் பாதுகாப்புக்காகப் புலனாய்வுப் பிரிவுக்கு மேலும் அதிக பணம் ஒதுக்குவதாகவும் இராணுவத்தினர், பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகவும் ஹொலான்டே முடிவு செய்திருக்கிறார்.

சிரியாவில் உள்நாட்டுப் போர் ஒன்று நடைபெற்று வருவதால் அங்கு தரைப்படைகளைப் பயன்படுத்துவதில்லையென்று ஒபாமாவும் ஹொலான்டேயும் முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் தீர்வு ஒன்றைக் காண்பதில் ஒபாமாவையும் ரஷ்ய அதிபர் புடினையும் ஒன்றுபட்டுச் செயலாற்றுமாறு கேட்கப் போகிறார் எனவும் ஹொலான்டே கூறியுள்ளார்.

துருக்கியில் நடைபெற்ற ஜி–20 மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது புடின் ஒபாமாவுடன் 30 நிமிட நேரம் கலந்துரையாடினார். பின்னர் அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் தம்மோடு இணைந்து செயற்பட மேற்கத்திய தலைவர்களுக்கு விருப்பமில்லை என்று கூறினார்.

**ஆசிய தலைவர்களுடன் பராக் ஒபாமா பேச்சு**

மலேசியா மற்றும் பிலிப்பைன்சில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கடந்த செவ்வாய்க்கிழமை மணிலாவில் வந்து இறங்கினார். ஆசிய தலைவர்கள் பலருடன் அவர் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்த இருந்தார்.

ஆசிய நாடுகளுடனான கடல் பிராந்திய மற்றும் பொருளாதார வர்த்தக விவகாரங்கள் தொடர்பாகவே அவர் பேச்சுக்களை நடத்துவார் என்று கருதப்பட்ட போதிலும் பரிஸில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தியுள்ள தாக்குதல் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுப்பது தொடர்பான விடயங்கள் இந்தப் பேச்சுக்களில் அதிக முக்கியத்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது ஏற்பட்ட சூழ்நிலையில், ஐ.எஸ். தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா தலைமையேற்று அதனை முன்னகர்த்த வேண்டும் என்று உலக நாடுகளில் பலவும் எதிர்பார்க்கின்றன.

ஐ.எஸ். இயக்கம் இரண்டு வல்லரசுகளைச் சீண்டியுள்ளது. பிரான்ஸ் மற்றும் ரஷ்ய இலக்குகளை குறிவைத்துத் தாக்குதல் நடத்தியிருப்பதன் மூலம் ஐ.எஸ். (இஸ்லாமிய அரசு) அமைப்பு பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூலோபாயம் ஒன்றைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருப்பது புலனாகின்றது என்று வோஷிங்டன் போஸ்ட் எழுதியுள்ளது.

ஈராக்கிலும் சிரியாவிலும் புதிதாக நிறுவப்பட்டுள்ள கலிபா ஆட்சியின் மீது முழு அளவில் தாக்குதல் நடத்துவதில் தயக்கம் காட்டி வந்துள்ள இரண்டு இராணுவ வல்லரசுகளை தீவிரவாதிகள் சீண்டி கோபமுறச் செய்துள்ளார்கள் என்று அந்தப் பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

பழிவாங்கியே தீருவோம் என்று சூளுரைத்துள்ள பிரான்ஸ், சிரியாவிலுள்ள கலிபா தலைநகரான ரக்காவிலுள்ள ஐ.எஸ். நிலைகள் மீது கடும் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. இதே விதத்தில் ரஷ்ய விமானம் ஐ.எஸ். தீவிரவாதிகளால்தான் தகர்க்கப்பட்டது என்பதைக் கண்டறிந்துள்ள ரஷ்யாவும் தனது விமானத்தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தக்கூடும் என்று கருதப்படுகின்றது.

ஐ.எஸ். நிலைகள் மீது அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகள் விமானத் தாக்குதல்களை நடத்துவதனால் அந்தப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். எனவே விமானத் தாக்குதல் நடத்தும் நாடுகளுக்குள் தரைமார்க்கமாக ஊடுருவி அங்குள்ள பொதுமக்களைக் கொன்று தீர்ப்போம் என்று ஐ.எஸ். தலைவர்களும் பதிலுக்குச் சூளுரைத்திருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கில் இணையும் இளைஞர்கள் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் தங்கள் கலிபா அரசு (இஸ்லாமிய ஏகாதிபத்தியம்) ஒன்றை சிரியாவிலும் ஈராக்கிலும் தங்களின் ஆதிக்கத்திலுள்ள பகுதியில் நிறுவியிருப்பதாக அறிவித்ததில் இருந்து வேறு நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கவர்ந்திழுத்துள்ளார்கள்.

அவர்களின் கொள்கை தத்துவங்களின்படி, களத்தில் தமக்கு எதிராகப் போரிடுபவர்களை கலிபா அரசு இறுதியாக வெற்றியீட்டும். அதன் பரப்புரை சஞ்சிகைக்கு தாபிக் என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிப்பிலும் ஒரேவித எதிர்வுகூறல் இடம்பெற்றிருக்கிறது. "தீப்பொறியானது இங்கு ஈராக்கில் மூட்டப்பட்டுள்ளது. அதன் வெப்பம் தொடர்ந்து அதிகரிக்கும். அல்லாஹ் அனுமதிப்பாரானால் தாபிக் எதிரிகளின் சிலுவைப்படைகள் எரியும் வரை தொடரும்" என்று அது குறிப்பிடுகின்றது அந்தச் சஞ்சிகை.

கடந்த 15 மாதங்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அமெரிக்க அதிகாரிகள் கணிக்கிறார்கள். சமீப காலத்தில் குர்திஷ் மற்றும் ஈராக்கிய படைகளின் தீவிர நடவடிக்கைகள் காரணமாக ஐ.எஸ். எல்லைகள் மெதுவாகக் குறுகி வருகின்றன. அமெரிக்க விமானத் தாக்குதல்களும் இதற்குக் காரணமாகும். சில முக்கிய நகரங்களும் ஐ.எஸ். படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. வெளிநாட்டு இளைஞர்களைக் கவர்வதற்காக இப்போது சில பல நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அதில் பரிஸ் சம்பவமும் ஒன்றாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.




# ஒரு நாள் இரவில்

மலையாளத்தில் பெரும் வெற்றிபெற்ற, 'சட்டர்' படத்தின் மறுபதிப்புத்தான் 'ஒரு நாள் இரவில்' படம், படத்தொகுப்பாளர் ஆண்டனி இயக்கத்தில் உருவான முதல் படம், 'பாகுபலி'க்குப் பிறகு சத்யராஜ் நடிப்பில் வெளியாகும் படம் என்ற காரணங்களே படத்தின் மீதான எதிர்பார்ப்பை எகிற வைத்துவிட்டன.

கதை: பதின்ம வயது மகளின் ஒழுக்கத்தில் கறார் காட்டும் அப்பா, ஒரு கட்டத்தில் தானே அந்த ஒழுக்கக்கேடான செயலில் இறங்குகிறார். அது எது? ஏன்? அதற்குப் பிறகு என்ன ஆகிறது? என்பது மீதிக் கதை.

மலையாளத்தில் உருவான 'சட்டர்' படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்று, விருதும் வென்றிருக்கிறது. அந்தப் படத்தை தமிழில் உருவாக்கி இயக்குநராக பதவி உயர்வு பெற்றிருக்கும் தொகுப்பாளர் ஆண்டனிக்குத் தாராளமாக ஒரு பாராட்டுப் பத்திரம் கொடுக்கலாம்.

விறுவிறுப்புப் படத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் தன் தோள்களில் சுமந்து மீண்டும் தன்னை நிரூபித்திருக்கிறார் சத்யராஜ்.

கறாரான அப்பா, கண்டிப்பான கணவன், சின்னதாய் தோன்றும் சபல எண்ணத்திலும் மோகம் காட்டாத முகம், பதற்றம், பரிதவிப்பு, குழப்பம், பயம், அழுகை, சந்தேகம், யோசனை என அனைத்து உணர்வுகளையும் கண்முன் நிறுத்துகிறார். கதாபாத்திரத்தின் தேவையறிந்து அதை உணர்வுபூர்வமாக நடித்துக் கொடுத்திருக்கிறார்.

பாசாங்கு இல்லாத இயல்பான நடிப்பில் அனு மோல் ஈர்க்கிறார். யூகி சேது, ஓட்டோ சாரதியாக வரும் அறிமுக நடிகர் வருண், சத்யராஜ் மகளாக நடித்திருக்கும் தீக்ஷிதா கோத்தாரி, சத்யராஜ் மனைவியாக நடித்த கல்யாணி நட்ராஜன் ஆகியோரும்கூடப் பொருத்தமான தேர்வுகள்.

"ரெண்டு படிப்பு இருக்கு. பட்டப் படிப்பு... பட்டபின் படிப்பு" என்ற யூகி சேதுவின் வசனங்கள் இயல்பாய் வசீகரிக்கின்றன.

எம்.எஸ்.பிரபுவின் ஒளிப்பதிவும், நவீனின் இசையும் படத்துக்கு கூடுதல் பலம். பல படங்களுக்கு கத்திரி போடும் ஆண்டனி அந்த ஒரு பாட்டுக்கும் யோசிக்காமல் கத்திரி போட்டிருக்கலாம்.

ஜாய் மேத்யூவின் கதையை ஆண்டனியின் திரைக்கதை ஆக்கிய விதத்தில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி இருக்கவேண்டும். சத்யராஜ் புரிதலில் உள்ள பிரச்சினை, நண்பர்களின் எதிர்வினைகள் தெரிந்தும் அது குறித்த ஒரு சரியான முடிவு இல்லாதது குறை. அனு மோல் பின்னணி தெரிந்த பிறகு எந்த பதற்றமும் இல்லாமல், அலட்டாமல் சாதாரணமாக யூகி சேது இருப்பதும் நெருடல்.

அந்தச் சிக்கலான சூழ்நிலையை சத்யராஜ் எப்படிக் கடந்து வரப் போகிறார்? என்பதுதான் திரைக்கதையின் மிகப் பெரிய உத்தி. ஆனால், அந்த விடயத்தில் படம் எந்தப் பதற்றத்தையும் பார்வையாளர்களுக்குக் கடத்தவில்லை. இதைத் தவிர்த்துப் பார்த்தால் 'ஒரு நாள் இரவில்' கட்டாயம் ஒரு முறை பார்க்க வேண்டிய படம்.

# கண்ணீரில் எரிகின்ற தீபங்கள்



**க.விஜயன்**
*பூதன்வயல் சந்தி.*

கார்த்திகை வருகின்றது
தீபங்கள்
கண்ணீரில் எரிகின்றன
முடிவுறும் வாழ்க்கையை
முடிந்தவரை
முன்னேற்றி வைக்க
முயன்றவரை
இயன்றவரை - நீ
இதயத்தில் வை
இமயத்தில் வை
நெய்திரி ஏற்றி
நெஞ்சுருகி நின்றும்
மைத்திரி மனதும்
மாறவில்லை
உறவுகள், உணர்வுகள்
உறங்கும் நிலை - இனி
பனிமலை உருகிடும்
பருவநிலை
புனர்வாழ்வும் இல்லை
பிணை வாழ்வு தொல்லை
பிணவாழ்வு எங்கள்
சிறைவாழ்வு
தலையை தலையில் வைத்து
வாலை சிறையில் வைத்து
தரும நெறிமுறைகள்
இதுதானா - சட்டம்
இருட்டறைதான்
சரிதானா, சரிதானா
தமிழன் விழி தோண்டி
துயிலும் குழி தோண்டி
உயிரின் மொழி தீண்டி
முடிசூடும் இனவாதம்
மலை மீதில் ஏறி
மலை தாண்டும் ஜாதி
மனம் மாறும் என்ற
நிலைமாற்று
ஈன்றவளை விட
உரிமைகள் பெரிதென
உயிர்விடும் கணங்களில்
உதிர்ந்தமொழி
மாண்டவர் இல்லை - இவர்கள்
உயிர்ந்தெழும் ஆண்டவர்கள்
வீழ்ந்தவர்கள் இல்லை
இவர்கள் - எங்கள்
மனவெளி உலகினில்
வாழ்பவர்கள்
தீபங்கள் ஏற்றி
தொழுது விடு - உங்கள்
துயரங்கள் தீரும்
அழுது விடு



## சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்

ஈழமக்கள் இருப்புக்காக
எருவாய் போனவர்கள்
தேச மனிதர் வாழ்வுக்காக
தீயாய் எரிந்தவர்கள்
மறவர்கள் பிறந்த நிலத்தில்
மகத்துவம் புரிந்தவர்கள்
புல்லர் சதி அறுக்க
மண்ணில் புதைந்தவர்கள்
புனிதமாகித் தொடர்ந்து
விதையாய் ஆனவர்கள்
பூமிப் பந்தில் - பெரும்
புரட்சி செய்தவர்கள்
ஈழத்தின் காவலர்கள்
இதயவறை தெய்வங்கள்
விடம் வேங்கைகள்
வடம் பிடித்த வல்லுநர்கள்
புகழ்நாடாப் பொக்கிசங்கள்
பூவுலகின் இரத்தினங்கள்
நான்கெழுத்து நாயகர்கள்
நானிலத்து நீதிமான்கள்
கார்த்திகை இருபத்து ஏழிலே
கதாப் பாத்திரங்கள்
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்
செம்மலர்களே துயிலுங்கள்!

- புலோலியூர் காவியா

சு.சிவாஜினி

# அக்கா! உங்களை நினைக்கையில் நெஞ்சம் கனக்கிறது



பெண் என்றால் பூவைப் போன்றவள். அலங்காரப்பாவை, தாரமாவதும், தாய்மை அடைவதும்தான் நியதி என்று ஒரு பழைய முறைமையை வகுத்து எமை அதற்குள் சிறைப்பிடித்து இப்படியே வாழ்வதுதான் பெண்களான உமது கடமை என்று இருந்த சமூகக் கட்டமைப்பை உடைத்து பெண்களாலும் அனைத்தையும் சாதிக்க முடியும் என்ற நிலையை உருவாக்கி எமை சகல பணிகளிலும் சாதனை படைக்க முடியும் என உருவாக்கியவர் தமிழினி அக்கா.

உண்மையில் சமூக அடக்கு முறை. மூட நம்பிக்கைகள் இவற்றுக்குள் ஒரு காலத்தில் முடங்கி இருந்த பெண்களில் நானும் ஒருத்தி. தமிழீழ போராட்ட வாழ்வுக்குள் நான் கால் பதிக்கக் காரணமாய் இருந்தவர் தமிழினி அக்கா. அக்காவின் உறுதியான மேடைப் பேச்சு, நிமிர்ந்த நேர் கொண்ட பார்வை, யாரைக் கண்டும் பயப்படாத துணிவு அனைத்தும் என்னையும் ஒரு காலத்தில் மாற்றியது.

வன்னியில் இருந்த காலப் பகுதியில் பெண்களைக் கண்டாலே எட்ட நிண்டுதான் ஆண்கள் கதைப்பார்கள். அப்படி ஒரு பயம் ஆண்களுக்கு. அதிலும் விடுதலைப் புலிகளின் பெண் புலிகள் பொல்லாத பெட்டையள் என்று எத்தனையோ பேரின் வாய்கள் முணுமுணுக்கும். அந்தளவுக்கு பெண்களின் வீரம். ஒழுக்கம் அனைத்தும் திறம்பட இருந்தது. அவற்றுக்குக் காரணம் நல்ல தலைமை.

தமிழினி அக்கா என்றால் அவர் போராட்ட வாழ்வுக்கு மட் டும் பொறுப்பானவர் அல்லர். அடி மட்டச் சமூக பெண்களின் பிரச்சினை தொடர்பில் கூடிய அக்கறை கொண்டு கிராமங்கள் தோறும் ஒவ்வொரு பெண் போராளிகளை அனுப்பி குழுக்கள் அமைத்து பெண்களின் பிரச்சினைக்குச் சரியான தீர்வைப் பெற்றுக் கொடுத்தார். குறிப்பாகக் கணவனை இழந்த பெண்களைச் சிறப்பான முறையில் கவனித்து வந்தார்.

மாவீரர் காப்பகத்துக்கு ஊடாகப் பெண் போராளிகளை அனுப்பி, கணவனை இழந்த பெண்மணிகளின் பல துயரங்களைப் போக்கினார். அக்காவினூடாக எனக்கும் போராளி சார்பில் மாவீரர் குடும்ப நிலவரம் தொடர்பான பணி கிடைத்தது. உண்மையில் அக்கா தந்த பணியூடாக ஒவ்வொரு கணவனை இழந்த பெண்களும் எப்படியான நிலையில் சமூகத்தில் வாழ்கின்றார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் சமூகத்தில் பட்ட வேதனைகள் சொல்லப்பட முடியாதவைகள்.

அக்கா அடிக்கடி சொல்லுவா, பெண்கள் ஆண்களைக் கண்டால் கீழே பார்த்து நடக்கக்கூடாது. எப்பவும் நேருக்கு நேர் பார்த்துக் கதையுங்கோ. வளைந்து நெளிந்து பயப்படக் கூடாது.


அவர்களின் துயரங்களில் அக்கா கொண்ட அக்கறை அளப்பெரியது. எந்த நேரம் எண்டாலும் அக்காவின் பணிகளில் சோர்வு இருக்காது. அக்காவிடம் இருந்து எவ்வளவோ கற்றுள்ளேன். எந்த நேரம் அவரைச் சந்திக்கப் போனாலும் பொறுப்பாளரை எப்படி அனுமதி எடுக்காமல் சந்திப்பது என்று தயங்கினாலும் "பரவாயில்லை பூவரசி, வாங்கோ! என்ன பிரச்சினை? வேலை எல்லாம் எப்பிடிப்போகுது?" என்று அவரே கதை யைத் தொடக்கிவிடுவார். நான் போன விடயத்தை குறிப்பால் அறிந்துவிடுவார்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, போராட்ட வாழ்விலும் சரி, சமூக சேவைகளிலும் சரி இன்று நான் எது வந்தாலும் கலங்கா மனங்கொண்டு வாழ்கின்றேன் என்றால் அதற்குக் காரணம் அக்காதான். அக்காவிடம் இருந்து கற்ற பாடங்கள் இன்றும் நான் சமூக சேவைகளைச் செய்ய உந்து சக்தியாக இருக்கின்றது.

அக்கா அடிக்கடி சொல்லுவா, பெண்கள் ஆண்களைக் கண்டால் கீழே பார்த்து நடக்கக்கூடாது. எப்பவும் நேருக்கு நேர் பார்த்துக் கதையுங்கோ. வளைந்து நெளிந்து பயப்படக் கூடாது. உண்மையில் எங்களுக்குப் பொறுப்பாளராக இருந்து தன் நம்பிக்கை கொண்டவர்களாக எம்மை உருவாக்கிய அக்காவை என்றும் மறக்க முடியாது.

ஒரு காலம் பெண்கள் தலை நிமிர்வோடு நடுச் சாமத்திலும் தனியாகச் சென்று வந்தோம். இன்று பகலில்கூட எமக்குப் பாதுகாப்பு இல்லை. விடுதலைப் போராட்ட காலங்களில் எங்கட பார்வையிலேயே அட்டூழியம் செய்யும் ஆண்கள் பயப்படுவார்கள். அப்படி ஒரு மதிப்பு பெண்களுக்கு இருந்தது. அந்தக் காலத்தில் இருந்த தலைமையின் பெறுமதி இப்ப எங்கட சனங்களுக்கு விளங்குது. ஓர் ஆண்மகன் நாங்கள் தனிய வந்தால்கூட கிட்டவும் வரமாட்டான். இப்ப பிறந்த குழந்தையைக்கூட பாலியல் கொடுமை புரியும் நிலைமையை யாரிடம் சொல்லி அழுவது?

யார் யாராக இருந்தாலும், அவர்களின் அமைப்பில் இருந்தவர்கள் என்றாலும் எமது சுயகௌரவத்தோடும் ஒழுக்கத்தோடும் இருக்க வேண்டும். எது அழிந்தாலும் நாங்கள் எங்கட பொறுப்பாளர்களிடம் கற்ற பாடங்கள் எமக்கு சாகும் வரை வழிகாட்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. அக்கா நீங்கள் எங்களை விட்டுப் போகவில்லை. என்றும் எமது வாழ்வோடு ஒன்றியிருக்கிறீர்கள். அது என்றும் அழியாது. நான் பத்திரிகைக்கு ஆக்கங்கள் எழுதத் தொடங்கியபோது சு.சி.தமிழினி என்று தான் ஆரம்பித்தேன். அப்படி அக்கா வின் பெயரில் எனக்கு விருப்பம். எழுதாமல் விட்டாலும் அக்கா சொல்லுவார். பூவரசி எழுதாம விடவேண்டாம், தொடர்ந்து எழுதுங்கோ, ஒரு நாள் பெரிய ஆளா வருவீங்கள் என்று. அக்காவை இன்று நினைக்கிற போது நெஞ்சு கனக்கின்றது. உங்கட நிமிர்வும் மேடைப் பேச்சும் கண்முன்னே நிற்கிறது.



## விருவியுங்கள்

மேகங்கள் மோதிக்கொண்ட
பெருவெள்ளம் அது!
சிலவை வற்றியும், தொலைந்தும் விட்டவை
பல குளத்தையே பற்றிவிட்டன

வாய்க்கால்களும் வாய்வறண்டு போக
வயற்காட்டு வரம்புகள் இன்னும்
வானத்தையே பார்த்தபடி
பச்சைப் பயிர்கள் அன்று என்ன பாவம் செய்ததுவோ!
பட்டினி கிடந்தே பாழாய் போகிறன

இன்னும் தண்ணீர் திறந்ததாய் இல்லை!
அழுது வடித்தே பாய்கிறது கண்ணீர்
வாய்க்கால் நீர்களாய்!
என்றேனும் ஒரு நாள் கண்ணீர்கள் கூடி
பெரும்படை குளத்தையே உடைக்கும்

பா.யுகந்தன்
நெடுந்தீவு




# இரண்டே செற்களில் ஆட்டத்தை வெற்றியுடன் முடிக்கும் நடால்

ரென்னிஸ் தொடர்களிலெல்லாம் விறுவிறுப்பான தொடர் என்று கருதப்படும் தொடர் தற்பொழுது நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. அதுதான் வருட இறுதியில் நடைபெறும் முன்னணி வீரர்களின் தொடர். சர்வதேச ரென்னிஸ்
தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரவீராங்களைகளுக்கு மட்டுமாக வருட இறுதிப்பகுதியில் தொடர்
ஒன்று நடத்தப்படுவதுண்டு. பெண்களுக்கான தொடர் ஏற்கனவே முடிந்துவிட்ட நிலையில் ஆண்களுக்கான தொடரை
நடத்தி வருகிறது இங்கிலாந்து.
விம்பிள்டன், அமெரிக்க ரென்னிஸ் தொடர், பிரான்ஸ் ரென்னிஸ் தொடர், கனடா ரென்னிஸ் தொடர் என்று பல ரென்னிஸ்
தொடர்கள் வருடம் முழுவதும் நடைபெற்றாலும் இந்த முன்னணி வீரர்களின் தொடருக்கு என்று தனி மரியாதையும்
அந்தஸ்தும் உள்ளன. இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று தெரிந்தெடுக்கப்பட்ட திறமையான வீரர்கள் மட்டும்
விளையாடுகின்றமை. மற்றொன்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தால் நடத்தப்படும் ஒரேயொரு தொடர்
இதுதான்.
இந்தத் தொடருக்கு எட்டாவது வீரராக தகுதிபெற்றவர்தான் ரபேல் நடால். சமீபகாலமாக தடுமாறி
வந்ததன் காரணத்தால் பெடரர், ஜோகோவிக், வாவ்ரிங்கா, முர்ரே போன்ற வீரர்களளவு நடால்
எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் இவர் ஓர் அச்சுறுத்தலான வீரர் என்பது அனைவரும்
அறிந்ததே. இந்த வருடத்தில் எந்தவொரு கிண்ணத்தையும் கைப்பற்றாத குறையை
அதிமுக்கியத்துவம் வாய்ந்த முன்னணி வீரர்களின் தொடரைக் கைப்பற்றி நிவர்த்தி
முனைப்புக் காட்டுகிறார். நடாலுக்கே உரிய போராட்ட குணமும் சலிப்பற்ற செய்ய கடும்
தத் தொடரில் சிறப்பாக பிரதிபலிக்கப்படுகிறது. குறிப்பாக வழக்கமான தனது தன்மையும் இந்
செற்களில் ஆட்டத்தை முடித்து வைக்கின்றார். இதன்மூலம் தான் பாணியில் இரண்டே
சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார். போர்முக்குத் திரும்புவதை
இந்தத் தொடரின் முதல் ஆட்டத்தில் வாவ்ரிங்காவை வீழ்த்தியிருந்தார் நடால். இரண்டாவது ஆட்டத்தில்
முர்ரேயைப் பந்தாடினார். முர்ரே- நடால் ஆட்டத்தில் முதல் செற்றில் முர்ரே ஓரளவு போராடினாலும்
இரண்டாவது செற்றில் அவரால் நடாலின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அப்படியே
சரணடைந்தார். இத்தனைக்கும் முர்ரே அவ் வளவு இலகுவான வீரர் அல்ல. ஜோகோவிக்,
பெடரர் போன்று போராட்ட குணத்தை அபாரமாக வெளிப்படுத்தக்கூடியவர்
அவர். முர்ரேயை ஊதித்தள்ளியதன் பின்னர்
அனைவரதும் பார்வை நடாலின் பக்கம் மீண்டும்
நீண்ட இடைவெளியின் பின்னர் திரும்பியுள்ளது. இதே
போர்மில் நடால் தொடருவராக இருந்தால் நிச்சயமாக
ஏனைய வீரர்களின் கிண்ணக்கனவு தகர்க்கப்படும்.
'நடால் ஒரு அடிபட்ட புலி இவர் மீண்டும் போர்முக்குத் திரும்பினால்
எந்த வீரரும் அவர் முன்னால் போராட முடியாது. அவரின் ஆக்ரோசத்துக்கும் விடாத போராட்ட குணத்துக்கும் முன்னால்
ஈடுகொடுக்கக்கூடிய வீரர்கள் இல்லை.' என்று ஏற்கனவே எச்சரித்திருந்த பெடரரின் வார்த்தைகள் தற்பொழுது பலிக்க ஆரம்பித்தி
ருக்கின்றன. மொத்தத்தில் முன்னணி வீரர்களுள் முதல் வீரராக நடால் மாறுவாரா என்பதே தற்பொழுது உள்ள எதிர்பார்ப்பு.

---

# வீரர்களை அணியில் தொடரவைப்பதில் டோனியின் வழித்தோன்றலாகக் கோக்லி



இவ்வாறு சகாவிடம் அபரீதமான திறமைகளை
பார்க்கும் கோக்லி சமீபகாலமாக தடுமா றிவரும்
தவானுக்கும் தனது ஆதரவை வழங்கியுள்ளதுடன்
தவானிடத்தில் பொறுமை காக்க வேண்டும் என்று
அறிவுரையும் கூறுகின்றார். சகாவிடத்தில் உள்ள
நியாயங்களைசற்று பொறுமையாக எடுத்துரைத்த
கோக்லி தவானை நியாயப்படுத்துவதில் சிறிது
காட்டமாகப் பதிலளிக்கிறார். 'தவானிடம்
என்ன குறையை கண்டீர்கள். பங் களா
தேஷிற்கு எதிரான டெஸ்டில் சதமெடுத்
தார். பின்னர் இலங்கைக்கு எதிரான
டெஸ்டில் சதமெடுத்தார். தற்பொழுது
தென்னாபிரிக்காவுக்கு எதிரான
முதல் டெஸ்டில் சிறிது தடுமாறி
னார். இரண்டு இன்னிங்ஸில்
தடுமாறியதை வைத்து ஒருவரை
எப்படி கணித்துவிட முடியும்.
தென்னாபிரிக்காவுக்கு எதி
ரான இரண்டாவது டெஸ்டில்
மழை குறுக்கிடும் பொழுது
45 ஓட்டங்களுடன் ஆட்ட
மிழக்காது களத்தில் இருந்
தார். மழை குறுக்கிடாமல்
இருந்திருந்தால் இதுவே
அவ ரது இரட்டைச் சதமா
கவோ அல்லது சதமா
கவோ அமைந்திருக்க
லாம் அல்லவா!.' என
தனது வாதத்தை முன்
வைக்கிறார். இப்படி
எந்தவொரு விடயத்தி
லும் சிறந்த திட்டத்து
டனும் துல்லியத்துட
னும் முதிர்ச்சித் தன்
மையுடனும் செயற்படும் கோக்லி, எதற்காக ஆஸ்திரேலிய மண்ணில் வைத்து ஆஸ்தி
ரேலியாவுக்கு எதிராகவே சதமெடுத்த லோகேஸ் ராகுலை புறந்தள்ளியுள்ளார் என்பதும்
ஒரு டெஸ்டில் சராசரியாக இரண்டு அல்லது மூன்று இலக்குகளைக் கைப்பற்றும்
மிர்சாவை அணியில் நீடிக்கச் செய்துகொண்டு ஏன் ஓயாவை புறந்தள்ளியுள்ளார்
என்பதும் புரியாத புதிராக உள்ளன.

வீரர்கள் எவ்வளவு தடு
மாறினாலும் அவர்களை
பாதுகாக்கும் கொள்கையில் இந்திய
அணியின் ஒருநாள், ரி-20 ஆட்டங்
களுக்கான தலைவராக இருக்கும் டோனியின்
வழிதோன்றலாகத்திகழ்கின்றார் டெஸ்ட் அணியின்
தலைவரான விராட் கோக்லி.
இந்திய டெஸ்ட் அணியில் இருவரது இடம் தொடர்ந்தும்
கேள்விக்குறியாக உள்ளது. ஒருவர் சகா மற்றொருவர்
தவான். டோனியின் ஓய்வினை அடுத்து அடுத்த இலக்குக்
காப் பாளர் யார்? என்ற கேள்வி அனைவருக்கும் இருந்தது.
பலரும் நமன் ஓயா இலக்குக் காப்பாளராக நியமிக்கப்பட
வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதினார்கள். ஏனெனில் அவர்
இந்தியாவின் பிரபலமான உள்ளூர் தொடரான ராஞ்சியில்
தனது நிதான ஆட்டத்தால் அனைவரதும் பார்வையை
வருடாவருடம் திருப்பிக் கொண்டிருப்பவர். ஆனால் சகாவை
தனது தெரிவாக முன்வைத்தார் கோக்லி. அன்று முதல் தற்
பொழுது நடைபெற்றுவரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான
தொடர்வரை சகா இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் என்ற
அந்தஸ்தில் தொடர்கிறார். ஆனால் சகாவை தொடர்ந்தும் அணியில்
நீடிக்கச் செய்வதில் பலரும் கோக்லிமீது விமர்சனங்களை
முன்வைத்து வந்தனர். நீண்டகாலமாக இந்த விமர்சனங்களுக்கு
பதிலளிக்காத கோக்லி, தென்னாபிரிக்காவுக்கு எதிரான
இரண்டாவது டெஸ்டின் ஊடகவியலாளர் சந்திப்பில் 'சகாவிடம்
அபரிதமான திறமை உண்டு. எந்தவொரு அணிக்கும் எதிராக
அச்சப்படாத தன்மையே அவரது பலம். எதிர்காலத்தில் டோனியின்
இடம் சகாவால் முழுமையடையும்' என்று பதிலளித்திருந்தார்.
இதன்மூலம் சகாவின் இடத்தில் வேறு யாரையும் வைத்துப்
பார்க்கப்போவதில்லை என்றும் அவர் சொல்லாமல் சொல்
லியுள்ளார்.